கல்கி



KALKI

8.11.1962 30 காசு



சட்டை, வேட்டி, சேலை, ரவிக்கை, துண்டு, சிறுவரின் உடைகள் ... நம் வீட்டுத் துணிகள் எல்லாவற்றுக்கும் ஏற்ற சலவை ... வீட்டிலேயே ஸர்ப் சலவை ... வெகு இலகுவாக வெள்ளைவெளேரென்று துப்புரவாக்கும் சலவை! எல்லாம் ஸர்ப் செயல், அதன் அளவுகடந்த ஆற்றல்! இன்றே செய்வீர் ஸர்ப் சலவை ... இல்லத்திற்கான இணையற்ற சலவை!

ஸர்ப் சலவை: வெள்ளைவெளேர் சலவை!

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

SU. 24-X52 TM

சுபகிருது. கார்த்திகை 3 — கல்கி — நவம்பர் 18உ.1962

பொருளடக்கம்

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே



மலர் 22

தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

இதழ் 16

கொள்கை மாற வேண்டும்

'தவறுகள் செய்வது மனிதத் தன்மை; மன்னிப்பது தெய்வத் தன்மை' என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்கள்.

சென்ற வாரம் தில்லி மக்கள் சபையில் பேசிய நேருஜி எதிராளியின் பலத்தைத் தாம் சரியாகக் கணிக்காததும், போதிய அளவு தேசப் பாதுகாப்புக்குரிய நடவடிக்கைகள் எடுக்காததும் தவறுதான் என்று ஒப்புக் கொண்டார். இப்படிப் பல குறைகளைச் சொல்லிக்கொண்டு வந்தபோது, மக்கள் சபை அங்கத்தினர்களின் உள்ளங்கள் நெகிழ்ந்தன. "என்ன இருந்தாலும் நம் நேரு அல்லவா!" என்று எண்ணினர்.

என்றாலும் அவர் மேற்கொண்டு சொல்லிச் சென்ற விஷயங்கள் மக்கள் உள்ளங்களில் போதிய அளவு பதியவில்லை; பிரதமர் அடுக்கிக் கொண்டே போன நிர்வாகத் தவறுகள் யாவும், சென்ற காலத்தில் கடைப்பிடித்து வந்த கொள்கைத் தவறுகளினால் எழுந்தவையே! எனினும் பிரதமர் தமது கொள்கையை விடப் போவதில்லை என்று கூறியதைக் கேட்ட மக்கள் சபை அங்கத்தினர்களும், அப்பேச்சைப் படித்த கோடிக்கணக்கான பாரத மக்களும் தாங்கள் முதலில் பெற்ற ஆறுதலை இழந்து, வருந்தப்படுகிறார்கள்.

சீனாவின் கடும் ஆக்கிரமிப்பு ஏற்பட்டுள்ள இந்த நிலையிலும் தமது கூட்டுச் சேராக் கொள்கையை அடியோடு விடப் போவதில்லை என்று கூறியிருக்கிறார் நேருஜி.

அத்துடன் நின்றிருந்தாலும் மக்கள் பொறுத்துக் கொண்டிருப்பார்கள். அந்தக் கொள்கையின் அடிப்படையில் ருஷ்யாவினிடமிருந்தும் ஆயுத தளவாட உதவி கோரியிருப்பதாகக் கூறுகிறார். என்னே பேதைமை!

சீனாவின் ஆக்கிரமிப்பு சென்ற ஐந்தாண்டுகளுக்கு முன்பிருந்தே நடைபெற்று வருகிறது. ருஷ்யா இதுவரை ஒரு வார்த்தையாகிலும் கூறிச் சீனாவைக் கண்டிக்கவில்லை. அதற்குப் பதில் ருஷ்ய ஆயுதங்களோடுதான் சீன சிப்பாய்கள் சண்டையிட்டு வருவதாகத் தெரிகிறது! இந் நிலையிலும் சீனாவை எதிர்க்க ருஷ்யாவையே மீண்டும் ராணுவ தளவாட உதவி கோரியிருப்பது விந்தையாக இல்லையா?

நமக்கு உதவும் மேலை நாட்டு அரசாங்கங்களோ ருஷ்யாவிடம் நாம் ராணுவ உதவி கோருவதையோ, கூட்டுச் சேராக் கொள்கையையோ ஆட்சேபிக்கவில்லை என்று பெருமிதத்தோடு சொல்லிக் கொள்கிறார் நேருஜி. அவர்கள் ஆட்சேபம் வாய்ச் சொல்லிலோ எழுத்திலோ வெளிப்படுமா, என்ன? மனோபாவத்தில், நடைமுறையில் வெளிப்படும். பாரதத்துக்கு உதவ வேண்டும் என்று ஆர்வத்தோடு இருப்பவர்கள் நாளை அரைகுறையாக உதவுவார்கள். முடிவில் நஷ்டப்படப் போகிறவர்கள் இந்தியர்கள்தான்.

ஸ்ரீ கிருஷ்ணமேனன் பாரத நாட்டு வெளிநாட்டுக் கொள்கையை நன்றாக விளக்குபவர் என்று பிரதமர் கூறி வந்தார். அதில் யாருக்குமே சந்தேகமிருக்கவில்லை. அவரை நமது வெளிநாட்டுக் கொள்கையின் உருவம் என்றே இந் நாட்டு மக்களும் வெளிநாட்டு மக்களும் மதித்தார்கள். ஸ்ரீ கிருஷ்ண மேனனை மக்கள் கண்டித்தார்கள் என்றபோது பிரதமரது வெளிநாட்டுக் கொள்கையைத்தான் கண்டித்தார்கள் என்பதைப் பிரதமர் உணர வேண்டும். ஆகவே, ஸ்ரீ கிருஷ்ணமேனன் என்ற வெறும் மனிதரை மட்டும் வெளியே அனுப்பிப் புண்ணியமில்லை. அவருடன், இதுவரை பயன்தராத தமது வெளிநாட்டுக் கொள்கையையும் நேரு அவர்கள் விரட்டியடித்தால்தான் மக்கள் மனம் நிம்மதியடையும்.

வெற்றி நமக்கு! கொட்டுக முரசு!

சீனர்களின் வஞ்சனையை நினைக்கும் போது நெஞ்சம் பதைக்கின்ற அதே நேரத்தில் வடக்கெல்லையில் நமது சிப்பாய்களின் வீரதீரச் செயல்களைப் பற்றிச் செவியுற்று மெய்சிலிர்க்கவும் செய்கிறோம்.

ஸ்ரீஜாப் என்னுமிடத்தில் இருந்த இந்திய முகாமைச் சீனர்கள் பீரங்கிகளாலும் இயந்திரத் துப்பாக்கிகளாலும் தாக்கியபோது அதிலிருந்த ரேடியோக் கருவி பாழாகிவிட்டது. இதனால் தலைமைக் காரியாலயத்துக்கும் அந்த முகாமுக்கும் இடையே இருந்து வந்த தொடர்பு அற்றுப் போய் விட்டது. ஸ்ரீஜாப் முகாமில் இருந்தோரின் கதி என்ன என்பது அதிகாரிகளுக்குத் தெரியவில்லை. அந்தச் சமயத்தில் ரபிலால் தாபா என்ற ராணுவ வீரர் அந்த முகாமுக்குத் தாம் சென்று வருவதாகக் கூறிவிட்டுத் தன்னந் தனியராக ஒரு சிறு படகில் கிளம்பினார்.

ஸ்ரீஜாப் முகாமை நோக்கிச் சென்று கொண்டிருந்த அவர், துடுப்பு வலித்த தமது கரங்கள் சற்றேனும் களைத்துச் சோர அனுமதிக்கவில்லை. ஆயிற்று; இன்னும் அரைமைல் தூரம் சென்றால் நண்பர்கள் என்ன ஆனார்கள் என்பதை ஒருவாறு அறிந்து கொண்டு விடலாம். திடீரென்று 'டுமீல் டுமீல்' என்ற சத்தம் எழுந்து அந்த மலைப் பிராந்தியத்தில் எதிரொலித்தது. ஆற்றின் இரு கரைகளிலிருந்தும் குண்டுகள் தம்மை நோக்கிப் பாய்ந்து வருவதைக் கண்டார் தாபா. மூன்று திசைகளிலிருந்து அவரைச் சீனர்கள் குறி பார்த்துத் தாக்கிக் கொண்டிருந்தார்கள். 'ஒருவனை ஒழிக்க இத்தனை பலமான ஏற்பாடா? நடப்பது நடக்கட்டும்!' என்று அச்சமின்றித் தாபா தமது படகில் முன்னேறினார். அவரது அசாதாரணமான வீரமே அவருக்குத் துணை நின்றது. படகுதான் சேதமடைந்ததே ஒழிய அவர் உயிருக்கு ஆபத்து நேரவில்லை. ஸ்ரீஜாப் முகாமைப் பற்றிய தகவல்களைச் சேகரித்துக் கொண்டு பத்திரமாகத் திரும்பினார்.

அன்று மாலையே வேறொரு முகாமை நோக்கிச் சீனர்களின் பெரும்படை யொன்று நெருங்கிக் கொண்டிருக்கும் செய்தி கிடைத்தது. அந்த முகாமைப் பாதுகாக்க முயலுவதில் பயனில்லை; அங்குள்ளவர்களை அழைத்துக் கொண்டு வேறு ஒரு பத்திரமான இடத்துக்குச் செல்ல வேண்டியதுதான் என்று முடிவாயிற்று. ரபிலால் அந்தக் காரியத்தைச் செய்வதற்குத் தாமே மீண்டும் முன் வந்தார். முகாமைக் காலி செய்து அதிலிருந்தவர்களையெல்லாம் இரண்டு படகுகளில் ஏற்றிக் கொண்டு திரும்பி வருகையில் மறுபடியும் சீனர்களின் இயந்திரத் துப்பாக்கிகள் இயங்கின. கடுமையான தாக்குதலுக்கு உள்ளான இரண்டு படகுகளில் ஒன்று நீரில் மூழ்கி விட்டது. அதிலிருந்த ஜவான்கள் குளிரில் உடலை வெடவெடக்கச் செய்யும் அந்த ஆற்று ஜலத்தில் தத்தளித்தார்கள்.

தாபா தமது படகை விட்டு நீரில் பாய்ந்தார். மூழ்கிக் கொண்டிருந்த மூவரைக் காப்பாற்றிப் படகில் ஏற்றிக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்தார்.

பான்காங் ஏரிக்கரையிலிருந்த இன்னுமொரு இந்திய முகாமைச் சீனர்கள் பீரங்கிகளாலும் 'மார்டர் கன்'களாலும் தாக்கினார்கள். இதனால் பலனேதும் கிட்டவில்லை. நமது வீரர்கள் இம்மியளவும் பின்வாங்கவில்லை. அவர்களுடைய உறுதியைக் கண்ட சீனர்களுக்குச் சினம் பொங்கியிருக்க வேண்டும். அந்த முகாமைத் தரைமட்டமாக்கி விடுவது என்கிற ஆத்திரத்தோடு டாங்குப் படையினரைத் துணைக்கு அழைத்துக் கொண்டு வந்தனர். இரும்பினாலான அந்த இயந்திரப் பூதங்களை முன்னால் போக விட்டு அவற்றின் பின்னால் பதுங்கியபடியே நடந்தனர் சீனர்கள். டாங்குகளில் பொருத்தப்பட்டிருந்த பீரங்கிகள் அனலைக் கக்கின. இரும்புப் பல் சக்கரங்களும் சங்கிலிகளும் கடபுடா ஒலியுடன் உருண்டன. அவற்றினடியில் அரையுண்டு அந்த முகாமே தவிடுபொடியாகி விட்டது. அப்போதும் கூட அங்கிருந்த துளசிராம் புறமுதுகிட்டு ஓடவில்லை. டாங்குகளுடன் கூட வந்து கொண்டிருந்த சீனச் சிப்பாய்களுடன் துவந்த யுத்தம் நடத்தினான். அவன் துப்பாக்கிக்குப் பலர் இரையானார்கள். அவனிடமிருந்த தோட்டாக்களெல்லாம் தீர்ந்து போய் விட்டன. துப்பாக்கியைத் தடிபோலச் சுழற்றிச் சிலம்பம் விளையாடினான் அந்த வீரன். ஆறு சீனர்கள் ஒரேயடியாக அவன் மீது பாய்ந்து அவன் கையிலிருந்த துப்பாக்கியைப் பிடுங்கி எறிந்தார்கள். தங்களுடைய தலைமை முகாமுக்கு அவனைக் கரகரவென்று இழுத்துப்போகத் தொடங்கினார்கள். வேண்டா வெறுப்பாக அவர்களுடன் நடந்த துளசிராம் தக்க சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தான். சீக்கிரமே அவனுக்குஅது கிடைத்தும் விட்டது. குன்று ஒன்றின் மீது ஏறிச் செல்கையில் சீனர்கள் சற்று அஜாக்கிரதையாக இருப்பது போல் தோன்றியது. பிடி தளர்வது போல் பட்டது. அவ்வளவுதான்! கைகளைப் பலமாக ஒரு முறை உதறித் தன்னை விடுவித்துக் கொண்டான் துளசிராம். மலைச்சரிவில் கிடுகிடுவென்று இறங்கி ஓடினான். அன்றிரவை ஒரு பாறையினடியில் ஒண்டியிருந்தபடி கழித்தான். பின்னர் இரண்டு நாட்கள் சீனர்களின் கண்களில் பட்டு விடாமல் ஒளிந்து மறைந்து நடந்தான். சிறைப்பட்டிருப்பதை விட உண்ண உணவின்றியும் அருந்த நீரின்றியும் சுதந்திரமாக அவதிப்பட்டுச் சாவதேமேல் என்று கருதி அலைந்தான். அவன் வீரம் வீணாகி விடவில்லை. இந்திய ராணுவ முகாம் ஒன்று அவன் கண்களுக்குப் புலனாகியது. தொண்டை வறண்ட நிலையில் கூவி அழைக்கச் சக்தியற்ற அவன், கரங்களை மட்டும் அசைத்துக் கொண்டு மகிழ்ச்சியுடன் அந்த முகாமைச் சென்றடைந்தான்.

உயிரைத் திருணமாக மதித்துப் போராடுகின்ற இதுபோன்ற பல செய்திகள் வந்துள்ளன. நமது துருப்பினருக்குத் தேவையான நவீன ராணுவத் தளவாடங்களையும் குளிருக்கு அடக்கமான உடைகளையும் அனுப்பி வைத்தோமானால் அவர்கள் எதைத்தான் சாதிக்க மாட்டார்கள்?






6



எல்லைப்புறத்தில் நம் வீரர்கள்


1. லடாக்கிலுள்ளபான்காங் ஏரிப் பகுதி. 2. நாயக் ரபிலால் தாபா லடாக்கில் புரிந்த அரிய சேவைக்காகப் பாராட்டப்படுகிறார். 3. இந்திய வீரர்கள் லடாக் பகுதியில் சீனப் பெரும் படையை எதிர்த்து முன்னேறாமல் தடுத்தனர். இந்தியப்படை ஆற்றைக் கடக்கப் பாடு வருகிறது. 4. நேபாவிலுள்ள பாம்பிலா வில் மலைகளடர்ந்த பிரதேசம். 5. காயம்பட்ட வீரர்களுக்கு முதல் உதவி சிகிச்சை. 6. நேபா வாலாங்கில் சீக்கியத்துருப்புகள் கண் அயராது கண்காணித்து வருகின்றனர். 7. லடாக்கில் இந்திய சிப்பாய் பாதுகாப்புக் கா குழியைத் தோண்டுகிறார்.





7





5



தீர்க்கதரிசியின் யோசனைகள்


சீனாவின் நம்பிக்கைத் துரோகத்துக்குப் பின்னரேனும், இந்த அபாயத்தைக் குறித்து நீண்ட நாட்களாக எச்சரித்து வந்த தலைவர்களின் புத்திமதிகளை ஏற்று நடக்க வேண்டும் என்ற பிரக்ஞை நம் சர்க்காருக்கு ஏற்பட வேண்டும்.

ராஜாஜி கூறியபடி முன்பே நாம் அண்டை நாடுகளுடனும், மேலை வல்லரசுகளுடனும் ராணுவ ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தால் அந்நியன் நம் எல்லையில் படை எடுப்பு செய்யத் துணிந்தே இருக்க மாட்டான். அந்தப் பழங் கதையைப் பேசி இப்போது பயனில்லை. இப்போதேனும் தீர்க்கதரிசியான ராஜாஜியின் அறிவுரைகளுக்கு அரசாங்கம் செவிசாய்க்க வேண்டுமென வற்புறுத்துகிறோம். தேசநலனுக்காகவே நாளும் சிந்தனை புரியும் ராஜாஜி இப்போது வழங்கும் நல்லுரைகளாவன:

பிரதமர் அவர்கள் தற்போது ஏற்றுக் கொண்டுள்ள பொறுப்புக்கள் மிகவும் பளுவானவை. ஆக்கத் திறன் கொண்ட வேறிருவருடன் அவர் அந்தப் பாரத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். அவர்களில் ஒருவர் இந்நாள் வரை ஸ்ரீ கிருஷ்ண மேனன் அவர்கள் வகித்த பாதுகாப்புப் பொறுப்பை ஏற்க வேண்டும். ராணுவ நிர்வாகத்தைச் சமயோசிதமாகச் சீர் செய்யவும் உடனடி ஆபத்தை உணர்ந்து தைரியமாக நடவடிக்கை எடுக்கக் கூடியவராகவும் அவர் இருக்க வேண்டும். மந்திரி சபையில் ஸ்ரீ எஸ். கே. பாட்டீல் அவர்களைவிடச் சிறப்பாக இந்தக் கடமைகளை ஆற்றக்கூடியவர் இல்லை என்கிறார் ராஜாஜி.*

பாதுகாப்பு இலாகாவிலும், வெளி விவகார இலாகாவிலும் சீர்திருத்தங்கள் செய்வதுடன் உள்நாட்டிலும், போர்முனையிலும் பொருட்கள் சரியான முறையில் கிடைக்க வசதியாக ஒழுங்குமுறைகள் செய்யவும், இவற்றைச் செயலாக்கவும் சப்ளை மந்திரி ஒருவரை நியமிக்க வேண்டும். உற்பத்தியையும், உற்பத்தி விநியோகத்தையும் இன்றைய தேவைகளுக்குத் தக்கபடி ஒழுங்கு செய்ய வேண்டும். இந்தக் கடினமான பொறுப்பைத் திறம்பட

*இந்த உபதலையங்கம் அச்சாகிக் கொண்டிருக்கும்போதே ஸ்ரீ சாவன் அவர்கள் பாதுகாப்பு மந்திரியாக நியமிக்கப்படலாமென்று தெரிகிறது.




வகிக்க ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் தகுதி பெற்றவர் என்கிறார் ராஜாஜி.

பாகிஸ்தானின் நட்பையும், நம்பிக்கையையும் பெற முழு முயற்சியும் செய்ய வேண்டும். இரு நாடுகளுக்கு மிடையில் தற்போதுள்ள பிரச்னைகளைச் சீன ஆபத்து நீங்கும் வரையில் தள்ளிப் போட வேண்டும். இதற்குச் சர்க்காரின் சிந்தனையையே மாற்றி அமைத்துத் துணிச்சலுடனும், பரந்த மனோபாவத்துடனும் செயலாற்ற வேண்டிய ஒரு மந்திரி தேவை. இந்தப் பொறுப்பைப் பிரதமர் நேரு அவர்கள் சிறப்பாக ஆற்ற முடியும் என்று கருதுகிறார் ராஜாஜி. அல்லாதபட்சம் அவரது சகோதரியாகிய ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் அவர்களிடம் இந்த நல்லுறவுப் பணியை ஒப்புவிக்கலாம் என்கிறார்.

'நேருஜியும் அவரது கட்சியும் அரசியல் பதவிகளைத் தாங்களேதான் வகிக்க வேண்டும்; வேறு யாருடனும் பகிர்ந்து கொள்ளக் கூடாது என்று இந்த நெருக்கடியிலும் கருதுவதால் மேற்கண்டவாறு யோசனை கூறுகிறேன்' என்கிறார் ராஜாஜி.

சீனப் படை முன்னேறுவதைத் தடுப்பதோடு நில்லாமல் நமது படைகள் முன்னேறி, அவர்களது ராணுவ தளங்களைத் தாக்க வேண்டும். இதற்குத் தேவைப்படும் தளவாடங்களைப் பொருத்த அளவில் பெற வேண்டுமானால் மேற்கத்திய வல்லரசுகளுடன் நேச உடன்படிக்கை செய்து கொண்டாக வேண்டும். இதில் சற்றும் தயங்கக் கூடாது. அர்த்தமற்ற சங்கோசத்தையும், பிடிவாதத்தையும் விட்டு அரசாங்கக் கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டும். மிகவும் தாராள மனத்துடன் முன்வந்துள்ள மேல் நாடுகளின் உதவியை எவ்விதத்திலும் வலுவாக்கிக் கொள்ள வேண்டும். இதையொட்டி சீனாவும், ருஷியாவும் இப்போது புது வேஷங்கள் போடக் கூடும். மேல் நாடுகளை நாம் நம் பாதபடி செய்வதில் அவை முனைப்பாக இருக்கும். 'பேச்சு வார்த்தை நடத்திச் சமாதானம் காணலாம்' என்று அவை புதிய வலைகள் வீசக் கூடும். இந்தக் கபடங்களுக்குச் சர்க்கார் ஒருகாலும் மோசம் போகலாகாது. ஸ்ரீ கிருஷ்ண மேனன் விலகியபின்னும் நாம் கம்யூனிஸ்டு நாடுகளிடம் வாஞ்சையுள்ளவர்கள் என்று மேல் நாடுகள் ஐயம் கொள்ள இடம் அளிக்கக் கூடாது என்கிறார் ராஜாஜி.





பிரதம மந்திரியின் உத்திரவாதம்

"ஆங்கிலம் ஒரு இணை மொழியாக நீடித்து இருக்கும். இந்தி மொழி புழக்கத்தில் இல்லாத பிராந்தியங்களின் மக்கள் விரும்பும் வரை ஆங்கில மொழியை அகற்றமாட்டேன்."

— ஜவஹர்லால் நேரு

DA 62/497

“உயிர்க்குலம் தூய உலக சூழலில் வாழ உரிமை பெற்றுள்ளது; அந்தச் சூழலை விஷமாக்க எந்த வல்லரசுக்கும் அதிகாரம் கிடையாது” என்று அறிவுரை பகர்வதற்காக வல்லரசுகளில் ஒன்றான அமெரிக்காவுக்குச் சென்ற ராஜாஜியுடனும், ஸ்ரீ திவாகர் அவர்களுடனும் காந்தி சமாதான தூதுக் குழுவில் இடம் பெற்றிருந்த ஸ்ரீ பி. சிவராவ் அவர்கள் தங்கள் சமாதான யாத்திரை அநுபவங்களைக் 'கல்கி' நேயர்களுடன் பகிர்ந்து கொள்கிறார்:

ராஜாஜியின் அமெரிக்க யாத்திரை

பி. சிவராவ்

வாஷிங்டனில் வெள்ளை மாளிகைக்குள் எங்கள் கார் பிரவேசித்தது. ராஜாஜி என்பக்கம் திரும்பி "எனக்கு ஆயாசமாக இருக்கிறது. ஜனாதிபதியிடம் என்ன சொல்லப் போகிறேனோ தெரியவில்லை" என்றார். அதைக் கேட்டு நான் வியப்புறவில்லை; ஆனால் கவலையடைந்தேன். அப்போதுதான் ஆயுதக் கட்டுப்பாடு, படை பலக் குறைப்பு சம்பந்தப்பட்ட அமெரிக்கத் தலைமை அதிகாரிகளுடன் ஐம்பது நிமிஷங்கள் உரையாடி விட்டு வந்திருந்தார் ராஜாஜி. அதற்குள் இன்னொரு சந்திப்பு என்றால்....?

அன்று ஜனாதிபதி கென்னடிக்கு வழக்கத்தைவிட அதிகமான அலுவல்கள். க்யூபா விவகாரம் கொந்தளித்துக் கொண்டிருந்தது. மிஸ்ஸிஸிப்பியில் ஒரு நீக்ரோ மாணவனைப் பல்கலைக் கழகத்தில் அநுமதித்து விட்டதால் ஏற்பட்ட குழப்பம் ஒரு நெருக்கடியையே உண்டாக்கியிருந்தது. எனவே ஜனாதிபதியைப் பேட்டி காண வந்திருந்தவர்கள் வெகு துரிதமாக ஒருவர் பின் ஒருவராக வெளியேறினர். எங்கள் தூது கோஷ்டிக்கு இருபது அல்லது இருபத்தைந்து நிமிஷங்களுக்கு மேல் அவகாசம் கிடைக்காது என்று ஜனாதிபதி தம் ஆலோசகர் ஒருவருக்குக் கூறியிருந்தாராம்.



இந்தச் சூழ்நிலையில்தான் நாங்கள் ஜனாதிபதி கென்னடியின் வரவேற்பு அறையில் பிரவேசித்தோம். ராஜாஜியும், அமெரிக்காவிலுள்ள இந்திய ஸ்தானிகர் ஸ்ரீ பி. கே. நேரு அவர்களும் கென்னடி அவர்களுக்கு இடப்புறம் அமர்ந்தனர். நானும், ஸ்ரீ திவாகர் அவர்களும் ஜனாதிபதிக்கு வலது பக்கம் உட்கார்ந்தோம்.

ராஜாஜி அணு ஆயுத சோதனை நிறுத்தம் குறித்த தமது யோசனையை விநயத்துடன் தொடங்கினார். பூரணமாக ஆயுத பரிகரணம் செய்யத் தாம் கோரவில்லை என்பதை அவர் தெளிவுபடுத்தினார். உலகத்தின் சூழலிலும், விண்வெளியிலும், கடலுக்கடியிலும் நடைபெறும் அணு ஆயுத சோதனையை நிறுத்தக் கோருவதே தமது தூதுப் பணி என்று கூறினார். உலகச் சூழலை விஷமாக்கவும், இன்றுள்ள மாந்தரையும் எதிர்கால மக்கட் குலத்தையும் எல்லையற்ற கொடுமைகளுக்கு ஆளாக்கவும் அணு ஆயுதம் படைத்த வல்லரசுகளுக்கு உரிமை கிடையாது என்று கூற உலகத்துக்கு உரிமை உண்டு என்ற வாதத்தை மிகவும் சாதுரியமான முறையில் கையாண்டார் ராஜாஜி. ருஷியாவுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள இயலாமற் போனாலும் எதிராளியின் போக்கைக் கவனியாது அமெரிக்கா தன்னைப் பொறுத்த மட்டில் அணு ஆயுத சோதனையை நிறுத்த வேண்டும்; இதனால் உலகத்தின் தார்மீக பக்க பலத்தையும் பாராட்டையும் அமெரிக்கா பெறும் என்று அவர் கூறினார்.

நிதானமாகவும், அதே சமயத்தில் உத்வேகத்துடனும் பேசிய ராஜாஜி முப்பத்தைந்து நிமிஷங்களில் பிரச்னையின் ஒவ்வொரு கோணத்தையும் விளக்கி விவாதித்து விட்டார். தேவைக்கு மேல் ஒரு சொல்லோ, ஒரு வாதமோ கிடையாது. ஜனாதி



திவாகர்



ராஜாஜி



சிவராவ்



குரோமிகோ



ஸி. வி. நரசிம்மன்



ஸ்டீவனஸன்



மாக்மில்லன்

பதி கென்னடி அவ்வளவு நேரமும் வாய் திறவாமலே கேட்டுக் கொண்டிருந்தார். ராஜாஜியின் அந்தரங்க சுத்தமும், அவரது வாதத்திலுள்ள ஆழ்ந்த நியாயமும்தான் ஜனாதிபதியின் மௌனத்துக்குக் காரணம் என்பது வெள்ளிடைமலை. பின்னர் அவர் பேசிய போது ராஜாஜியின் யோசனைகள் நியாயமானவை என்று தாம் கருதுவதாகவும் அந்த யோசனைகளில் எவை காரிய சாத்தியமானவை என்று தாம் தீர்க்கமாகச் சிந்திக்கப் போவதாகவும் கூறினார். எல்லா விதமான அணு ஆயுத சோதனைகளையும் உடனடியாக நிறுத்த வேண்டும் என்பதில் தாம் ஈடுபாடு கொண்டிருப்பதை வெளிப்படுத்தவும் கென்னடி அவர்கள் தயங்கவில்லை. அவர் கூறிய தவ்வளவையும் இங்கு எழுதும் சுதந்திரத்தை நான் எடுத்துக் கொள்வதற்கில்லை. எனினும் விவாதத்தின் முடிவில் ராஜாஜியின் கருத்துக்கு நெருக்கமாகத் தமது கருத்தையும் அவர் மாற்றிக் கொண்டார் என்றே தென்பட்டது.

பேட்டி தொடங்கி ஒரு மணிக்கு மேலும் ஆகிவிட்டது. எனினும் கென்னடி அவர்கள் தமது மதிப்புக்குகந்த விருந்தாளிக்கு விடைகொடுக்க விழையவில்லை. பரபரப்பின்றியே பேசிக் கொண்டிருந்தார். முந்தைய ஜனாதிபதி ஒருவருக்கு விக்டோரியா மகாராணி அளித்த மேஜையிடம் அவருக்குள்ள பாசம் (அந்த மேஜை ஜனாதிபதியின் வரவேற்பு அறையில் உள்ளது), தமது தோட்டத்தைப் பற்றி அவர் கொண்டுள்ள பெருமை, இப்படியாகப் பல விஷயங்கள் அவரது பேச்சில் தெரியலாயின. அவரது பூங்காவிலும் நாங்கள் சிறிது நேரம் கழித்தோம்.

நாங்கள் அவரிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டபின் அவர் இந்தப் பேட்டியின் போது உடனிருந்த ஒருவரிடம் சொன்னாராம்: ''இதற்கு முன், இதுபோல் கச்சிதமாகவும் தெளிவாகவும் அழகுகனிந்த வார்த்தைகளில் ஒரு பிரச்னையை ஒருவர் விளக்கி நான் கேட்டது அபூர்வமாகும்.''

இந்தக் கருத்தை, வேறு வேறு சொற்களில், நாங்கள் அமெரிக்காவில் சந்தித்தவர்கள் எல்லாருமே வெளியிட்டிருக்கிறார்கள்.

அந்த வாரம் எங்களுக்கு வாஷிங்டனில் ஏகப்பட்ட அலுவல்கள். எங்களுடைய நிகழ்ச்சி நிரலை வகுக்கும் பொறுப்பு ஃபில் டால்பட் அவர்களிடம் இருந்தது எங்கள் அதிர்ஷ்டமேயாகும். அவர் தெற்கு ஆசிய நாடுகள் சம்பந்தப்பட்ட இலாகாவின் உதவி காரியதரிசியாவார். (அமெரிக்காவில் காரியதரிசி என்பது நம் நாட்டு மந்திரி போல.) இந்தியாவின் நண்பர் அவர். அவரது உதவியாளராகிய குமாரி லெய்ஸ் அவர்களும் எங்கள் காரியக்கிரமத்தைத் திட்டமிட்டுத் தந்தார். இன்று புது தில்லியிலுள்ள லெய்ஸின் ஏராளமான நண்பர்கள் 'காரல்' என்ற செல்லப் பெயரிலேயே அவரை நினைவு வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அமெரிக்காவின் ஆயுதக் கொள்கையை வகுத்து நடத்தி வைக்கும் அறிவு நிலைகள் என்று மதிக்கத்தக்க எல்லாரையும் ராஜாஜி சந்தித்து வாதித்தார். அசாதாரணமான திறமை வாய்ந்தவர்கள் அவர்கள். சர்வதேச விவகார உதவி மந்திரி ஹார்லான் கிளீவ்லாண்ட், ஜனாதிபதியின் விஞ்ஞான ஆலோசகர் டாக்டர் ஜே. வெய்ஸ்னர், கொள்கை வகுக்கும் குழுவின் தலைவரான ரோஸ்டாவ் முதலியோருடன் ராஜாஜி பேச்சு நடத்தினார்.

பிரச்னையைப் பூரணமாக ஆராய்ந்து, மனம் விட்டு விவாதங்கள் நடைபெற்றன. மிகவும் உயர்ந்த முறையில், அருசியான சாயல் எதுவுமின்றிப் பேசினார். ஒரு நாள் இரவு அமெரிக்க அரசியலில் செல்வாக்கு வாய்ந்த ஒரு குழுவிடம் பேசும் போது ராஜாஜி, 'இந்தியாவும், பாகிஸ்தானும் அணு ஆயுத வல்லரசுகளாவதாக எண்ணிப் பாருங்கள். அவற்றுக்கிடையேயுள்ள முரண்பாடுகளைத் தீர்க்க முடியாமல் போவதாக வைத்துக் கொள்வோம்.

அப்போது பயங்கரமான முறையில் பிரச்னையைத் தீர்க்க எண்ணி, அதற்கு முதற்படியாக அவை அணு ஆயுதங்களை வெடித்துச் சோதனை பார்க்குமானால் ஐரோப்பாவும், அமெரிக்காவும் என்ன செய்யும்? உலகத்தின் சூழலைக் களங்கப்படுத்துவதை ஆட்சேபித்துச் சும்மா இருந்து வருமா? அல்லது அதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்குமா? இதைத்தான் இப்போது நாங்கள் செய்கிறோம்'' என்றார்.

அமெரிக்கர்களும் ராஜாஜியைப் போலவே மனம்விட்டுக் கேட்டார்கள்: 'சென்ற ஆண்டு ருஷியா ஐம்பது மெகாடன் அணுகுண்டை வெடித்த போது இந்தியாவும், மற்றக் கூட்டு சேராத நாடுகளும் ஏன் அதனைப் போதிய அளவுக்கு ஆட்சேபிக்கவில்லை? அதோடு நில்லாமல், அமெரிக்காவின் பாதாளச் சோதனைகளுக்குச் சமானமே அது என்று ஸ்ரீ கிருஷ்ணமேனன் கூறவில்லையா?' என்று கடக்கட வினவினார்கள்.

அமெரிக்கர்களில் பலவித மாற்றுக் கருத்துக் கொண்டவர்களையும் இவ் விஷயங்கள் ஒரே போலப் புண்படுத்தியுள்ளன என்பது வாஷிங்டன், நியூயார்க் இரு இடங்களிலும் புலனாயிற்று.

அதிகாரிகளைத் தவிர நாங்கள் சந்தித்தவர்களில் முன்பு இந்தியாவில் ஸ்தானீகர்களாக இருந்த மூவரைக் குறிப்பிட வேண்டும். ஜான் ஷெர்மன் கூப்பர், செஸ்டர் பௌல்ஸ், எல்ஸ்வொர்த் பங்கர் ஆகியோரே அவர்கள். மூவரும் தங்கள் பதவிக் காலத்தில் இந்தியர்களுடைய நன்மதிப்பையும், அன்பையும் பெற்றவர்கள். இப்போது கூப்பர் அவர்கள் அமெரிக்கப் பாராளுமன்றமாகிய செனட்டில் அங்கம் வகிக்கிறார். குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவராயினும் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதி கென்னடியின் நண்பர் இவர். எங்களைத் தமது இருக்கைக்கு அழைத்து உபசரித்தார் இவர். செனட்டில் ஒரு முக்கிய உறுப்பான அயல் நாட்டுத் தொடர்புக் குழு (Senate Foreign Relations Committee) எங்களுக்களித்த விருந்திலும் அவர் கலந்து கொண்டார். பின்தங்கிய நாடுகள் விவகார இலாகாவில் இப்போது துணைக் காரியதரிசியாகவுள்ள செஸ்டர் பௌல்ஸ் அவர்கள் எங்களுக்குத் தேநீர் விருந்தளித்தார். அஹிம்சைக் கோட்பாடு அமெரிக்க நீக்ரோக்களை எவ்வளவு ஈர்த்திருக்கிறது என்பதை அவர் விளக்கினார். அமெரிக்காவில் அதிசயிக்கத்தக்க அளவுக்கு காந்தியவாதிகள் உள்ளனர் என்று அவர் சொன்னார். பங்கர் அவர்கள் எங்களோடு ஒரு மணிநேரம் அளவளாவினார்.

நியூயார்க்கிலும் எங்களுக்கு நிரம்ப அலுவல்களிருந்தன. முக்கியமாக அவை ஐ. நா. சபையிலும், அதனைச் சேர்ந்த ஸ்தானீகர் காரியாலயங்களிலுமே இருந்தன. ஐ. நா. வின் பிரதம காரியதரிசியான தாண்ட் அவர்களுடன் நிகழ்ந்த சந்திப்பு மனோரம்மியமான ஓர் அநுபவமாகும். அவர் மிகவும் சரளமாகப் பழகியதோடு, தாம் வகிக்கும் கஷ்டமான, சிக்கலான பதவிக்கு முற்றிலும் தகுதி பெற்றவர் என்பதும் தெரிந்தது. 1952-ம் ஆண்டில் ஐ. நா. பொதுச் சபையில் ஒரே குழுவில் நாங்கள் இருவரும் பணி புரிந்தபோது யோசனைகளைப் பரஸ்பரம் பரிமாறிக் கொண்டதை நினைவுகூர்ந்து பேசினார் அவர்.

அணு ஆயுத சோதனைகளை நிறுத்த வேண்டுமென ஐ. நா.வில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்; அதற்குக் கீழ்ப்படியாத நாடுகளை ஐ. நா.விலிருந்தே பகிஷ்காரம் செய்ய வேண்டுமெனத் தீர்மானத்தில் ஷரத்து இருக்க வேண்டும்; இதுவே சோதனை நிறுத்தத்துக்கு வழி — என்று வாஷிங்டனில் ராஜாஜி அபிப்பிராயப் பட்டார். ஆனால் ஊதாண்டும், அவரது பிரதான ஆலோசகர் ஸ்ரீ ஸி. வி. நரசிம்மன் அவர்களும் ஐ. நா.வில் வரும் எந்தத் தீர்மானத்திலும் இம்மாதிரி ஒரு ஷரத்தைப் புகுத்த முடியாது என்று தெளிவாகக் கூறினர்.

எனினும் அணு ஆயுத சோதனைகளை ஐ. நா. ஆட்சேபிக்கிறது என்பதை மிகவும் அழுத்தமான முறையில் அது வலியுறுத்த வேண்டும் என்பதை யாவரும் ஒப்புக் கொண்டனர். அணுசக்தியால் இயங்கும் துப்பாக்கிகள், யந்திர பீரங்கிகள் ஆகிய ஆயுதங்களை உலகில்


ஜெபருல்லாகான்


பங்கர்


செஸ்டர் பௌல்ஸ்


ஊதாண்ட்

கொந்தளிப்புள்ள பாகங்களுக்கு அனுப்பி வைக்கும் அபாயம் தற்போது ஏற்பட்டுள்ளதென்றும், இதுவே உடனடியாகக் கவனிக்க வேண்டிய ஆபத்தென்றும் ஒருவர் கூறினார்.

நியூயார்க்கில் நாங்கள் பெற்ற அநுபவங்களில் நினைவில் நீங்காமல் நிற்கும் ஒன்று ஐ. நா. சபையின் இவ்வாண்டுத் தலைவரான ஸர் ஜபருல்லாகானைச் சந்தித்து அளவளாவியதாகும். அவர் ராஜாஜியை ஆழ்ந்த மரியாதையுடனும், அன்புடனும் வரவேற்றார். ''உலகப் பெருந் தலைவர்களில் அவர் ஒருவர்; தமது கொள்கைகளின் சத்தியத்தில் திட நம்பிக்கையுள்ளவர்'' என்று அவர் ராஜாஜியைப் பற்றிக் கூறினார். இந்த வருஷத்துக்குத் தாம் ஐ. நா. சபைத் தலைவரானபடியால் விவாதங்களில் தீவிரமாகப் பங்கு கொள்ள முடியாதென்றும், எனினும் அணுச் சோதனை தடைக்காகத் தம் செல்வாக்கைப் பூரணமாகப் பயன்படுத்துவதாகவும் அவர் வாக்களித்தார்.

ஐ. நா.வில் அமெரிக்கத் தூது கோஷ்டியின் தலைவராக உள்ள அட்லாய் ஸ்டீவன்ஸன் அவர்கள் சுமார் எட்டாண்டுகளுக்கு முன்பு இந்தியாவுக்கு வந்திருந்தபோது ராஜாஜி, நான் இருவருமே அவரைச் சந்தித்திருக்கிறோம். அன்றைக்கிருந்ததைவிட இன்று மிகவும் வயது முதிர்ந்து காண்கிறார் அவர். என்றாலும் அவரது மனோ பலமும், திட நம்பிக்கையும் இன்றும் குன்றவில்லை.

ருஷியா ஓர் ஒப்பந்தத்துக்கும் இணங்காவிட்டால் அமெரிக்கா ஒருதலைப்பட்சமாக அணு ஆயுத சோதனையை நிறுத்த வேண்டுமென்பதைத்தான் ராஜாஜி எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வலியுறுத்தினார். ஸ்டீவன்ஸனிடம் மட்டுமின்றி அமெரிக்க வெளி விவகார காரியதரிசி — டீன் ரஸ்க் அவர்களிடமும் இதனையே எடுத்தியம்பினார் ராஜாஜி. ருஷியாவின் இணக்கத்தோடு ஒரு சர்வதேச ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டாலும் கூட, இத்தகைய ஒப்பந்தத்தை மீறும் நாட்டைக் கண்டிக்க ஏதும் வகையில்லாததால் அதனால் பயன் இராது என்பதை இவர்களிடம் ராஜாஜி விளக்கியிருக்கிறார். ஜினீவா படை பலக் குறைப்பு மகாநாட்டில் பிரிட்டனின் பிரதிநிதியான காட்பேர் அவர்களுடனும் ராஜாஜி சம்பாஷித்தார்.

காட்பேர் அவர்களுடன் பேசியதிலிருந்தும் பின்னர் லண்டனில் பிரிட்டிஷ் பிரதமர் மாக்மில்லன் அவர்களுடன் பேசியதிலிருந்தும் பிரிட்டனின் மனோபாவம் அமெரிக்காவுடையதைவிட நமக்குச் சாதகமாக வளைந்து கொடுப்பது தெரிந்தது: பூமிக்கடியின் நடைபெறும் சோதனைகள் நீங்கலாக மற்றவற்றை உடனடியாகத் தடை செய்ய வேண்டும்; இதே சமயத்தில் பாதாளச் சோதனைகள் நடப்பதைக் கண்டு பிடிக்க முடியுமா என்ற தீராத பிரச்னையை விஞ்ஞானிகள் விவாதித்து இணக்கமான யோசனைகளை உருவாக்க வேண்டும் என்பதே பிரிட்டனின் கருத்து என்பது எங்களது தூது கோஷ்டிக்குத் தெரிந்தது. அதிகபட்சமானால் ஆறு மாதங்களுக்குள் இவ்வாறு தடை விதிக்க வேண்டும் என்று காட்பேர் அவர்கள் கூறினார்கள். ஆனால் மாக்மில்லன் அவர்களோடு பேசுகையில் இரண்டு மாதங்களிலேயே அணு ஆயுதத் தடை விதிப்பது சாத்தியமாகும் என்ற பிரிட்டனின் கருத்து வெளியாயிற்று. அந்நிய விவகார இலாகாவில் அணு ஆயுதப் பிரச்னையில் ஈடுபட்டுள்ள ஒரு நிபுணர் இந்தச் சாத்தியக் கூற்றினை எடுத்துரைத்தார்.

ருஷியாவின் வெளி விவகார மந்திரியான குரோமிகோ அவர்களுடன் நியூயார்க்கில் நிகழ்ந்த சம்பாஷணை ஓர் ஆனந்தகரமான ஆச்சரியம் என்று கூற வேண்டும். அந்நிய மொழி உச்சரிப்பின் சாயல் வீசும் ஆங்கிலத்தில் குரோமிகோ தெளிவாகவும், திட்டவட்டமாகவும் பேசினார். அணு ஆயுத சோதனை பற்றி ருஷியாவின் கொள்கை என்னவென்பதை ஐயந்திரிபறக் கூறினார் அவர். 'அமெரிக்கா மட்டும் இணக்கம் தெரிவித்தால் இங்கேயே இப்பொழுதே எல்லாச் சோதனைகளையும் நிறுத்தும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட ருஷியா தயார். ருஷியா அப்படி எல்லாச் சோதனைகளையும் நிறுத்த முடியும் என அமெரிக்கா நம்பாவிடில் பூமிக்கு மேல் சோதனை நடைபெறாது என்பதற்குச் சட்ட ரீதியிலும், பாதாளச் சோதனைகளை நடத்துவதில்லை என்பதற்கு தார்மீக ரீதியிலும் கட்டுப்பட ருஷியா இணங்குகிறது' என்று அவர் கூறினார்.

உலகச் சூழலை விஷமயமாக்குவதை எவ்வளவுக்குக் குறைக்க முடியுமோ அவ்வளவுக்குக் குறைக்க வேண்டுமென்பதில் ருஷியா மிகவும் கவனம் கொண்டுள்ளது. எனினும் அது தன் நாட்டின் பந்தோபஸ்தை அபாயத்துக்குட்படுத்த முடியாது என்று கூறினார் குரோமிகோ.

மற்ற மூன்று அணு ஆயுத வல்லரசுகளின் கருத்திலிருந்து சற்றே மாறுபட்டிருந்தது பிரெஞ்சுக் கொள்கை. அணு ஆயுதங்களைப் பூரணமாகப் பரிகரணம் செய்யவேண்டும் என்ற பெரிய பிரச்னைக்கே அது ஆதரவு காட்டுகிறது: ராஜாஜியின் யோசனை தற்காலப் பரி

நன்றி அறிவிப்பு



சென்ற 14-10-62 ஞாயிறு இரவு சேலம் ஜில்லா, பெத்தநாயக்கன்பாளையம் பெருநிலக்கிழார் திரு கே. என். ராமபத்ர அய்யர் அவர்கள் மறைந்ததைக் குறித்து மேற்படியாரின் கிரியைகளில் கலந்துகொண்டும், தங்கள் அனுதாபத்தை நேரிலும், கடித மூலமும் தெரிவித்த பந்துக்களுக்கும், நண்பர்களுக்கும் எங்கள் நன்றியை இதன் மூலம் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். தனித் தனியே பதில் எழுத முடியாமைக்காக மன்னிப்புக் கோரும்,

ஆர். பார்த்தசாரதியும்
மற்ற குடும்பத்தார்களும்

காரமேயாகும் என்பது பிரஞ்சுக் கருத்து.

அணு ஆயுத சோதனைகளில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்களோடு மட்டுமின்றிக் குறிப்பிடத்தக்க வேறு பலரையும் எங்கள் தூதுகோஷ்டி சந்தித்தது. இவர்களில், அணு ஆயுதங்கள் விஷயமாக விவேகமான ஒரு கொள்கையை வகுக்க வேண்டும் என்று கூறி வரும் தேசியக் குழு (National Committee) வின் காரண புருஷரான டாக்டர் ஹோமர் ஜாக் ஒருவர். இவரை நாங்கள் நியூயார்க்கில் கண்டபோது காந்தி சமாதானக் கழகம் இதே போல் உலகிலுள்ள இதர ஸ்தாபனங்களுடன் இணைப்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கூறினார். 'உலக சமாதானத்துக்காகப் பாடுபடுவதாகப் பல கம்யூனிஸ்ட் சார்புள்ள ஸ்தாபனங்களும் இருக்கின்றன; ஆனால் எனது தேசியக் குழுவானது ஜனநாயக அடிப்படையை ஒப்புக் கொள்ளும் ஸ்தாபனங்களுடன் தான் இணைந்து செயலாற்றுகிறது' என்று கூறி, இதையே எங்களுக்கும் எச்சரிக்கையாக விடுத்தார்.

ஒரு நாள் பிற்பகல் எங்கள் தூது கோஷ்டிக்கு ஒரு கௌரவம் தேடி வந்தது. தற்போது பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்தில் உள்ள பிரபல விஞ்ஞானியான டாக்டர் ஆர். ஓப்பன்ஹெய்மர் எங்களைச் சந்திக்க வந்தார். அணு ஆயுத பரிகரணத்துக்காக ஒரு விரிவான திட்டம் வகுக்க வேண்டும் என்று கூறினார் அவர். (அமெரிக்காவிலும், லண்டனிலிருந்தும் நாங்கள் சந்தித்த இதர விஞ்ஞானிகளும் இதே கருத்தைத்தான் தெரிவித்தனர்.) அணு விஞ்ஞானத்தில் மட்டுமின்றி, உபநிஷதங்களிலும், கீதையிலும் அவருக்குள்ள பெரும் ஈடுபாடு உரையாடலின்போது வெளியாயிற்று.

ராஜாஜியின் நினைவிலும், என் நினைவிலும் முன்னணியில் நிற்கும் இன்னொர் அநுபவம்: புதுதில்லியில் 1942-43ல் ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டின் விசேஷ தூதுவராக இருந்த வில்லியம் ஃபிலிப்ஸ் அவர்களை ஹார்வார்ட் பல்கலைக் கழகத்தில் கண்டு எங்களது பழைய நட்பைப் புதுப்பித்துக் கொண்டோம். அவர் மிகவும் இக்கட்டான ஒரு சந்தர்ப்பத்தில் புது தில்லியில் பதவி வகித்தார். எனினும் வெளி உலகு அறியாமலே இந்திய விடுதலைப் பிரச்னையை உடனடியாகவும், சுமுகமாகவும் தீர்க்க ஆங்கில ஆட்சியாளரிடம் அவர் கடினமாக முயன்றார். அது பலனளிக்காவிட்டாலும் குறிப்பிட வேண்டியதாகும். அவருக்கும் ராஜாஜிக்கும் ஒரே வயது. இந்த விருத்தாப்பியத்தில் எங்களை வரவேற்பதற்காகவே ஹார்வர்டுக்கு வந்திருந்தார் அவர்.

பூரணமாகவோ ஓரளவுக்கோ அணு ஆயுதங்களைத் தடை செய்யும் விஷயத்தில் எங்கள் தூது கோஷ்டி கண்ட பலன் எதுவாயினும் சரி, இந்தியாவுக்கு நல்ல பெரும் நிதியாக வெளிநாட்டினரின் நல்லெண்ணங்களையும், நட்பையும் தூதுகோஷ்டி ஈட்டித் தந்திருக்கிறது; மனித குலம் முழுமையும் சம்பந்தப்பட்ட ஒரு மாபெரும் பணிக்காக எண்பத்திநாலாவது வயதில் இந்தியாவைவிட்டு வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ளத் துணிந்த ஒரு முதுபெரும் கிழவருக்கு அயல் நாடுகளில் மதிப்பையும், அன்பையும் பெற்றுத் தந்திருக்கிறது. எங்களது வெளிநாட்டுப் பிரயாணத்தைப் பற்றிய அநுபவங்களை எண்ணும்போது இதுவே என் மனதில் முக்கியமாகப் பதிந்திருக்கிறது. இதனையே நான் முக்கியமாகக் கருதி ராஜாஜியிடமும் கூறியிருக்கிறேன்.

கைதூக்க அபாயமானுன்!

சீனர்களின் ராணுவ முகாமில்நோயுற்று கிடப்பவர்களை யெல்லாம் டாக்டர் பரிசோதனை செய்தார். "கைகள் இரண்டையும் ஒரு அளவுக்குமேல் தூக்க முடியவில்லை" என்று முறையிட்டான் ஒரு சிப்பாய். "அப்படியா! எங்கே கொஞ்சம் சிரமப்பட்டுப் பார்!" என்றார் டாக்டர்.

"அப்பப்பா! தூக்க முடியவே இல்லை. வலி பிராணன் போகிறது!"

"நான் மெள்ளத் தூக்கட்டுமா?" என்றார் டாக்டர். "ஐயோ வேண்டாம்! நானே சிரமப்பட்டுத் தூக்கப் பார்க்கிறேன். ஊஹூ.....முடியவே இல்லை, டாக்டர் சார்!" என்றான் சிப்பாய்.

"தோளுக்கு மேல்தானேப்பா தூக்க முடியவில்லை? முழங்கை மட்டும் தசைநார்கள் சரியாகத்தானே இருக்கின்றன. துப்பாக்கி பிடிக்கக் கூட அது போதாதா?"

"அதுக்கும் மேலே தூக்கும்படியா நேரும்போது நான் சும்மா யிருந்தால் ஆபத்தாச்சுங்களே?"

"அதென்ன அப்படிக் கை முழுக்கத் தூக்கிச் சண்டை போடும் சந்தர்ப்பம்? நான் கேள்விப்பட்டதில்லையே!" என்றார் டாக்டர்.

"என்ன இப்படிச் சொல்றீங்க. இந்திய சேனையிடம் நாம் சரண் அடையும்போது அதற்கு அறிகுறியாக ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டுக் கைகளைத் தானே தூக்க வேண்டும்? அந்த நிலையில் நான் மட்டும் சும்மா இருந்தால் என் கதி என்ன ஆகும்?" என்றான் அந்தச் சீனச் சிப்பாய்.



— சாமா

நந்தவனம்

சோமு

46. சித்திரானந்தர்

சித்திரத்தை எடுத்துக் கண்களிலே ஒற்றிக் கொண்ட அன்னையின் முகத்தையே கூர்ந்து பார்த்தான் சிவகாமிநாதன். அவளுடைய கண்கள் கலங்குவதைக் கண்டான்.

"சித்திரானந்தா" என்று கையெழுத்திடப்பட்டிருந்ததை மீண்டும் மீண்டும் படித்தாள் சுந்தரி.

"சித்திரானந்தா! ஆம்; உண்மையில் தாங்கள் ஒரு சித்திரானந்தர்தான். இல்லையென்றால் உங்களுக்கும் எங்கள் வாழ்வுக்கும் இத்தகைய நெருங்கிய தொடர்பு எப்படி ஏற்பட்டது? செண்பக நாயகி கோவிலின் சித்திரங்களில் உங்களுக்கு அளவுகடந்த மதிப்பு இருந்த ஒரே காரணந்தானே உங்களையும் எங்களையும் இவ்வாறு இணைத்தது. எங்களுக்காக இத்தனை பாடுபட்டீர்களே! அத்தனைக்கும் காரணம் உங்களுடைய அந்தச் சித்திர ஆனந்தந்தானே!"

இவ்வாறு ஏதேதோ சொன்னாள், அந்தச் சித்திரத்தைப் பார்த்துக்கொண்டே!

"சிவகாமிநாதா! இன்னொரு நாள் இங்கே வருவதாகச் சொன்னாரா? சொன்னாரா?" என்று மறுபடியும் மறுபடியும் அவன் கேட்டாள்.

"அவர் வருகிற நேரத்திலா நான் வெளியே போயிருக்க வேண்டும்!" என்று அங்கலாய்த்தாள்.

"அப்படியே நான் வெளியே போனதும் ஒரு வகைக்கு நன்மையாகத்தான் போயிற்று! இல்லையென்றால் நீ இப்படி ஒரு சித்திரம் வரைந்திருப்பாயா?" என்று சிவகாமிநாதனைப் பார்த்துச் சொன்னாள் சுந்தரி. சிவகாமிநாதனுக்கு இந்த வார்த்தைகள் ஒரே வியப்பைக் கொடுத்தன.

"அம்மா இந்தப் படம் நன்றாக இருக்கிறதா அம்மா?" என்று பயம் தெளிந்த குரலில் அன்னையிடம் கேட்டான் சிவகாமிநாதன்.

"அருமையாக இருக்கிறதடா கண்ணே!" என்று சொல்லிக்கொண்டே மீண்டும் அந்தச் சித்திரத்தை எடுத்துக் கண்களிலே ஒற்றிக் கொண்டாள் செண்பககந்தரி.

இதன் பிறகு தினந்தோறும் சித்திரானந்தரின் வரவுக்காக ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்தாள் சுந்தரி! இரண்டு நாள் மூன்று நாள் ஆயிற்று.



ஒரு வாரமும் ஆயிற்று. ஒரு மாதமும் ஆயிற்று. சித்திரானந்தரைக் காணோம்!

சுந்தரி அடிக்கடி அந்தச் சித்திரத்தை எடுத்து வைத்துக் கொண்டு ஏதோ சிந்தனைகளில் ஆழ்ந்து விடுவாள்! இதைப் பார்க்கப் பார்க்க மேலும் மேலும் வியப்பாக இருந்தது சிவகாமிநாதனுக்கு!

ஆம்; சித்திரானந்தர் வந்து போனதிலிருந்து தன்னுடைய தாயாரின் மனப்பான்மையில் ஏதோ ஒரு பெரிய

மாறுதல் உண்டாகியிருந்ததைக் கவனித்தான் சிவகாமிநாதன்! சித்திரம் என்ற பேச்சை எடுத்தாலே ஆற்றுதை சீற்றம் கொண்டு எழுந்த சுந்தரி இப்பொழுதெல்லாம் சாமியாரின் சித்திரத்தையே எடுத்து வைத்துக் கொண்டு, தன்னந் தனியாக இருந்து ஆழ்ந்து யோசிப்பதைப் பார்க்கப் பார்க்கச் சிவகாமிநாதனுக்கு ஆவலும் ஆச்சரியமும் அதிகரித்தன.

சாமியார் சென்று ஒரு வருஷம் உருண்டோடி விட்டது. இன்னொரு நாள் வருவதாகச் சொல்லிப் போன சித்திரானந்தர் ஏனோ மறுபடியும் திரும்பி வரவேயில்லை.

"அம்மா! இந்தச் சிறிய படத்தை வைத்துக் கொண்டு அடிக்கடி பார்க்கிறாயே! இதே போல ஒரு பெரிய படம் வரைந்து கண்ணாடி போட்டு நம் வீட்டுச் சுவரிலே மாட்டி விட்டால் என்ன?" என்று ஒருநாள் செண்பகசுந்தரியிடம் கேட்டான் சிவகாமிநாதன்.


"சிவகாமிநாதா! இதே போலப் பெரிதாக எப்படி வரைய முடியும்? வேண்டாம் கண்ணே!" என்றாள் சுந்தரி.

"ஏன் முடியாது அம்மா! வெறும் பென்சில் போதும். அதை வைத்துக் கொண்டே வரைந்து விடுவேன். எனக்கு என்னவோ அந்தத் தாடியும் முகமும் அவ்வளவு தூரம் மனசிலே பதிந்து விட்டது அம்மா!" என்றான் சிவகாமிநாதன்.

"அப்படியானால் முயற்சி செய்து பார், கண்ணே!" என்றாள் தாயார்.

அவ்வளவுதான்! சிவகாமிநாதனுக்கு ஏற்பட்ட உவகை கடலாகப் பொங்கியது! வாழ்வில் அவன் வரைந்த சித்திரத்தை முதன் முதலாக மனமாரப் பாராட்டினார் சித்திரானந்தர்! இப்பொழுது முதன் முதலாக அந்தச் சித்திரானந்தரின் சித்திரத்தையே பெரிதாக வரையும்படி தன்னுடைய அருமைத் தாயாரே சொல்லி விட்டாள்! பிறகு கேட்க வேண்டுமா? உள்ளத்தின் ஆசையும், இதயத்தின் பாசமும், இளம் மனத்தின் கற்பனையும், பென்சிலில் வந்து குதித்து நடனம் ஆடத் தொடங்கிவிட்டன!

இரவு பகல் அதே வேலையாக இருந்து சித்திரானந்தரைப் பெரிய அளவிலே




வரைந்து அன்னையிடம் கொடுத்தான் சிவகாமிநாதன்.

"சிவகாமிநாதா! எவ்வளவு அருமையாக வரைந்து விட்டாய் இச் சித்திரத்தை! பிரமாதமாக இருக்கிறதடா கண்ணே!" என்று கொஞ்சினாள் சுந்தரி.

"அம்மா!" என்று அழைத்துக் கொண்டே தாயாருக்கு அருகிலே வந்து நின்றான் சிவகாமிநாதன்.

"அம்மா! நீ கோபிக்க மாட்டேன் என்று சொன்னால் நான் ஒன்று கேட்கட்டுமா...?"

மகனுடைய இதயத்தின் பாங்கைப் புரிந்துகொண்ட அன்னை புன்முறுவல் செய்தார்.

"அம்மா! நாட்டியம் படிக்கிற நேரம் தவிர எப்போதாவது நான் சித்திரம் வரைந்தால் நீ கோபிக்க மாட்டாயே அம்மா! சொல்லம்மா!" என்று கெஞ்சினான் சிவகாமிநாதன்.

"இல்லை! கோபிக்கவில்லை!" என்று உறுதியோடு சொன்னாள் சுந்தரி.

இதன் பிறகு சிவகாமிநாதன் நாட்டியத்தில் நல்ல உறுதியோடு மனம் செலுத்திக் கற்க ஆரம்பித்தான். சித்திரம் வரைவதற்குத் தடை இருந்த வரை அவனுக்கு நாட்டியத்திலும் பூரணமாக மனம் செல்லாமல் இருந்தது! இப்பொழுது அப்படியில்லை. முழு வேகத்தோடு நடனப் பயிற்சியில் ஈடுபட்டான் அவன். நடன நேரம் தவிர ஓய்வு கிடைத்தபோதெல்லாம் மனம் போனபடி சித்திரங்கள் வரைந்தான்! பென்ஸில் கோடுகள் தவிர, அவனாகவே அவனுக்குத் தோன்றியபடி, வர்ணக் கோடுகளும் வரைய ஆரம்பித்தான்! கல்கத்தாவில் இருந்த சில சித்திரக்காரர்களை எப்போதாவது எங்காவது சந்திக்க நேர்ந்தால் அவர்களுடைய வீட்டுக்குச் சென்று அவர்கள் வரைகிற சித்திரங்களைப் பார்க்க அனுமதி கேட்பான்! தாயாருக்குத் தெரிந்தே கேட்பான். அவளும் இதற்குத் தடை சொல்லாமல் இருந்தாள்!

சித்திரானந்தர்? அவரைப் பற்றி எவ்விதமான தகவலும் இல்லை. அவருடைய சித்திரம் மட்டும் பெரிய அளவிலே கண்ணாடிச் சட்டத்துக்குள் அமர்ந்து அந்த வீட்டின் சுவரை அலங்கரித்துக் கொண்டிருந்தது!

இவ்வாறாக நாலைந்து ஆண்டுகள் ஓடி விட்டன. ஒருநாள் ரிஷிகேசத்தில் இருந்து ஒரு கடிதம் வந்தது.

"இரண்டு மூன்று நாட்களில் திரும்பவும் வந்து உங்களைப் பார்க்கலாம் என்று எண்ணினேன். ஆனால் என்னோடு வந்த துறவிகளின் பிரயாணத் திட்டம் காரணமாகக் கல்கத்தாவில் மேலும் தங்க முடியவில்லை. வட நாட்டுத் தலங்கள் பலவற்றிற்கும் சென்று மன அமைதி கண்டு வருகிறேன். விரைவில் ஒரு நாள் உங்களையும் கலைக்குமாரனையும் வந்து காண்பேன். ஒன்றே ஒன்று மட்டும் உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். பழைய துயரங்களை மறந்து விடுங்கள். இனி உங்கள் மன அமைதி அனைத்தும் உங்களுடைய கலைக்குமாரனின் எதிர்காலத்தோடு பின்னியிருக்கிறது. நல்ல நம்பிக்கையோடு அமைதியாக இருங்கள். இயற்கையின் இயல்புக்கு மாறாக நாம் எதுவும் செய்ய முடியாது. பிச்சிப் பூப் பூக்க வேண்டிய இடத்தில் ரோஜா மலருமா? தாமரைக் கொடியிலே சூரியகாந்தியை எதிர்பார்க்கலாமா? அல்லித் தண்டைத் தரையிலே நட்டால் அதில் கொன்றைப் பூ மலருமா? அதனதன் போக்கிலே அதை விட வேண்டும். சிருஷ்டி தத்துவம் நம்முடைய கையில் இல்லை.

சித்திரானந்தா."

இந்தக் கடிதம் கிடைத்த மறுநாள் சுந்தரி சிவகாமிநாதனை அழைத்துக் கொண்டு கல்கத்தாவிலுள்ள ஓர் ஓவியப் பள்ளிக்குச் சென்றாள். தன்னுடைய மகனுக்கு ஓவியங்களிலே முறையான பயிற்சி கொடுக்கும்படி ஏற்பாடு செய்தாள் தாயார்!

"இதெல்லாம் பழங்கதை. இந்தக் கதையெல்லாம் உங்களுக்கு எதற்கு?"

இவ்வாறு கேட்டான் மண்டபத்து இளைஞன் லாலாவையும் என்னையும் பார்த்தபடியே!

"தம்பி! இந்தக் கதைகளையெல்லாம் நீங்கள் சொன்ன பிறகுதான், யார் யார் எவர் எவர் என்று எங்களுக்கு இனந் தெரிய ஆரம்பித்திருக்கிறது. என்றாலும் சுடலையாண்டியைப் பற்றி மேற்கொண்டு ஒன்றுமே சொல்லவில்லையே நீங்கள். கல்கத்தாவிலே வில்வநாதனையும் செண்பக சுந்தரியையும் குடியேற்றி விட்டு அவர் எங்கே சென்றார்?" என்று கேட்டார் லாலா.

இளைஞன் சொன்னான்:

"வில்வநாதனையும் சுந்தரியையும் கல்கத்தாவிலே குடியேற்றி விட்டு ஊருக்குத் திரும்பிய சுடலையாண்டி மன அமைதியின்றிச் சிலநாள் இந்தச் சிங்கம்புத்தூர் வட்டாரத்திலேயே வலைய வந்தார். அவருடைய சகாக்கள் சிலர் வேறு சில வழக்குகளிலே விசாரணைக்கு உள்ளாகி அங்கங்கே பிரிந்து கலைந்தார்கள். வன வீடும் அதன் உடைமைகளும் பறி போயின! ஜமீன் ஒழிப்பு சம்பந்தமான அரசாங்க ஏற்பாடுகள் செவ்வனே திட்டமாகி வந்ததால், ஜமீந்தார்களின் போக்கிலும்,

ஒரு பெரிய மனமாற்றம் ஏற்பட்டுக் கொண்டு வந்தது. இந்நிலையில் கடலையாண்டியைப் பற்றி அதிகமாகக் கவலைப்படுவதற்கு யாரும் இல்லை. ஆனால் அவர் மட்டும் ஒரு மனிதரைச் சந்திப்பதில் மிகுந்த ஆவலோடு இருந்தார். அது யாரென்று நினைக்கிறீர்கள்? இந்த விபரீதங்களுக்கு எல்லாம் ஆணிவேராக இருந்த வல்லாள வேலர்தான்! அவரைச் சந்தித்து மனத்தின் சுமையை இறக்கி விட வேண்டும் என்று ஒரு ஆசை அவருக்கு இருந்தது. அந்த ஒரு ஆசை நிறைவேறி விட்டால் பிறகு கடலையாண்டி எங்காவது தேசாந்திரம் கிளம்பி விடலாம் என்று எண்ணினார். எனவே இதற்குரிய ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார் கடலையாண்டி.

திருக்குற்றாலத்தில் ஆண்டுதோறும் சாரல் காலத்தில் தமிழ் நாட்டுப் பிரமுகர்கள் வந்து தங்கி, ஒரு வருஷத்துக் களைப்பையெல்லாம் ஒரு மாதத்தில் போக்கடித்துக் கொண்டு செல்வதை, நீங்கள் அறிவீர்கள் அல்லவா? சிங்கம்புத்தூர் . பிரமுகர்களும் இரண்டு மாதங்கள் அவர்களுக்குச் சொந்தமான பங்களாவில் சாரல் காலத்தில் தங்குவது வழக்கம். கடலையாண்டி ஊர் திரும்பிய சமயம் குற்றாலத்தில் சாரல் காலம்! எனவே ஒரு நாள் மாலை நேரத்தில் வல்லாளவேலர் ஐந்தருவிப் பாதையில் தனியாகக் காற்று வாங்கிக்கொண்டே நடந்து போய்க் கொண்டிருந்தபோது, அவருக்கு எதிரிலே தோன்றினார் கடலையாண்டி! வல்லாள வேலருக்கு முதலில் கடலையாண்டியை அடையாளம் தெரியவில்லை. பழைய கிருதாவும் மீசையும் இருந்த இடத்தில் இப்பொழுது பெரிய தாடி வளர்ந்திருந்தது. அது மட்டுமில்லை. எந்நேரமும் விகடமும் குறும்பும் பளிச்சிட்டுக்கொண்டிருந்த கடலையாண்டியின் விழிகளிலே இப்பொழுது ஒரு சாந்தமும், துயரத்தினால் ஏற்பட்ட ஒரு நிதானமும் மிகுந்தன. அதுமட்டுமில்லை. முன்னைப் போல் 'கிறுதக்கான' பேச்சு இப்போது இல்லை.

''எசமான்!'' என்று கூப்பிடுவதற்குப் பதிலாக, ''வல்லாளவேலரய்யா!'' என்று கூப்பிட்டுக் கொண்டு அவருக்கு எதிரே நின்றார் கடலையாண்டி.

''என்னைத் தெரியவில்லையா? நான்தான் கடலையாண்டி!'' என்றதும் வல்லாள வேலருடைய உடம்பு பதறியதைக் கண்டு, மிகுந்த நிதானத்தோடு அவரைச் சரிப்படுத்தினார் கடலையாண்டி.

இன்னது செய்வது என்று புரியாமல் தயங்கிக் கொண்டு நின்ற வல்லாளவேலரிடம் பக்குவமாகப் பேசத் தொடங்கி நம்பிக்கை ஊட்ட ஆரம்பித்தார் கடலையாண்டி.

''உங்களோடு வம்பு செய்ய வரவில்லை. வாதாட வரவில்லை. நீங்கள் செய்த காரியங்களை அம்பலப் படுத்தவும் வரவில்லை. இத்தனைக்குப் பிறகும் உங்களைக் காட்டிக் கொடுக்காமல் எவ்வளவு பெருந்தன்மையோடு வில்வநாதன் நடந்து கொண்டார் என்பதை ஞாபகப்படுத்தவே வந்திருக்கிறேன்!'' என்றார் கடலையாண்டி.

வல்லாளவேலருக்கு என்ன மறுமொழி சொல்வது, எப்படிச் சொல்வது என்று குழம்பியது.

''வல்லாள வேலரய்யா! நான் தேசாந்தரம் போவதற்கு முன்பு உங்களை இந்தக் கண்ணால் ஒரு தடவை பார்த்துவிட வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அந்த ஒரு நோக்கத்தைத் தவிர வேறு எதுவும் கிடையாது. உங்களைத் தீர்த்துக் கட்டுவது என்றால் என்றைக்கோ அந்த நல்ல காரியத்தை நிறைவேற்றி யிருப்பேன். ஆனால் வில்வநாதனிடம் வாக்குறுதி கொடுத்து விட்டேன். ஆகையால் அந்தப் பயம் வேண்டியதில்லை. வயது ஆகி நீங்கள் கிழவராகி மரத்திலிருந்து பழம் உதிர்வது போல உதிர வேண்டும்! அதுதான் என் ஆசை. நான் இனிமேல் வடக்கே யாத்திரை போகிறேன். மரத்திலிருந்து பழம் உதிருவதற்கு முன்னால் என்றைக்காவது ஒருநாள் அந்த வில்வநாதனை மனசினால் நினைத்து அவர் இருக்கும் திசைக்கு ஒரு கும்பிடு போடுங்கள். இல்லையென்றால் கடவுள் உங்களை மன்னிக்க மாட்டார்!''

தன்னந்தனியாக ஐந்தருவிப் பாதையிலே, தனிக்காட்டு ராஜாவாக நடந்து வந்து கொண்டிருந்த வல்லாளவேலரை இப்படி ஒரு மடக்கு மடக்கினார் கடலையாண்டி! அந்த வல்லாள ஆருக்கு முதலில் ஆத்திரம் வந்தது. பிறகு கடலையாண்டியின் வார்த்தைகளைக் கேட்கக் கேட்க ஆத்திரம் தணிந்து, நிதானம் வர ஆரம்பித்தது.

''கடலையாண்டி! அதையெல்லாம் ஏன் இப்போது கிளறுகிறாய்! எனக்கே மனசு ஒரு நிலையிலே இல்லை. எப்படியாவது ஒருநாள் அந்த வில்வநாதனுக்கு ஏதாவது ஒரு உதவி செய்ய முடிந்தால் அதுதான் எனக்கு நிம்மதி. மனசைத் திறந்து சொல்லுகிற வார்த்தை இது! அப்படி ஒரு உதவி செய்யாமல்போனால், எனக்கு என்னுடைய கடைசிக் காலத்திலே அமைதி இராது. வெளியே நாலு பேரைப் போல நடமாடுவேன். ஆனால் மனசுக்குள்ளே நிம்மதி இராது. அந்த ஒரு சந்தர்ப்பம் எப்படியாவது வரணும். அதுதான் என்னுடைய ஆசை! இப்ப

கொஞ்ச நாட்களாக இந்த எண்ணம் அடிக்கடி ஏற்பட்டு மனசை வேதனைப் படுத்தி வருகிறது!''

இப்படிச் சொன்னார் வல்லாள வேலர். கடலையாண்டி வல்லாளவேலரின் வார்த்தைகளுக்குப் பின்னும் அவருடைய குரலின் தொனியைக் கவனித்தார். ஓரளவு அதில் உண்மை ஒலித்தது. என்றாலும் பேச்சை அதோடு நிறுத்தவில்லை.

''வல்லாளவேலரய்யா! நீங்களும் நானும் இன்றைக்கோ நாளைக்கோ இந்த உலகத்தை விட்டுப் போய்விட மாட்டோம். அந்தச் சந்தர்ப்பம் எல்லாம் தவறிப் போய் விட்டது. இனிமேல் இரண்டு பேருமே பழுத்துக்கனிந்து தான் உதிரப் போகிறோம். ஆகையினாலே இப்போது நீங்கள் சொன்ன இந்த வார்த்தையை உறுதியாகச் சொல்ல முடியுமா? சொல்லுங்கள். அந்த உறுதியோடு இப்படியே வடக்கே பார்த்துப் புறப்பட்டு விடுவேன்!'' என்றார் கடலையாண்டி.

வல்லாளவேலருக்கு முகத்தில் உறுதி படர்ந்தது. கடலையாண்டியைப் பார்த்துச் சொன்னார்:

''கடலையாண்டி! நான் செய்த குற்றம் எனக்குத்தான் தெரியும்! அந்த நிலைமையிலே ஒரு வாக்குறுதி கொடுக்கிறேன். எப்பவாவது என்றாலே வில்லநாதனுக்கு ஒரு பெரிய உதவி செய்யக் கூடிய சந்தர்ப்பம் வந்தால், அப்போது முழு மனசோடு அதைச் செய்வேன். இது சத்தியம்!''

''சத்தியம் என்றால்?''

''செண்பகாயவி அம்மன் ஆணை; இது சத்தியம்!''

இந்த வாக்குறுதி வந்த மறு விநாடி கடலையாண்டி வல்லாள வேலருக்கு வணக்கம் செலுத்தி விட்டு அங்கிருந்து புறப்பட்டார். பல இடங்களுக்கும் தீர்த்த யாத்திரை சென்றார். துறவிகளோடு சேர்ந்து வடநாட்டுத் தலங்கள் பலவற்றிற்கும் பிரயாணம் போனார். வாழ்வில் பற்றோ பிடிப்போ இல்லாமல், மனத்தின் துயரங்களையெல்லாம் புண்ணிய நதிகளிலே கழுவினார். சந்நியாசிகளின் நல்லுரைகளை நாள்தோறும் செவிமடுத்தார். துறவிகளின் கூட்டத்திலே சேர்ந்து அவர்களுடைய ஆசாரங்களையெல்லாம் கற்றார். கடைசியில் அவரும் ஒரு துறவியாகவே ஆகி விட்டார்!

நல்ல கூட்டுறவினால் அவருக்கு ஞானக் கல்வி மேலும் மேலும் வளர்ந்தது.

எப்படியோ ஆரம்பித்த வாழ்வு எப்படியெல்லாமோ மாறுதல்கள் அடைந்தது. முடிவில் இந்த உலகில் எல்லாரும் எப்போதும் நலமாக வாழ வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் மனத்தினால் இறைவனை வழிபடுவதும், சென்ற இடங்களில் துயரப்படுகிறவர்களுக்கு ஆறுதல் கொடுப்பதுமாக ஒரு புண்ணிய வாழ்வு வாழ்ந்து வருகிறார் சித்திரானந்தர்!''


இளைஞன் இவ்வாறு சொல்லி முடித்ததும் லாலா கேட்டார்:

''தம்பி, சித்திரானந்தர் என்ற அந்தத் துறவிதான் பழைய கடலையாண்டி என்பதைப் புரிந்து கொண்டோம். ஆனால் திரும்பவும் வருவதாகச் சொல்லிப் போனவர் ஏன் வரவில்லை? எப்பொழுதாவது அவர் மறுபடியும் செண்பக சுந்தரியையும் அவருடைய புதல்வனையும் கல்கத்தாவிலே சந்தித்தாரா....?''

''சந்தித்தார்! சில ஆண்டுகள் கழித்தே சந்தித்தார். அப்படி அவர் சந்தித்திருக்கா விட்டால் சுந்தரியும் அவருடைய மகனும் மீண்டும் சென்னைக்கு வந்திருக்க முடியாது! அது மட்டுமில்லை. இன்றைக்கு இங்கே இந்தத் தாமிரவருணி ஆற்றின் மணலிலே சந்தித்து, இப்படியெல்லாம் நாம் மூவரும் பேசிக் கொண்டிருப்பதற்குக் கூடக் காரணம் சித்திரானந்தர் தான் என்று நான் நினைக்கிறேன்!'' என்று கூறிப் புன்முறுவல் செய்தான் மண்டபத்து இளைஞன்! (தொடரும்)



அவள் ஒரு கல்ஸாணு குழந்தை



கொழு கொழுவென்ற...வலுவான கைகால்களமைந்த... உண்மையிலேயே ஓர் அழகிய மதலை!...கொண்டாடத்தகு கன்னக்குழிவுகளுடன் உருண்டு திரண்ட உடற்பூரிப்பு... வேடிக்கை மற்றும் சுறுசுறுப்புடன் கும்மாளமடிக்கிறது... அமைதியான திருப்தியுடன் பூரண நலத்தில் ஆனந்தமாக புன்னகை புரிகிறது! அவளின் பெருமிதமுடைய அன்னை, தன் குழந்தையின் உறுதியான கைகால்கள்...அவளின் கொழு கொழுவென்ற வளர்ச்சி இவற்றிற்காக, வைட்டமின் சிறப்புறச் சேர்ந்த கால்சியம் கொண்ட "கல்ஸாணு-டி"க்கு நன்றி செலுத்துகிறாள். அவள் கருவுற்றிருந்த மாதங்களின் போதும்—தன் பெருமை கொள் களிப்பின் செல்வத்தை அரவணைக்கும்போதும் ஒழுங்காக "கல்ஸாணு-டி" உட்கொண்டு வந்தாள்—"கல்ஸாணு-டி" அவள் குழந்தைக்கு வளரும் வயதில் வலுவான எலும்புகளும் பற்களும் உருவாக உதவும்.

கல்ஸாணு-டி

வைட்டமின் தீவிரச்சேர்க்கையுடைய கால்சியம்

கருவுற்றிருக்கும் தாய்மார்கள், குழந்தையை அரவணைக்கும் அன்னைகள் மற்றும் வளரும் குழந்தைகள் இவர்களுக்கு ஏற்றது.

C.P.S. 54.



இவர்களைப் பார்த்ததுமே உங்கள் சமூகப் பாடத்தில் பார்த்த படத்தின் ஞாபகம் வருகிறதல்லவா? யார் இவர்கள்? எஸ்கிமோக் குடும்பத்தினர். இவர்கள் வசிப்பதோ பனிப் பிரதேசம். எங்கும் ஒரே ஐஸ்தான்! இவர்கள் வீடேகூடப் பனிக்கட்டிகளால் ஆனவைதாம்! அங்கு குளிர் எப்படி இருக்கும்? இவர்கள் இதை எப்படித் தாங்குகிறார்கள்? மார்கழி மாதத்தில் குளிருக்குப் பயந்து நீ என்ன செய்கிறாய்? காலோடு தலைவரை நல்ல கம்பளிப்போர்வையால் இழுத்து மூடிக் கொள்கிறாய். ஆனால் எஸ்கிமோ இப்படிச் செய்வதில்லை. இவர்கள் அணியும் உடையே அலாதியானது. உடலை ஒட்டியுள்ள காற்று எப்போதும் கதகதப்பாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளும் இந்த உடை. இதற்குப் 'பர்' என்று பெயர். மிருதுவான ரோமங்களோடு கூடிய தோல் உடைதான் எஸ்கிமோ அணியும் 'பர்' உடை. ஆனால் எஸ்கிமோ, உடைகளை உடலை ஒட்டி இறுக அணிவதில்லை. தொளதொளப்பாகத்தான் இருக்கும் இவர்கள் உடை. ஆனால் குளிர்ந்த காற்று உள்ளே போகாது. கதகதப்பான காற்று வெளியே வராது. 'டிரௌஸர்'களின் முனை 'பூட்ஸ்'களுக்குள் செருகப் பட்டிருக்கும். இந்த டிரௌஸர்களுக்கு மேல் ஒரு 'பர்கோட்' அணிந்திருப்பான் எஸ்கிமோ. இதற்குப் 'பார்கா' (Parka) என்று பெயர். இதன் உட்புறமும் 'பர்'தான். இதனோடு தலையை மூடும் ஒரு தொப்பியும் இணைக்கப்பட்டிருக்கும். கழுத்தைச் சுற்றி மூடி முகம் மட்டும் தெரியும்படி பிடிப்பாக இருக்கும் இது. குளிர்ந்த காற்று உள்ளே போகாது.





கண்டுபிடியுங்கள்


பட்டு பாடம் படிக்கத் தோட்டத்துக்குப் போனாள். தனிமையில் இருந்து பாடங்களை நன்கு படிக்க வேண்டும் என்பதுதான் அவள் எண்ணம். ஆனால் அவளுக்குத் தெரியாமல் அவளோடு இன்னும் எத்தனையோ அங்கு சென்றிருக்கின்றன. இந்தப் படத்தில் பட்டுவைத் தவிர இரண்டு அணில்பிள்ளைகள், ஒரு சிங்கம், பட்டு சுவைக்க ஒரு ஐஸ் கிரீம் 'கோன்', ஓர் ஆமை, விளையாட ஒரு பொம்மை, சீல் என்ற கடல் பிராணி, பட்டுவின் இரண்டு நண்பர்கள், ஒரு கிளி, ஒரு மீன், ஒரு குல்லாய், ஓர் ஆந்தை, ஒரு பெங்குவின் பறவை, ஒரு குடை, ஒரு நாய் இத்தனையும் சென்றிருக்கின்றன. யார் எவ்வளவு சீக்கிரமாக அவைகளைக் கண்டுபிடிக்கிறார்களோ அவர்கள்தான் கெட்டிக்காரர்கள். படத்தைப் பல கோணங்களிலும் திருப்பிப் பார்க்கலாம்.

எப்படி வேலை செய்கிறது?

தண்ணீர்க் குழாய்

"டேய், ரமணி! அந்தச் சனியன் குழாயைப் பார். மூடினாலும் தண்ணீர் கொட்டிக் கொண்டேயிருக்கிறது. குழாய் ரிப்பேர்க்காரனைப் பார்த்தால் சொல்லு" என்றாள் ரமணியின் தாயார்.

"வாஷர் தேய்ந்து போயிருக்கும் அம்மா. இதற்கு அவன் எதற்கு? நானே வேறு வாஷர் வாங்கிப் போட்டுச் சரிப்படுத்தி விடுகிறேன்" என்று குழாய் ரிப்பேருக்குக் கிளம்பி விட்டான் ரமணி. அவனுக்கு எல்லாம் தெரியும். குழாயைத் திறந்ததும் தண்ணீர் கொட்டுகிறது. திருகினால் தண்ணீர் நின்றுவிடுகிறது. கொஞ்சமாகவும், அதிகமாகவும் தண்ணீர் வரும்படி செய்ய முடியும். ஆனால் தண்ணீர்க் குழாய் எப்படி வேலை செய்கிறது? அதனுள் பாகங்கள் எப்படி வேலை செய்கின்றன என்று உங்களுக்குத் தெரியுமா? இதோ அருகில் தண்ணீர்க் குழாயின் குறுக்கு வெட்டுத் தோற்றத்தைப் படமாகக் காண்பிக்கப் பட்டிருக்கிறது. பாருங்கள். தண்ணீரை விடவும் நிறுத்தவும் செய்வது தோலாலான வாஷர் (4)தான். கைப்பிடியைத் திருகித் திறந்ததும் குழாய்த் துவாரத்தின் மீது அழுந்தப் படிந்திருக்கும் வாஷர் மேலே தூக்கப் படுகிறது. உடனே தண்ணீர் (5) அந்த இடைவெளி வழியே வெளிவருகிறது. மூடும்போது வாஷர் கீழே வந்து குழாய்த் துவாரத்தில் இறுகப் பதிந்து மூடிக் கொள்ளுகிறது. இப்போது குழாயில் தண்ணீர் வருவதில்லை. இந்த வாஷர் தேய்ந்தோ பழுதுபட்டோ போனால் குழாயில் தண்ணீர் சொட்டிக் கொண்டே இருக்கும். தோல் வாஷருக்குப் பதில் ரப்பர் வாஷரும் போடலாம். வாஷரை மாற்ற மேலுள்ள நட்(3)டைக் கழற்றிக் குழாயின் மேல் பாகத்தைத் தனியே வெளியில் எடுத்து வாஷரை மாற்ற வேண்டும். சில சமயங்களில் குழாயின் மேல்புறமாகவும் நீர் பீச்சி அடிப்பதைப் பார்த்திருப்பாய். இது எதனால் தெரியுமா? 'நட்'டின் உட்புறத்தில் சணலையும் கிரீஸையும் சேர்த்து வைத்து முடுக்கி (1) யிருப்பார்கள். இது பழுதுபட்டுப் போனால்தான் இந்த நிலை ஏற்படும். இதற்கு மேலேயுள்ள திருகை(2)க் கழற்றி அதனுள்ளே வீணாகியிருக்கும் சணலை எடுத்து விட்டுப் புதிய கிரீஸ் கலந்த சணலை வைத்துத் திணித்து அடைத்து ஸ்குரூவை முடுக்கி விட்டால் தண்ணீர் பீச்சி அடிப்பது நின்று விடும். சில இடங்களில் படம் Aயில் காட்டியிருப்பது போன்ற குழாயையும் பார்த்திருப்பீர்கள். ஆணி, ஸ்குரூ இவைகளை மறைத்து ஒரு மூடி போடப்பட்டிருக்கும். இனி உங்கள் வீட்டில் குழாய் ரிப்பேரானால் நீயே அதைச் சரிசெய்து விடலாம், இல்லையா?



பள்ளிக்குப் போவோம் வாரீர்!

பள்ளிக்கூடத்தைப் பற்றித்தான் உங்களுக்கெல்லாம் தெரியும். ஆனால் உலகம் முழுவதிலும் உங்கள் பள்ளிக்கூடத்தைப் போலவே இருக்குமா என்ன? நாட்டுக்கு நாடு கல்விச்சாலை வித்தியாசப்படும். அமெரிக்காவில் வகுப்பு ஆரம்பிக்குமுன் ஒவ்வொருவரும் தங்கள் நாட்டுக்கு விசுவாசமுடையவர்களாக இருப்பதாகத் தினமும் பிரதிக்ஞை செய்துகொண்ட பிறகுதான் பாடங்களை ஆரம்பிப்பார்கள். ஆப்பிரிக்காவில் பள்ளிக்கூடம் என்று கட்டடங்கள் ஏதும் கிடையாது. மர நிழலில்தான் வகுப்புக்கள் நடக்கும். இதோ பக்கத்தில் நிற்கிறாளே ஒரு பெண்ணும் அவள் தம்பியும், இவர்கள் ஆப்பிரிக்க நீக்ரோக்கள் தான். பள்ளிக்குச் செல்லுகிறார்கள். மைக்கூட்டை எப்படி எடுத்துச் செல்லுகிறார்கள், பார்த்தாயா? உச்சந்தலையில். வேடிக்கையாக இல்லை?



கானடாவின் கடும் பனி மூடியபிரதேசங்களில் முறையான பள்ளிகள் கிடையாது. ஆறு வாரங்களுக்கு ஒரு முறை அந்தப் பகுதியில் ஒரு விசேஷ ரயில் வண்டி வரும். இதற்குப் பள்ளிக்கூட ரயில் என்றே பெயர். அந்தப் பகுதியில் இந்த ரயில் வண்டி ஒரு வாரத்துக்கு நிற்கும். குழந்தைகள் பனிப்பாதுகைகளையோ, 'ஸ்கி' என்ற சாதனத்தையோ அணிந்தபடி இந்தப் பள்ளிகளுக்கு வருவார்கள். இந்த விசேஷ ரயில் வண்டிக்குள் வகுப்பறைகள் அமைக்கப்பட்டிருக்கும். அடுத்த ஐந்து வாரத்துக்கான வீட்டுப் பாடங்களை உபாத்தியாயர் இவர்களுக்கு அந்த வார வகுப்பில் கொடுப்பார். அடுத்த முறை ரயில் அங்கு வரும்போது வீட்டுப் பாடங்களையெல்லாம் செய்து தயாராக வைத்திருக்க வேண்டும்.

பிஜித் தீவில் உள்ள பள்ளிக்கூடம் புல்லைக்கொண்டு வேய்ந்த குடிசைகளில் நடைபெறுகிறது. பள்ளி தொடங்க இங்கு மணி அடிப்பதில்லை. உள்ளே குடைந்து எடுக்கப்பட்ட ஒரு மரத் துண்டின் மீது கட்டையைக் கொண்டு தட்டுவார்கள். இதற்கு லாலி என்று பெயர். இதிலிருந்து கிளம்பும் ஒலி பல மைல்கள் வரை கேட்கும். அந்த ஒலி கேட்டு மாணவர்கள் வருவார்கள்.


காகிதப் பூக்கள்


காகிதமும் கத்திரிக்கோலும்

கத்திரிக்கோலுக்கு வேலை கொடுத்து வெகு நாட்களாகி விட்டன, இல்லையா? காகிதத்தில் விதம் விதமான பூக்கள் செய்வது ஓர் அழகான கலை. காகிதப் பூக்கொத்துக்களைக் கடைவீதியில் விற்பதைப் பார்த்திருப்பீர்களே. இதோ நீங்களே செய்யச் சில சுலபமான முறைகளைச் சொல்லித் தருகிறேன்.

வெள்ளைக் கார்ட்ரிட்ஜ் காகிதத்தில் மேலே உள்ள படத்தில் அடியில் இருப்பதைப்போல இரண்டு மடங்கு பெரிதாக வரைந்து கொள்ளுங்கள். இனி அதை அப்படியே கத்திரித்துத் தனியாக எடுத்து, வளைவுகளை அடுத்துக் கால் வட்டத்தை நோக்கிச் செல்லும் தடித்த கோடுகளின் மீதும் வெட்டிக் கொள்ளுங்கள். இனி X, Y என்று குறிப்பிட்டுள்ள பகுதியில் பசையைத் தடவி அதை அப்படியே காராபூந்திப் பொட்டலம் போலச் சுழற்றி உருட்டி எதிர் முனையோடு ஒட்டி விடுங்கள். புனல் போன்ற வடிவில் ஐந்து இதழ்களோடு கூடிய ஒரு பூ கிடைக்கும். இதழ்களை வெளிப் பக்கமாகப் பிரித்து வளைத்து மடித்து விட்டால் இப்போது அது நன்கு மலர்ந்த பூவாகி விடும்.

அடுத்தபடி அருகில் உள்ள படத்தின் மேலே உள்ள (ஆறு இதழ்) வட்ட வடிவான மாதிரியைப் போல இரண்டு மடங்கு பெரிதாக வரைந்து தனியாகக் கத்திரித்துக் கொள்ளுங்கள். நடுவில் உள்ள இரண்டு புள்ளி வட்டக் கோடுகளின் மீது கூரான ஆயுதத்தால் கீறிக் கொள்ள வேண்டும். 'ஜாமெட்ரிபாக்ஸி'லுள்ள 'டிவைடர்'ஐக் கொண்டு இதைச் செய்வது சுலபம். இனி A B. என்ற கோட்டின் மீது கத்திரித்து B முனையை அதை அடுத்த இதழின் மீது பொருந்தும்படி இழுத்துச் சுருட்டி ஒட்டி விடுங்கள். ஆறு இதழ்களோடு வெட்டிய மலர் இப்போது ஐந்து இதழ்ப் பூவாகக் கிண்ணம் போலக் காட்சியளிக்கும். இதன் இதழ்களையும் வெளிப் பக்கமாக உருட்டி






படுத்து. மலரின் காம்புகளாகப் பிளாஸ்டிக் மின்சார ஒயர்க் கம்பிகளை மலரின் நடுவில் கொடுத்து இழுத்துவிட வேண்டும். மலரின் மையத்தில் நீட்டிக்கொண்டிருக்கும் முனையைச் சீவி அதனுள்ளிருக்கும் தாமிரக் கம்பிகளைப் பிரித்து விலக்கி அதன் முனைகளை உருகிய அரக்கில் தோய்த்து எடுத்தால் அரக்கு அதில் உருண்டையாக ஒட்டிக் கொண்டு பூந் தாதுக்கள் போலக் காட்சியளிக்கும். ஒவ்வொரு மலரின் நடுவிலும் பல வர்ணக் காகிதங்களைச் சிறிய வட்ட வடிவமாகக் கத்திரித்து ஒட்டி விடுங்கள். இரு வண்ணங்களில் மலர் இன்னும் அழகாக இருக்கும்.

இனி இலைகளைச் செய்யலாமா? இரண்டு, பாதி இலைகளின் மாதிரி அருகே இருக்கிறது. தகுந்த அளவுக்கு இதை இரண்டாக மடித்துக் கொண்ட காகிதத்தின் மடிப்பை ஒட்டி வரைந்து கொண்டு கத்திரித்துப் பிரித்துப் பார்த்தால் இரண்டு முழு இலைகள் கிடைக்கும். S என்ற இடத்தில் இரட்டைக் கோடிட்ட பகுதியில் கம்பியை நுழைத்து ஒட்டி விட்டால் இலைகளைக் காம்பில் நிறுத்தி விடலாம். இதற்கு முன் இலைகளை ரூல் தடியின் கீழ் வைத்து அழுத்தி இழுத்து அதைச் சற்றே வளைவுள்ளதாக்கிக் கொள்ள வேண்டும். ஒற்றை இலையாக வேண்டுமானால் இலை மாதிரியில் பாதியை மட்டும் வரைந்து வெட்டிக் கொள்ளவும். நீளமான இலைகளுக்கு வாள்போல் நீளமாகக் காகிதத்தைக் கத்திரித்து நடுவில் கீறி மடித்துக் கொள்ள வேண்டியது தான். இப்படியே இன்னும் உங்கள் கற்பனையையும் கைத்திறனையும் உபயோகித்து இன்னும் பலவிதமான பூக்களையும் இலைகளையும் தயாரித்து வைத்துக் கொள்ளுங்கள். இப்படித் தயாரித்த பலவிதமான பூக்களைச் செண்டாக்கிச் சேர்த்து ஒரு ஜாடியில் வைத்து அழகு பார்க்க வேண்டாமா? அடுத்த வாரம் இந்தப் பூக்களை வைக்க அழகானதொரு ஜாடி செய்யும் விதத்தையும் சொல்லித் தருகிறேன். அந்த ஜாடியில் இந்தப் பூக்களை வைத்து அப்பாவின் மேஜையை அலங்கரியுங்கள்.

அசைந்து ஆடிக்கொண்டே ஆசுவாசம் பெறுங்கள். ஓய்ந்து போயிருக்கும் அவயவங்களுக்கு அதனுடைய அமைதியான அசைவு இதமாக இருக்கும். உள்வளைவு கொண்ட அதன் முதுகுப்புறம், உங்களை இன்பமாக இளைப்பாற அழைக்கிறது. அதன் மகிழ்வூட்டும் சொகுசை நீங்கள் அனுபவிக்கும்பொழுது, அதன் துணி உங்கள் உடல் வளைவுகளையெல்லாம் அணைத்துக் கொள்ளுகிறது. இந்த இன்பமான வசதியுடன், எஃகினால் கச்சிதமாகச் செய்யப்பட்டிருக்கும் இந்தச் சாய்ந்தாடும் ஈஸி சேர்கள் இடத்தை அடைத்துக் கொள்வதில்லை. அதோடு முதலில் வாங்கும் பொழுதும் பிறகு அதைப் பாதுகாப்பதிலும், செப்பனிடுவதிலும் செலவு குறைகிறது.

A CRADLE OF COMFORT



ரூ. 18.00
விற்பனை வரி,
உள்ளூர் வரிகள் தனி

அதுதான்
மடக்கும்

தரத்தில் சிறந்த
அடுக்கடுக்காக

- ஒவ்வொரு உலோகப் பகுதியும் 'பாஸ்பரைஸ்' செய்யப்பட்டது. துருப்பிடிக்காமல் இருக்க, சீதோஷ்ணம் பாதிக்காத சிறந்த எனாமல் வர்ணம் வாட்டியெடுக்கும் முறையில் தீட்டப்பட்டது.
- எடுப்பான நிறங்களில் உறுதியான எளிதில் கிழியாத முரட்டுத் துணி.
- மடக்கும் உறுப்புகள் விசேஷமாகத் தயாரானவை
- ஈரத் துணியைக் கொண்டு பளிச்சென்று துடைத்து விடலாம்.

CROMELITE
MANUFACTURE

எஃகு குழாய்
பர்னிச்சரின்
விசேஷ அழகு.



தயாரிப்போர்:
க்ரோம் லைட் (இந்தியா) பிரைவேட் லிட்.
பி-35 இந்தியா எக்ஸ்சேஞ்ச் ப்ளேஸ், கல்கத்தா-1

விநியோகஸ்தர்கள்:

மெஸ்ஸர்ஸ் அடிஸன் & கோ. லிட்., சென்னை, பெங்களூர். மெஸ்ஸர்ஸ் பாவா க்ளாஸ் & க்ரோக்கரீஸ் பிரைவேட் லிட். சென்னை, பெங்களூர், எர்ணாகுளம், ஹைதராபாத். மெஸ்ஸர்ஸ் ஜெனரல் ரேடியோ & அப்ளையன்ஸஸ் லிட்., சென்னை, பெங்களூர், செகந்தராபாத். மெஸ்ஸர்ஸ் மகமத் இப்ராஹிம் & கோ. பிரைவேட் லிட்., சென்னை, பெங்களூர், ஹைதராபாத். மெஸ்ஸர்ஸ் ரோனியோ லிட்., சென்னை, ஹைதராபாத். மெஸ்ஸர்ஸ் ஸ்பென்ஸர் & கோ லிட்., 1/153, மவுண்ட் ரோடு, சென்னை.

அத்தியாயம் இருபத்து மூன்று

பல்லவபுரச் சாலையிலே...?



பத்தினிக் கோட்டம்

ஜெகசிற்பியன்

ஆலம்பாக்கத்துக்கு வடப்புறத்தே நீலாம்பரமாக விசாலித்துக் கிடந்த மிகப் பெரிய ஏரியின் கிழண்டைக் கரை யோரம் — தாழம்புதரை ஒட்டிச் சென்ற கொடிப் பாதையொன்றில்— சோர்வுடன் நடந்து கொண்டிருந்த கோவிந்தவர்மன் சட்டென்று நின்று, "இளங்காரி! நாம் எதிர்பார்த்தது போல் எதுவும் நடக்கவில்லை என்றா சொல்கிறாய்?" என்று, பலமுறை கேட்ட கேள்வியையே மீண்டும் கேட்பது போன்ற ஓர் அழுத்தத்துடன் கேட்டான்.

உடம்பெல்லாம் கண்ணாகச் சுற்று முற்றும் பார்த்தபடி பின்னால் வந்து கொண்டிருந்த ஆபத்துதவி வீரனை இளங்காரிக்குடையான், "ஆம், இளவரசே! இன்று காலை என் அன்னையைச் சந்தித்து விசாரித்து அறிந்து வந்த விவரத்தையே தங்களிடம் கூறினேன்" என்றான் பணிவும் தணிவுமான குரலில்.

கோவிந்தவர்மன் இதைக் கேட்டு யோசனையில் ஆழ்ந்தவனாய் மேலே நடந்தான். அவனுடன் விநயமாக நடந்துகொண்டே தொடர்ந்து சொன்னான் இளங்காரிக் குடையான்: "சோழ இளவரசியாரிடமிருந்து வேங்கி இளவரசி அந்தப் பட்டோலையைக் கைப் பற்றிச் சென்றதால் பல விபரீத விளைவுகள் ஏற்படப் போகின்றன என்று நாம் எதிர்பார்த்தோம். ஆனால், அப்படி எதுவுமே இதுவரையில் நடைபெறாமல், அவ்விஷயம் கிணற்றிலே கல்லைப் போட்டமாதிரி அமுங்கிப் போய் இருப்பதை நினைக்க ஆச்சரியமாகவே இருக்கிறது."

மூன்று தினங்களுக்கு முன்னால் சோழ இளவரசி இளங்கோப்பிச்சியிடமிருந்து வேங்கி இளவரசி உத்தமசீலி, தன் பட்டோலைச் சுருளைத் தந்திரமாகப் பெற்றுச் சென்றாள் அல்லவா? அந்தச் சம்பவம் வெளியே நடந்துகொண்டிருந்த அதே நேரத்தில், வீட்டுக்குள்ளே ஒளிந்திருந்த பல்லவ இளவரசனும், ஆபத்துதவி இளங்காரியும் அங்கிருந்து பின்புற வாசல்வழியே மறைந்து வெளியேறி, ஓர் இடையனின் சிறு குடிலில் போய்த் தங்கியிருந்து, இன்றுதான் வெளிப்பட்டு வந்திருக்கிறார்கள்.

ஏதோ சிந்தனையில் மௌனமாக நடந்து கொண்டிருந்த கோவிந்தவர்மன், "அது சரி! அந்த வேங்கி இளவரசி உறையூருக்குப் போய் விட்டாளா? அல்லது பல்லவபுரத்திலேயே தங்கியிருக்கிறாளா?" என்று புருவங்களை நெரித்துக்கொண்டு கேட்டான்.

"பல்லவபுரம் இலவந்திகைப் பள்ளியில்தான் இப்போது அவள் தங்கியிருக்கிறாள், இளவரசே!" என்றான் இளங்காரி இரகசியக் குரலில்.

"உறையூருக்குப் போவது அல்லவா அவளுடைய பயணத் திட்டம்? அதை மாற்றிக்கொண்டு பல்லவபுரத்தில் தங்கியிருக்கக் காரணம் என்ன?"

"அதுதான் எனக்கும் புரியவில்லை.."

"ஒருகால், சளுக்கியத் தளபதி மட்டும் உறையூருக்குப் போயிருக்கலாம்; அதனால் ஆந்திர இளவரசி அந்தப் பட்டோலை விஷயத்தை அவனிடம் தெரிவித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியாமலிருக்கலாம்."

"இல்லை, இளவரசே! தளபதி வில்வேலியும் இப்போது பல்லவபுரத்தில்

தான் தங்கியிருக்கிறான். அவனுடைய யோசனையின் பேரிலேயே அவள் தன் பயணத்தை நிறுத்தி, இலவந்திகைப் பள்ளியில் இருந்து வருகிறாள்.''

''அப்படியானால், உறையூரிலிருக்கும் சளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தனே ஆந்திர இளவரசியைச் சந்திப்பதற்காகப் பல்லவபுரத்துக்குப் புறப்பட்டு வருவானோ? அவனிடமும் அந்த ஓலை காணாமற் போய் மீண்டும் கிடைத்த சம்பவங்களைக் கூறி விரிவான நடவடிக்கைகள் எடுக்கக் காத்திருக்கிறார்களோ?''

''எனக்கு அவ்வாறு தோன்றவில்லை. ஏனென்றால், இம்மாதிரி காரியங்களைத் தானே சாதித்துத் தன் மன்னனிடம் நல்ல பெயர் சம்பாதித்துக் கொள்ள வேண்டுமென்ற துடிதுடிப்போடு இருப்பவன் வில்வேலி. இந்தச் சந்தர்ப்பத்தை விட்டு விட்டு, விக்கிரமாதித்தனின் உத்தரவுக்காகக் காத்திருப்பான் என்று கருத முடியாது.''

''நீ சொல்வதைப் பார்த்தால், ஆந்திர இளவரசி அவ்விஷயத்தை வில்வேலியிடம் தெரிவித்திருக்கவே மாட்டாள் என்றல்லவா ஆகிறது?''

''அப்படித்தான் நினைக்கத் தோன்றுகிறது, இளவரசே!'' என்று பணிவுடன் சொன்ன இளங்காரிக்குடையான் தன் கழுகுக் கண்களை அங்குமிங்குமாகச் செலுத்தித் திருப்பிக் கொண்டு மேலும் கூறினான்: ''அவள் ஒரு நாட்டு யுவராணி. மிகப் பெரிய காரியம் ஒன்றைச் சாதிப்பதற்காகத் தேசம் விட்டுத் தேசம் வந்திருப்பவள். அவளுடைய அறிவிலும் திறமையிலும் மிகுந்த நம்பிக்கை வைத்தே சளுக்கிய விக்கிரமாதித்தன் அவளை இங்கு வரவழைத்திருக்கிறான். இந்நிலையில், அவள் தான் செய்யும் தவறுகளையோ தன்னிடமுள்ள பலவீனங்களையோ வெளிப்படையாகச் சொல்லி அவற்றுக்குப் பரிகாரம் காண முயலுவாளா? அப்படி முயன்றால் அது அவள்மீதே நம்பிக்கையற்ற அபிப்பிராயத்தை உண்டு பண்ணி விடுமே! இதை உத்தேசித்துத்தான் அவள் அந்த விஷயத்தை வில்வேலியிடம் தெரிவிக்காமல் மறைத்து விட்டிருக்கிறாள் என்று எனக்குப் படுகிறது. இப்படி நான் நினைப்பதற்குக் காரணம் இல்லாமலுமில்லை. அன்று நம் சோழ இளவரசியாரிடம் அந்தப் பட்டோலை இருப்பதை அவள் நேருக்கு நேர் பார்த்தும், அதனை உடனடியாக அவரிடமிருந்து பறிக்கவோ, அல்லது அவருக்கு அது கிடைத்த விவரத்தை விசாரிக்கவோ செய்யாமல், அங்கிருந்து நேரே புறப்பட்டுப் போய், அப்புறம் தன் காவல் வீரனை அனுப்பிப் பெற்று வரச் செய்திருக்கிறாள். அதுவும், அந்த ஓலையைத் தான் கை மறதியாய்க் கொடுத்து விட்டதாக ஒரு சௌந்தர்யப் பொய்யையும் கூறியிருக்கிறாள். இது தவிர, தன்னுடைய சிவிகையையும், தான் கொண்டு வந்த முக்கியமான ஓலையையும் கடத்திச் சென்றவர்களை உடனடியாகக் கண்டு பிடிக்கக் கூடிய ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்தும் அதைப் பயன்படுத்திக் கொள்ளாமல் ஒதுங்கிப் போய்விட்டிருக்கிறாள். அவள் நினைத்திருந்தால் அந்தக் கணமே இளங்கோப்பிச்சியைச் சிறைப் பிடித்து, அவர் தங்கியிருக்கும் இல்லத்தையும் சோதனையிடுமாறு தன் காவல் வீரர்களுக்குக் கட்டளையிட்டிருக்கலாம். அவள் அவ்வாறு செய்யாமல் போனதற்கு, நான் முதலில் சொன்ன காரணத்தைத் தவிர வேறென்னவாக இருக்க முடியும்?''

கோவிந்தவர்மன் அவனை வியப்புடன் திரும்பிப் பார்த்தான். பணிவும் குழைவுமாகத் தலைகுனிந்து வந்த இளங்காரிக்குடையானோ தன் பேச்சை நிறுத்தாமல் தொடர்ந்து சொன்னான்: ''ஆனாலும் இளவரசே! இதனாலெல்லாம் அந்தச் சம்பவத்தை அவள் அடியோடு விட்டு விடுவாள் என்றோ, அல்லது அது பற்றி எவ்வித நடவடிக்கையும் எடுக்கச் செய்ய மாட்டாள் என்றோ நான் கூறத் தயாரில்லை. ஏனென்றால், தான் மேற்கொண்டு வந்துள்ள இலட்சியத்துக்கு இம்மாதிரிச் சம்பவங்கள் தட்டுத் தடங்கலாக அமையும் என்பதைக் கருதி — அவற்றை மேலும் வளர விடக் கூடாது என்பதற்காகத் தானே தனிப்பட்ட முறையில் கண்டுபிடிக்க முயற்சி செய்யலாம்; அப்படிக் கண்டறிந்த விஷயங்களைத் தனக்குத் தொடர்பு இல்லாத வகையிலே தளபதி வில்வேலியிடம் தெரிவித்துத் தகுந்த நடவடிக்கை எடுக்கச் செய்யலாம்....''

சட்டென்று பேச்சை நிறுத்திவிட்டுச் சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்தான் இளங்காரி. பிறகு, தான் அதிகப் பிரசங்கித்தனமாகப் பேசிவிட்டோமோ என்ற அச்சக் குறுகுறுப்புடன் பல்லவ இளவரசனைக் கடைக் கண்ணால் கவனித்தபடி சற்றே தயங்கி நடந்தான்.

அவன் சொன்னதெல்லாம் சரி என்று ஒப்புக் கொள்பவன்போல் மெல்லத் தலையசைத்துக் கொண்ட கோவிந்தவர்மன் நீண்ட பெருமூச்சு விட்டு, ''எது எப்படியிருந்தாலும்

நான் இப்போது கவலைப்படுவது எனக்காகவோ என் தலைவனார் பரமேசுவர வர்மருக்காகவோ அல்ல; ஆந்திர இளவரசியிடமிருந்து கைப்பற்றிய அந்தப் பட்டோலையின் மூலம் என் பெரிய அன்னையார் காடவன் மாதேவியை மீட்டு வரப் போட்ட திட்டம் பாழானதுமல்லாமல், எனக்காகத் தன் தந்தையைப் பிரிந்து அரண்மனைச் சுக போகங்களை யெல்லாம் ஒதுக்கித்தள்ளி அநாதைப் பெண்போல் இந்தச் சிற்றூரில் இருந்து வரும் சோழ இளவரசி இளங்கோப்பிச்சிக்கும் இன்னல் ஏற்படும்படியான ஒரு பயங்கரச் சூழ்நிலை உருவாகி விட்டதே என்பதற்காகத்தான் நான் பெரிதும் கவலைப்படுகிறேன். கடந்த மூன்று தினங்களுக்கு முன் வரையில் எங்களுடன் தோளோடு தோள் சேர்ந்து எந்தத் தியாகமும் புரியக் கூடிய உத்தம நண்பராக விளங்கி வந்த பழையாறைச் சோழரின் போக்கு திடீரென்று ஏனோ இப்போது மாறுதல் அடைந்திருக்கிறது. இந்நிலையில், அவருடைய மகளுக்கு ஏதேனுமொரு சிறு துன்பம் ஏற்பட்டாலும் அவர் என்ன நினைப்பார்? எங்களுடைய சுயநலத்துக்காக நாங்கள் அவளைப் பலியிட்டு விட்டோம் என்று எங்கள்மீது பழி சுமத்தித் தீராப் பகை கொண்டு விடுவாரே!'' என்றான் கம்மிக் கரகரத்த குரலில்.

அவனுடைய துயர மொழிகளைக் கேட்டுத் திகிலடைந்து போன இளங்காரிக்குடையான் உடம்பை வளைத்துக் கைகளைப் பிசைந்து கொண்டு, ''இந்தச் சங்கடங்களுக்கெல்லாம் மூல காரணனே நான்தான்! முன்பின் யோசியாமல் முரட்டுத்தனமாகத் தங்களை வெளிவாசல் திண்ணையிலிருந்து வீட்டுக்குள் இழுத்ததால்தான் தங்கள் கையிலிருந்த அந்தப் பட்டோலைச் சுருள் தவறிக் கீழே விழவும், அதைச் சோழ இளவரசியார் எடுக்கவும், பிறகு அது ஆந்திர இளவரசியின் கண்ணில் படவுமான விபரீதங்கள் நிகழலாயின!'' என்று தன்னையே வெறுத்துக் கொள்பவனைப்போல் முணுமுணுத்தான்.

பிறகு சட்டென்று நிமிர்ந்து, ''இளவரசே! நான் செய்த இந்தத் தவற்றினால் தங்களுக்கோ, சோழ இளவரசிக்கோ ஒரு சிறு துன்பம் நேர்ந்தாலும் என் கடமையிலிருந்து வழுவிய குற்றம் புரிந்தவனாகக் கருதி, நேரே கருக்கிலமர்ந்தாளின் சந்நிதிக்குப் போய்த் 'தலைத் தண்டம்' செய்து கொள்வேன்; இது சத்தியம்!'' என்றான் மூர்க்கமான குரலில்.

கோவிந்தவர்மன் இதைக் கேட்டு மெல்லச் சிரித்தான். ''என்ன, இளங்காரி! இவ்வளவு நேரம் ஏதேதோ புத்திசாலித்தனமாகப் பேசிக்கொண்டிருந்து விட்டு இப்போது, 'அதையெல்லாம் பேசியவன் நானல்ல' என்பதுபோல் உளற ஆரம்பித்து விட்டாயே!....'' என்று கூறி மீண்டும் நகைத்த அவன், ''அந்தச் சமயம் நீ மட்டும் அப்படிச் செய்திராவிட்டால் நான் அவ்விடத்திலேயே சளுக்கிய வீரர்களிடம் சிக்கிக்கொண்டு விட்டிருப்பேன். ஏனென்றால், அரண்மனைக் கோட்டையில் சிறைப்பட்டிருந்தபோது என்னைக் காவல் காத்து வந்த வீரர்களே, அன்றைய தினம் ஆந்திர இளவரசியை அழைத்துப் போக வந்திருந்தார்கள். சற்றே தாமதித்திருந்தாலும் அவர்கள் என்னை வெகு எளிதில் அடையாளம் கண்டு கொண்டிருக்கலாம்'' என்றான்.

''அது தெரிந்துதான் நானும் அத்தனை பரபரப்பு அடைந்து விட்டேன், இளவரசே! பெருவளநல்லூரிலிருந்து தங்களுக்குப் பாதுகாவலாக வந்த நான், வேங்கி இளவரசி அவ்வழியே சிவிகையில் சென்று கொண்டிருப்பதைக் கவனித்துத் தங்களை எச்சரிக்கைப்படுத்துவதற்காக என்னுடைய இல்லத்துக்கு விரைந்தேன். அங்கே தாங்களும் சோழ இளவரசியாரும் சித்திரத் திண்ணையில் பேசிக்கொண்டிருந்தீர்கள். தங்கள் பேச்சுக்கிடையே குறுக்கிட்டுச் சிரமம் தர விரும்பாமல் பின்புற வழியே இல்லத்தினுள் சென்றேன். நான் சந்தேகப்பட்டதுபோல் வேங்கி இளவரசியின் சிவிகை என் வீட்டெதிரே வந்து நின்றது. பேச்சு மும்முரத்தில் இருந்த நீங்கள் அதைக் கவனிக்கவில்லை. இந்நிலையில் எனக்கு வேறெதுவும் வழி தோன்றாமற் போகவே சடாரென்று பாய்ந்து தங்கள் கையைப் பற்றி வீட்டுக்குள் இழுத்துக் கொண்டேன்....'' என்று மென்று விழுங்கியபடி சொன்னான் இளங்காரி.

சற்று நேரம் மௌனமாகச் சென்ற கோவிந்தவர்மன், ''அதெல்லாம் சரிதான்; ஆனால், இளங்கோப்பிச்சி அந்தச் சமயத்தில் இன்னும் கொஞ்சம் முன் யோசனையோடு நடந்து கொண்டிருக்கலாம் என்றே எனக்குத் தோன்றுகிறது!'' என்றான் சலிப்படைந்த குரலில்.

''அதாவது, அந்தப் பட்டோலையைக் கீழேயிருந்து எடுத்த சோழ இளவரசி, அதை அத்தனை மிதப்பாக வைத்திருந்தது தவறு என்கிறீர்களா? அவருடைய நிலையில் வேறு யார் இருந்

தானும் அப்படித்தான் நடந்துகொண்டிருக்க முடியும். ஏனென்றால், அவ்வோலையில் என்ன சேதி இருக்கிறதென்பதோ, அது வேங்கி இளவரசியிடமிருந்து கவர்ந்து வரப்பட்டதென்பதோ அவருக்குத் தெரியாது. நாங்களும் அதை அவரிடம் தெரிவிக்கவில்லை. எனவேதான் அவ்வோலையை மறைக்க வேண்டுமென்று அவருக்குத் தோன்றவில்லை.''—படபடப்புடன் இவ்வாறு கூறிய இளங்காரிக்குடையான் மேலும் சொன்னான்: ''ஆனாலும், சளுக்கிய வீரன் வந்து அந்தப் பட்டோலையைக் கேட்டதுமே அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்ட அவர், அவ்விக்கட்டான நிலைமையைச் சமா



ளித்த விதத்தை இப்போது நினைத்தாலும் எனக்கு மிகவும் ஆச்சரியமாகவே இருக்கிறது.''

''ஆமாம்!'' என்று தலையாட்டிக் கொண்ட கோவிந்தவர்மன், ''அவள் அந்த ஓலையைச் சளுக்கிய வீரனிடம் அப்போது கொடுக்க மறுத்திருந்தால், அங்கிருந்து நாம் தப்பிச் செல்லவே முடிந்திராது'' என்றான்.

''அது மட்டுமல்ல, இளவரசே! தன்னிடமிருந்து காணாமற் போன பட்டோலை இந்தப் பெண்ணிடம் எப்படி வந்தது என்பதைத் தந்திரமாக அறியும் பொருட்டே, அதைத் தான் கைதவறிக் கொடுத்து விட்டதாகச் சொல்லியனுப்பியிருக்கிறான் வேங்கி இளவரசி. அவளுடைய அந்தக் கூற்றை நம் சோழ இளவரசியார் மறுத்து, அங்கு வந்த யாரோ ஒரு கூலவாணிகன் மறந்து விட்டுப் போனதை எடுத்து வைத்திருந்ததாகச் சொல்லியிருக்காவிட்டால், அவர் மீது ஏற்பட்ட சந்தேகம் அப்போதே உறுதிப்பட்டுப் போயிருக்கும். அதனால் அவருக்கு மட்டுமல்ல, நமக்கும் ஆபத்து நேர்ந்திருக்கும்....''

இளங்காரிக்குடையான் திடுமெனப் பேச்சை நிறுத்தி விட்டு அவசரமாக அங்குமிங்கும் திரும்பிப் பார்த்தான். முன்னால் நடந்து கொண்டிருந்த கோவிந்தவர்மனோ அவனுடைய அந்தப் பரபரப்பைக் கவனியாமல், ''இளங்காரி! இன்றோடு மூன்று நாட்களாகியும் சந்திரலேகைச் சிற்றரசரைப் பற்றிய தகவல் எதுவுமே தெரியவில்லையே? அவருக்காக நாம் இங்கே காத்திருக்க, அவர் பெருவளநல்லூரிலிருந்து நேரே பழையாறைக்குப் போய் விட்டாரா என்ன?'' என்று கவலையுடன் கேட்டுக்கொண்டே ஏரிக்கரையோரமிருந்த ஒரு வெண்ணாவல் மரத்தடியில் உட்காரப் போனான்.

பின்னால் வந்த இளங்காரி சடாரென முன்னால் பாய்ந்து பல்லவ இளவரசனைப் பிடித்து அப்பால் தள்ளிவிட்டுத் தன் இடையில் செருகி வைத்திருந்த குறுவாளை வெடுக்கென்று உருவி அந்த வெண்ணாவல் மரத்தின் வலப் பக்கவாட்டை நோக்கி வேகமாகச் சுழற்றி வீசினான். அதே சம

யம். அங்கிருந்து மற்றொரு கத்தி 'விர்'ரெனச் சுழன்று வந்து இளங்காரி எறிந்த குறுவாளுடன் பளீரென்று மோதவே, தீப்பொறி உதிர அவ்விரு கத்திகளும் தெறித்துப் போய்த் தொலைவில் விழ்ந்தன.

இந்த மின்னல் வேகப் பயங்கர நிகழ்ச்சியால் மிரண்டு நின்ற கோவிந்த வர்மன் பரபரப்போடு நிமிர்ந்து நோக்கினான்.

''மகிழ்ச்சி, இளங்காரி! மெத்த மகிழ்ச்சி! எங்கள் பல்லவ இளவரசருக்கு ஆபத்துதவியாக இருக்க, நீயே தகுதி வாய்ந்தவன்!'' என்று கடகடவெனச் சிரித்துக் கூறிக்கொண்டே அந்த வெண்ணாவல் மரத்தின் பின்னாலிருந்து வெளிப்பட்டார் பெரும்பிடுகு முத்தரையர்.

அவரைக் கண்டு அதிர்ச்சியுற்று நடுங்கிய இளங்காரிக்குடையான் கூனிக் குறுகி ஒதுங்கிப் போய் நின்று, ''மன்னியுங்கள், ஐயா! யாரோ சளுக்கிய ஒற்றன் அங்கு ஒளிந்திருப்பதாக எண்ணி அவசரப்பட்டுக் கத்தியை எறிந்து விட்டேன்'' என்று குழறினான்.

''கவலைப்படாதே, நீ செய்ததுதான் சரி'' என்று புன்முறுவலுடன் கூறிய முத்தரையர், ''வாருங்கள், இளவரசே! உங்களைத் தேடிக்கொண்டு அநந்தமதியின் இல்லத்துக்குப் போய், அங்கிருந்து நேரே இங்கு வந்திருக்கிறேன்'' என்றவாறு நிழல் விழுந்த ஏரிக்கரைச் சரிவில் அமர்ந்தார்.

பிரமை நீங்கி உற்சாகமடைந்த கோவிந்தவர்மன், ''நானும் உங்களை எதிர்பார்த்துத்தான் இவ்வழியே புறப்பட்டு வந்தேன், ஐயா!'' என்று சொல்லிக்கொண்டே அவர் அருகில் சென்று ஒருக்களித்து உட்கார்ந்து, ''பரமேசுவர வர்மரைப் பார்த்தீர்களா? அவர் என்ன சொன்னார்? எப்படி இருக்கிறார்? எதிர்ப்பு அணி திரட்டும் பொருட்டுத் தாங்கள் எழுதிச் சென்ற திருமுக ஓலையில் அவர் கைச்சாத்து இட்டாரா?'' என்று ஆவல் செருமிய குரலில் கேள்விமேல் கேள்வியாக அடுக்கிக் கேட்டான்.

முத்தரையரின் முகத்தில் துயரக் கறை படிந்தது. ஒரு கணம் மௌனமாக இருந்த அவர், ''அந்த விவரங்களையெல்லாம் பிறகு சொல்கிறேன், இளவரசே! நீங்கள் இங்கு வந்த காரியம் என்ன ஆயிற்று? அதை முதலில் கூறுங்கள்!'' என்றார் உயிரற்ற புன்னகையுடன்.

தொலைவில் நின்ற இளங்காரிக் குடையானை மெல்லத் திரும்பிப் பார்த்து விட்டுத் தலை குனிந்த கோவிந்தவர்மன், ''நானும் அந்த விவரங்களை அப்புறம் சொல்கிறேனய்யா!'' என்று கரகரத்தான்.

''நீங்கள் அதுபற்றி ஏதும் சொல்ல வேண்டாம்; அதையெல்லாம் நான் அநந்தமதியிடம் கேட்டுத் தெரிந்து கொண்டுதான் இங்கு வந்திருக்கிறேன்'' என்று இதமாகச் சிரித்துச் சொன்ன முத்தரையர், ''சரி; புறப்படுங்கள் இளவரசே! ஓர் அவசர காரியமாக நாம் இப்போதே பழையாறைக்குப் போயாக வேண்டும்!'' என்றவாறு எழுந்தார்.

''அவசரமாகப் போக வேண்டுமா? அப்படி என்ன அவசியம் நேர்ந்தது?'' என்று கேட்டுக்கொண்டே கோவிந்தவர்மனும் எழுந்தான்.

''முதலில் புறப்படுங்கள்; வழிச் செலவில் அந்த விவரங்களைக் கூறுகிறேன்.'' — புதர் மறைவில் விட்டு வைத்திருந்த தம் புரவியை நோக்கி நடந்தார் முத்தரையர்.

கோவிந்தவர்மன் அவர் கையைப் பற்றி நிறுத்தி, ''ஒரு 'விஷயம்....'' என்று தயக்கத்துடன் இழுத்தான்.

''சொல்லுங்கள், இளவரசே!'' என்று அன்போடு விளித்தார் பெரும்பிடுகு முத்தரையர்.

''இளங்காரியின் இல்லத்தில் சோழ இளவரசியை நீங்கள் பார்த்திருப்பீர்கள்; என்னைப் பற்றி அவள் ஏதேனும் சொன்னாளா?''

''அழுதுகொண்டே கிடக்கும் அந்தப் பெண், என்னிடம் வாய் திறந்து ஒரு வார்த்தையும் பேசவே இல்லை!''

''அவள் ஏன் அழுது கொண்டிருக்கிறாள்?....''

''பல்லவ இளவரசருக்குத் தான் ஏதோ பேராபத்து நேரும்படியான காரியம் செய்து விட்டதாக எண்ணிப் புலம்பிக் கொண்டிருக்கிறாளாம், மூன்று தினங்களாக!''

கோவிந்தவர்மன் இதைக் கேட்டு மனம் துடித்தான். அவன் கண்கள் இலேசாகக் கலங்கிச் சிவந்தன. ''ஐயா! சிறுபொழுது எனக்கு அவகாசம் கொடுங்கள். ஓடிப் போய் அவளைப் பார்த்துவிட்டு உடனே திரும்பி வந்து விடுகிறேன்.''

முறுவல் பூத்த முத்தரையர், 'சரி' என்று தலையசைத்தார். அங்கிருந்து வேகமாகப் புறப்பட்ட கோவிந்தவர்மன் ஏனோ சட்டென்று நின்றான். அந்த ஏரிக் கரையோரம் தழைத்துக் கிளைத்து வளர்ந்திருந்த தாழம்புதர்களின்மேல் அவனுடைய பார்வை படர்ந்து சென்றது. பச்சைப் பசே

ஆனந்தமான வாழ்க்கைக்கு



காட்பரீஸ்
சாக்கலேட்...

மிட்டாய்
மட்டுமல்ல-
ஒரு
உணவும்கூட



லென்று கீற்றிலைகளைச் சரியவிட்டிருந்த ஒவ்வொரு தாழங் கிளையிலும் பொன் வண்ணத்துப் பூமடல்கள் நறுமணம் கமழ நிமிர்ந்து நிற்பதைச் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்த அவன், ''என்ன அழகான மலர்கள்! இளங்கோப்பிச்சிக்குத் தாழம்பூ என்றால் கொள்ளைப் பிரியம்!'' என்று கிறக்கக் குரலில் கூறிக் கொண்டேபோய், கர்ப்பம் வெடிக்காத ஒரு பூமடலை வளைத்துப் பறிக்கத் தாவினான்.

இதைக் கண்ட முத்தரையர் கடகடவெனச் சிரித்து, ''ஹா ம்! இளவரசருக்குத் தாழம்பூவைக் கண்டதும் அவருடைய காதலியின் விருப்பம் நினைவுக்கு வருகிறது: ஆனால் நானோ, கருக்கு முட்களுடன் விளங்கும் இந்தத் தாழங் கீற்றிலைகள் அத்தனையும் சளுக்கிய விக்கிரமாதித்தனின் நெஞ்சைக் கிழித்தெறியக்கூடிய போர் வாட்களாக இருக்கக் கூடாதா என்று ஏங்குகிறேன்!'' என்றார் குத்தலாக.

கோவிந்தவர்மனின் உடல் ஒரு குலுங்குக் குலுங்கியது. கையிலிருந்த தாழம்பூ மடலை வீசியெறிந்து விட்டு அநந்தமதியின் இல்லத்தை நோக்கி விரைந்தான். சற்றுத் தொலைவில் கைகட்டி நின்று கொண்டிருந்த இளங்காரியைப் பார்த்து முத்தரையர் ஏதோ சமிக்ஞை செய்யவே, அவனும் அங்கிருந்து இளவரசனைப் பின்தொடர்ந்து சென்றான்.

களைப்பும் சோர்வுமாக இடுப்பின் மேல் இரு கைகளையும் ஊன்றிக் கொண்டு நின்ற முத்தரையர், அவ்விருவரும் தம் கண்ணிலிருந்து மறையும் வரையில் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, அந்த வெண்ணாவல் மரத்தடியில் போய் உட்காரத் திரும்பியவர், எங்கோ வெகுதூரத்தில் இரண்டு குதிரைகள் வேகமாக ஓடிவரும் குளம்பொலி கேட்டுச் சட்டென்று நிமிர்ந்து நோக்கினார்.

அந்த ஏரிக்கரைக்குத் தென்மேற்கே, பல்லவபுரத்திலிருந்து தவத்துறைக்குச் செல்லும் பெருவழியொன்றில், யாரோ இருவர் முன்னும் பின்னுமாகக் குதிரைகளைச் செலுத்தி வந்து கொண்டிருந்தனர். கோட்டைச் சுவர் போல் அடர்ந்து வளர்ந்திருந்த தாழம் புதருக்குப் பின்னால் நின்றுகொண்டிருந்த முத்தரையர், அவர்களைச் சரியாகப் பார்க்க முடியாமல் தவித்தார். பிறகு, சட்டென்று திரும்பி உயரமான ஏரிக்கரைக்குத் தாவிப் போய் அங்கிருந்தவாறு அவ்விருவரையும் கூர்ந்து நோக்கினார்.

அடுத்த கணம், அவர் உள்ளமும் உடலும் ஒருசேர அதிர்ந்து குலுங்கின. அளவுக்கு மீறிய பரபரப்புடன் அப்படியும் இப்படியுமாகச் சாய்ந்து அவர்களை மீண்டும் கவனித்தார்.

சந்தேகமில்லை; முன்னால் பழையாறைச் சோழர் குதிரையைச் செலுத்திக்கொண்டு வர, அவருக்குப் பின்னால் அவரைப் பாதுகாப்பவன்போல் ஈட்டி ஏந்தியவண்ணம் ஒரு சளுக்கிய வீரன் குதிரைமேல் வந்து கொண்டிருந்தான்! அவர்கள் பல்லவபுரத்திலிருந்து தவத்துறை வழியே பழையாறைக்குப் போகிறார்கள் என்று தோன்றியது!

முத்தரையருக்கு ஒன்றும் புரியவில்லை. 'இவர் ஏன் பல்லவபுரத்துக்குப் போய் வருகிறார்?' என்று எண்ணிக் குழம்பிக் கொண்டே நின்றார் அவர். இதற்குள் அவ்விரு புரவிகளும் தொலை தூரத்துக்கு அப்பால் சென்று மறைந்து விட்டன.

அத்தியாயம் இருபத்துநான்கு

பழையாறைக்கு அழைப்பு!


அஷ்டபாயா கட்டிலின் பூம்பஞ்சணையில் படுத்துச் சுகம் கண்டு வளர்ந்தவளான சோழ இளவரசி இளங்கோப்பிச்சி, அந்தச் சின்னஞ்சிறு அறையிலே சிறியதொரு நார்க் கட்டிலில், வாடித் துவண்ட பூமாலையெனச் சாய்ந்து விம்மி விம்மிப் புலம்பிக்கொண்டிருந்தாள்.

''இளவரசி!''

திடுக்குற்றுத் தலை தூக்கினாள் இளங்கோப்பிச்சி.

''என்ன இது, சிறுபிள்ளைத்தனம்! ஏன் இப்படி அழுது கொண்டிருக்கிறாய்?'' என்று அன்பும் பரிவும் குழையக் கேட்டுக் கொண்டே அறைக்குள் பிரவேசித்த கோவிந்தவர்மன், அவளை ஆதரவுடன் மெல்லத் தூக்கி உட்கார வைத்துத் தானும் அவள் அருகில் அமர்ந்தான்.

பரபரப்புடன் கண்களைத் துடைத்துக் கொண்டு அவனை மிரள மிரளப் பார்த்து விழித்த இளங்கோப்பிச்சி, ''வந்து விட்டீர்களா, இளவரசே! உங்களுக்கு ஒன்றும் ஆபத்து நேரவில்லையே?'' என்று நடுங்கித் துவளும் குரலில் கேட்டாள்.



கோவிந்தவர்மன் அவளேயே ஒரு விநாடி உற்றுப் பார்த்து விட்டுக் கலகலவெனச் சிரித்தான். ''எனக்கு ஆபத்து நேர்ந்திருந்தால் இங்கே எப்படி நான் வந்திருக்க முடியும்?''

அவள் தன் இரு கரங்களாலும் நெஞ்சைப் போர்த்திக்கொண்டு நிம்மதியாகப் பெருமூச்சு விட்டாள். மறுகணமே அவளது மதிவதனம் வெளிறிச் சிறுத்தது. கண்களில் அருவியென நீர் வழிந்தது. ''இல்லே, இல்லே! நான் செய்த அந்தத் தவற்றினுல் தங்களுக்கு இன்றில்லா விட்டாலும், என்றுவது ஒரு நாள் ஏதேனுமொரு பேராபத்து ஏற்பட்டே தீரும்!'' என்று பொருமினுள் அவள்.

''என்றே ஒரு நாள் ஏற்படப் போகும் ஆபத்துக்கு இன்று ஏன் இப்படி அழுது புலம்புகிருய்? அந்த ஆபத்து நேர்ந்தபின் அழுவதற்காகவேனும் இப்போதே கொஞ்சம் கண்ணீரைச் சேமித்து வைத்துக் கொள்வது நல்லதில்லேயா?'' என்று குறும்பாகக் கூறிச் சிரித்த கோவிந்தவர்மன், அவளது பளிங்குக் கன்னத்தில் வழிந்தோடியநீரை இதமாகத் துடைத்து விட்டுக் கொண்டே தொடர்ந்து சொன்னுன்: ''இங்கே பார், இளங்கோப்பிச்சி! அந்தச் சம்பவங்களுக்காக நீ இந்த அளவு அஞ்ச வேண்டிய அவசியம் இல்லே. அன்று நீ நடந்துகொண்ட முறையிலும் எவ்விதத் தவறும் இல்லே. அதனுல் நமக்கு எத்தகைய இன்னலும் ஏற்படப் போவதில்லே. இன்னும் சொல்லப் போனுல், அந்த இக்கட்




உங்கள் அன்றாடத் தொல்லைகள், கவலைகளினால் ஜீரண வேலை பாதிக்கப்படுவது சகஜம். அதனால் சோர்வு ஏற்படுகிறது. அற்ப விஷயங்களிலும் ஆத்திரமுண்டாகி, நிம்மதியிழந்து, பொருமுகிறீர்கள். நீங்கள் பழைய உடல்வலத்தை மீண்டும் பெற வேண்டியது அவசியம். க்ருஷன் ஸால்ட்ஸ் சாப்பிட்டு உடல்நலக் குறைவிலிருந்து பாதுகாப்பு பெறுங்கள். உடல் உறுப்புகள் நன்கு செயலாற்ற உதவும் முக்கியமான தாதுப்பொருள்களும், உப்புக்களும் வேண்டிய தகுதியான அளவில் கலந்துள்ளது க்ருஷன் ஸால்ட்ஸ் ஒன்றே

தசைகள், மற்றும் கணுக்களில் வலி, கீல்வாதம், இடுப்பு வாதநோய், தொடையில் ஏற்படும் வாதநோய், படை மற்றும் இதர சரும வியாதிகள் ஆகியவற்றுக்குக் காரணம் ரத்தத்திலுள்ள அசுத்தங்கள். அவற்றை அகற்ற உங்கள் தேக நிலைக்குத் தெம்பூட்டுவது க்ருஷன் ஸால்ட்ஸ். காலையில் நீங்கள் அருந்தும் பானத்துடன் ஒரு ஸ்பூன் அளவு க்ருஷன் ஸால்ட்ஸைக் கலந்து சாப்பிடுங்கள்.

க்ருஷன் ஸால்ட்ஸ்
மட்டுமே அளிக்கக்கூடிய
7 வகைச் செய்கைகள்:-

மூத்திர கோசத்தைச் சுத்தம் செய்கிறது • கல்லீரலுக்கு வேண்டிய சுறுசுறுப்பாக்கி, வேலைசெய்யத் தூண்டுகிறது • ரத்தத்தைப் பரிசுத்தமாக்குகிறது • மலச்சிக்கல் வராமல் தடுத்து, வயிற்றைச் சுத்தப்படுத்துகிறது • ஜீரண வேலையைத் துரிதமாக்குகிறது • ஆகாரத்தை விரும்பிச் சாப்பிட உதவுகிறது • சரீரத்துக்குத் தேவையான முக்கிய உப்புக்களைச் சமநிலையில் வைக்கிறது.



சிறந்த உடல் நலம் பெறச் சாப்பிடுங்கள்
க்ருஷன் ஸால்ட்ஸ்

S.S.O. 19 TAM ஒரு நிக்கொலஸ் N தயாரிப்பு . தரத்திற்கும் தூய்மைக்கும் நீங்கள்பெறும் உத்தரவாதம்

டான சமயத்திலே வியக்கத்தக்க விதமாக உன் அறிவைப் பயன்படுத்தி நம் இருவருக்கும் நேரவிருந்த ஆபத்தைத் தகர்த்தெறிந்து விட்டாய். இனிமேல் எது வந்தாலும் சமாளித்துக் கொள்ள என்னால் இயலும்.''

கதிரவனின் ஒளிபட்டு நிமிரும் கமல மொட்டுப்போல் மெதுவாகத் தலை நிமிர்ந்த இளங்கோப்பிச்சி அவனைப் பட்டும்படாததுமாகப் பார்த்தவாறு, ''இதெல்லாம் இளவரசரின் கூற்றுப்படி சரியாக இருக்கலாம். ஆனால், பல்லவ மன்னரின் அன்னையாரைச் சிறையிலிருந்து மீட்பதற்காகத் தாங்கள் அந்த வேங்கி இளவரசியின் பட்டோலையைக் கொண்டு செய்யவிருந்த முயற்சி பாழாகி விட்டதே. அதை எப்படி நான் சரியென்று ஏற்பேன்?'' என்று நெஞ்சு உலர்ந்த குரலில் முணுமுணுத்தாள்.

கோவிந்தவர்மன் அவளுடைய பூங்கரத்தை மெல்லப் பற்றித் தன் அருகில் இழுத்துக் கொண்டு, ''ஒரு முயற்சி தோல்வியானால் இன்னொரு முயற்சியைத் தொடர்ந்து கொண்டால் போகிறது! இதற்கு ஏன் இத்தனை கலக்கம்?'' என்றான் அலட்சியமாக.

ஏதோ சிந்தனையில் மௌனமாயிருந்த இளங்கோப்பிச்சி சட்டென்று திரும்பி, ''இளவரசே! தங்களைத் தேடிக்கொண்டு சந்திரலேகைச் சிற்றரசர் இங்கு வந்து போனாரே, அவரைப் பார்த்தீர்களா?'' என்று கேட்டாள்.

''பார்த்து விட்டுத்தான் நேரே இங்கு வந்திருக்கிறேன். இன்று நாங்கள் பழையாறைக்குப் புறப்படப் போகிறோம்....'' என்றான் கோவிந்தவர்மன்.

''என் தந்தையாரைப் பார்க்கத் தானே?'' என்று கேட்டாள்.

''ஆமாம்'' என்று சொன்ன கோவிந்தவர்மன் ஒருகணம் தயங்கி விட்டு, ''உன்னையும் இங்கிருந்து அழைத்துப் போய் விடலாமா என்று யோசிக்கிறேன்....'' என்றான் இழுத்தாற் போல.

''என்னை ஏன் அழைத்துப் போக நினைக்கிறீர்கள்?''

''இனிமேலும் இந்த இல்லத்திலே நீ தங்கியிருந்தால், வேங்கி இளவரசியின் மூலம் உனக்கு ஏதேனும் சங்கடம் நேரலாம் என்று தோன்றுகிறது.''

''அப்படி ஒன்றும் நேராதென்று சற்று முன்னால் நீங்கள்தானே சொன்னீர்கள்?''

''எதற்கும் நாம் முன்னெச்சரிக்கையோடு இருப்பது நல்லதல்லவா?''

''நல்லதுதான் இளவரசே! ஆனால், நான் பழையாறைக்கு வரச் சம்மதிக்க வேண்டுமே?''

''ஏன் இப்படிச் சொல்கிறாய், இளங்கோப்பிச்சி?''

''பழையாறையைத் தவிர, வேறு எங்கு அழைத்தாலும் நான் வரத் தயார்'' என்றாள் அவள்.

''எனக்கு ஒன்றும் புரியவில்லையே!''


''உங்களுக்கு ஒன்றுமே புரியாது'' என்று கொஞ்சலும் கோபமுமாகக் கூறி அழகாக முகத்தைச் சுளித்த இளங்கோப்பிச்சி தன் பார்வையைக் கீழே தாழ்த்திக்கொண்டு, ''ஆயிரம் கட்டுக்காவலுடன் கூடிய எங்கள் அரண்மனையில் கொண்டுபோய் என்னை அடைத்து விடப் பார்க்கிறீர்களா? அங்கு போய் விட்டால் அப்புறம் தங்களைச் சந்திக்க என்னால் இயலாதே! அப்படியொரு நிலையில் அங்கே நடைப்பிணமாய் வாழ்வதைவிட, தங்களைச் சந்திக்கவும் தங்களோடு சுதந்திரமாகப் பேசவும் வாய்ப்புள்ள இந்த எளிய இல்லத்தில், எத்தகைய துன்ப துயர ஆபத்துக்களையும் சகித்துக் கொண்டு, எத்தனை காலம் வேண்டுமானாலும் தங்கியிருந்து விடுவேன்!'' என்றாள் உறுதி பாய்ந்த குரலில்.

அவளுடைய இந்த ஆழ்ந்த அன்பில் தோய்ந்த பேச்சைக் கேட்டு உள்ளம் கிளர்ந்து உணர்ச்சி வயப்பட்ட கோவிந்தவர்மன் அவளை அப்படியே தன் கரச் சிறைக்குள் வளைத்து மார்பில் சாய்த்துக் கொண்டான்.


தேனாகத் துளித்த விநாடிகள் சில தீர்ந்து மறைந்தன.

வெளியே நின்றிருந்த இளங்காரிக்குடையான் நேரமாகி விட்டதை அறிவிக்க ஒரு விசித்திரக் குரல் எழுப்பியதைக் கேட்டு அவசரமாக எழுந்தான் கோவிந்தவர்மன்.

மலரின் இதழ் அடுக்கிலிருந்து வெளிப்படும் பொன் வண்டு போல் மெல்ல எழுந்து நின்ற இளங்கோப்பிச்சி அவனை ஏக்கத்துடன் ஏறிட்டு நோக்கினாள். பிறகு, ஏதோ நினைத்துக் கொண்டவள்போலத் தயக்கத்துடன் தலையைச் சாய்த்து, ''இளவரசே! உங்களிடம் ஒரு விஷயம் கேட்க வேண்டுமென்றிருந்தேன். அதாவது, என்னைக் கொண்டு தங்கள் பெரிய அன்னையாரைச் சிறையிலிருந்து மீட்க ஏதோ ஒரு திட்டம் போட்டிருப்பதாக அன்று சொன்னீர்களே; அந்தத் திட்டத்தைச் சிறிதே என்னிடம் விளக்கிச் சொல்லி விட்டுப் போகிறீர்களா?'' என்று கேட்டாள்.



கும்பகோணம் என்ஜினியர் திரு பால சந்தருக்கும், சௌபாக்கியவதி கலாவதிக்கும் திருச்சியில் வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது.



திரு ஆர். வேங்கடராமய்யர் அவர்களின் புதல்வி சௌபாக்கியவதி ஜானகிக்கும், திரு எஸ். கணேசனுக்கும் மயிலாப்பூரில் வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தது.

கோவிந்தவர்மன் அவனை வியப்புடன் உற்றுப் பார்த்தான். ''அந்தத் திட்டத்தின் மூலப் பொருள் பறி போனபின் அதைச் சொல்லிப் பயன் என்ன? அது அன்றோடு தகர்ந்து போயிற்று; இனி புதிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்திப் புதிதாக ஒரு திட்டம் கண்டு பிடித்தாக வேண்டும்'' என்று கூறிக் கலகலவெனச் சிரித்தான் அவன்.


பிறகு ''சரி, நான் போய்வரட்டுமா இளங்கோப்பிச்சி?'' என்று கேட்டவாறு அந்த அறையை விட்டு வெளியே வந்து சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே, ''அநந்தமதி எங்கே? அந்த அம்மையாரை நான் இன்னும் பார்க்கவில்லையே?'' என்றான்.

''சற்றுமுன் இங்கு வந்து போன சந்திரலேகைச் சிற்றரசர், அவளை ஏதோ ஒரு முக்கியமான காரியமாகப் பல்லவபுரம் இலவந்திகைப் பள்ளிக்கு அனுப்பி வைத்திருக்கிறார், இளவரசே!'' என்று உள்ளார்ந்த பீதியுடன் கூறினாள் இளங்கோப்பிச்சி.

''அப்படியா? என்னிடம் அவர் இந்த விவரத்தைத் தெரிவிக்கவே இல்லையே!'' என்று குழப்பத்துடன் முணுமுணுத்த கோவிந்தவர்மன், அங்கிருந்து புறப்பட்டுச் சென்றான். இளங்காரியும் அவனை நிழல்போல் பின் தொடர்ந்தான்.

அவர்கள் போன சற்று நேரம் கழித்து, பல்லவபுரம் சாலை வழியே யிருந்து வேர்க்க விறுவிறுக்க வந்து சேர்ந்த சோழிய ஆபத்துதவி வீரனை சம்புவராயன், இளங்கோப்பிச்சியைப் பார்த்து, ''இளவரசி! தங்கள் தந்தையார் தங்களை உடனே பழையாறைக்கு அழைத்து வந்து சேர்க்கும்படி எனக்கு அவசரக் கட்டளையிட்டு அனுப்பியிருக்கிறார்!'' என்று பணிவுடன் கூறினான்.

(தொடரும்)



கோலாலம்பூர் கல்கி ஏஜெண்ட் திரு பி. சிவகுரு அவர்களின் புதல்வர் திரு பாலகிருஷ்ணனுக்கும், சௌ. தனலட்சுமிக்கும் திருமணம் விமரிசையாக நடைபெற்றது.



டாக்டர் ஜி. விசுவநாதன் அவர்களின் புதல்வர் திரு ஜெயபாலுக்கும், சௌ. தேவிகாராணிக்கும் சிறப்பாகத் திருமணம் கோயமுத்தூரில் நடந்தது.


சலிக்காமல் உழைப்பவர்கள் உபயோகிப்பது

நிவியா

பலவிதப் பயனுள்ள, இயற்கையழகைப் பாதுகாக்கும் இந்த கிரீம் சருமத்தை மிருதுவாக்கி, போஷிக்கிறது. மற்ற கிரீம்களாலாகாத காரியத்தைச் சாதிக்கிறது நிவியா — ஆம், களைப்புற்ற சருமத்துக்குத் தெம்பூட்டுகிறது. அதுமட்டுமா? உங்கள் சருமம் இளமைமாறு ஆரோக்கியத்துடனும், மிருதுவாகவும் இருக்க உதவுகிறது. குடும்பத்திலுள்ள ஆண், பெண், குழந்தைகள் யாவருக்குமே அதன் அரவணைப்பு மேன்மை தருகிறது.



சருமத்திற்கு நிச்சயமாக வேண்டுவது நிவியா.





ஜமீன்தாரின் மகனான கண்ணன், தான் காதலித்து மணந்த நீலமணி ஒரு கொலைகாரி என்று கேள்விப்பட்டுத் துடிதுடித்துப் போகிறான்! புயல் வீசும் உள்ளத்தோடு அவன் தன் மூதாதையர் வாழ்ந்த முத்து மண்டபம் என்னும் எழில் மிகு மாளிகைக்கு மனைவியை அழைத்துச் சென்று தங்குகிறான். அவள் ஒரு கொலைகாரி என்று கேள்விப்பட்டதை வைத்துக் கொண்டு அவளிடம் நெருங்காமல், ஊரார் கண்களுக்கு மட்டும் அவள் கணவனாக வாழ்கிறான். விதியின் கொடுமையினால் நொந்துபோன வேதாசலம் என்ற கிழவனின் கொலையும் நீலமணி மீது சுமத்தப்படுகிறது. அவள் ஓடஓட விரட்டப்படுகிறாள். கடைசியில் உண்மைக் குற்றவாளி சிக்கி விடுகிறான். (புதையல், ரகசியம் அது இது என்று இன்னும் என்னவெல்லாமோ வருகின்றன!)

ஆரம்பத்தில் வரும் கல்லூரி மாணவ, மாணவிகள் கலாட்டா ஏற்கனவே பல படங்களில் பல முறையும் வந்த காட்சி தான். அது துளிக்கூட ரஸமாயில்லையே! சாரமற்ற அந்தக் காட்சி வளர்ந்துகொண்டே போவது மிகவும் வேதனையா யிருக்கிறது.

கண்ணனாக வரும் எஸ். எஸ். ராஜேந்திரன் எந்தக் காட்சியிலேயும் சோபிக்காமற் போனது மிகவும் வருந்தத் தக்கது. அதற்கு அவரை மட்டும் குறை கூறுவதில் பயனில்லை. கதை பல இடங்களில் அவரைச் சறுக்கிவிட்டிருக்கிறது. மனைவி கொலைகாரி என்ற சந்தேகம் ஏற்பட்ட பிறகு அவளை அழைத்துக் கொண்டு தனி வாழ்வு வாழச் சென்ற கண்ணன் தானே அந்தக் கொலையைப் பற்றிய துப்புகளைத் தேட முயன்றிருந்தால் கதை கொஞ்சம் சுவாரசியமா யிருந்திருக்கும். கண்ணன் பாத்திரத்தைப் புனைந்த கதாசிரியர் அந்தப் பாத்திரத்தைச் சரியாகப் பயன்படுத்தவில்லை. அதனால்தான் அசடு வழிகிறது.

அசோகன் ஒரு பாவமும் அறியாத பாட்டு வாத்தியாராக வந்து கடைசியில் காமுகனாக மாறி நீலமணியைக் கெடுக்க முயல்கிறார். என்ன பாத்திரப் படைப்போ! முத்துமண்டபத்தில் வரும் பாத்திரங்களில் பெரும்பான்மையும் ஓட்டை, உடைசல்தான்.

நீலமணி நல்ல பாத்திரம்; நன்றாய் உருவாகியிருக்கிறது. விஜயகுமாரி அதை உணர்ந்து அனுபவித்து நடிக்கிறார். பாட்டு வாத்தியார் அவள் கண்ணெதிரே கொலை செய்யப்பட்டதைக் கண்டு நடுநடுங்கிப் பதைபதைத்த காட்சியை மறக்க முடியவில்லை. கடைசி வரையில் விஜயகுமாரி நன்றாக நடிக்கிறார்.

கிழவன் வேதாசலமாக வரும் எஸ். வி. ரங்காராவ் நன்றாய் நடிப்பதற்குக் கேட்பானேன்! ஆனால் அந்தப் பாத்திரம் கதையோடு ஒட்டாமல் நிற்கிறதே!

குமுதவல்லி, கனகவல்லி என்ற இரட்டை வேஷம் தரிக்கும் சந்திரகாந்தா ''முத்து மண்டபத்''தில்தான் முழுமையாக நடிக்கிறார். சோகமாக நடிப்பதோடு மயக்கும் விழியால் அவர் வேகமாக வசீகரிக்கவும் முயல்கிறார்.

மனோரமாவும், ராமாராவும் ஹாஸ்ய ரஸத்தைப் பரிமாறுகின்றனர். ஆனால் அது ரஸிக்கும்படியா யில்லையே!

எம். ஆர். ராதா இல்லை என்றால் இந்தப் படமேயில்லை. நல்லவனாக வந்து கடைசியில் எல்லாக் கொலைகளுக்கும் தானே காரணமாக இருக்கிறார். யாரை நல்லவன் என்று நினைக்கிறோமோ அவன்தான் ரொம்பப் பொல்லாதவன் என்று காட்டுவது மர்மக்கதைகளில் வழக்கமாக வரும் உத்திதான். வழக்கம்போல் கத்தாமல் அமைதியாக நடிக்கிறார்.

இந்தப் படத்தின் பாடல்களைக் கேட்கும் போது, இந்தப் பாடல்களே இல்லாமல் இருக்கக் கூடாதா என்று தோன்றுகிறது.


டைரக்‌ஷன் திறமையையோ, ஒளிப்பதிவின் உயர்வையோ காண முடியவில்லை.

கொலையைப் பின்னணியாகக் கொண்ட எத்தனையோ ஆங்கிலப் படங்கள் வந்திருக்கின்றன. அவைகள் மக்கள் விரும்பிப் பார்க்கும் விதத்தில் விறுவிறுப்பாக அமைந்தவை. ஆனால் நம் படங்களின் நிலை அப்படியில்லை. விறுவிறுப்பைப் பற்றிப் பேசக் கூடாது. அப்படியிருக்க இத்தகைய படங்கள் எப்படி எடுபடும்?

கதையில் கொலையைப் புகுத்துவதாக எண்ணிக் கொண்டு கதையையே கொலை செய்து விட்டால் என்ன செய்வது!

முற்பகுதியில் தள்ளாடித் தளர் நடைபோட்ட திரைக்கதை பிற்பகுதியில் கொஞ்சம் விறுவிறுப்படைகிறது. நடிகர்களும் சுறுசுறுப்படைகிறார்கள். ஆனால் படம் பார்ப்பவர்கள் சோர்ந்து விடுகிறார்களே!

''முத்து மண்டபம்'' ஒரு வெற்று மண்டபம்!



விஜயநகரத்து விட்டலர்

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

விஜயநகரம் என்ற பெயரைக் கேட்டவுடனே கலை உலகில் அதன் பிரசித்தி நமக்கு ஞாபகம் வரும். 'விஜயம்' என்ற உடனேயே அந்த நாயக்க மன்னர்கள் கண்ட வெற்றி எல்லாம் நம் கண் முன் வரத்தானே செய்யும்? இன்றைய தமிழ் நாட்டுக் கோயில்களில் எல்லாம் நூற்றுக்கால் மண்டபம், ஆயிரக்கால் மண்டபம், கல்யாண மண்டபம் முதலிய மண்டபங்களை நிர்மாணித்தவர்கள் யார்? கோயில் வாசலில் பெரிய பெரிய கோபுரங்களைக் கட்டியவர்கள் யார்? அற்புதம் அற்புதமான சிற்ப வடிவங்களை அமைத்து அவைகளில் சிற்றுளியின் நயம் எல்லாம் தெரியும்படி நுணுக்க வேலைப்பாடுகள் செய்தவர்கள் யார்? இப்படிப் பல கேள்விகள் கேட்டால் அதற்கெல்லாம் விஜயநகர மன்னர்களே என்ற ஒரே விடைதான் கிடைக்கும். இந்த விஜயநகர மன்னர்கள் என்பவர்கள் யார்? இவர்கள் அமைத்த சாம்ராஜ்யத்தின் சரிதம் என்ன என்று தெரிந்துகொள்ள வேண்டாமா?

கி. பி. பதின்மூன்றும் நூற்றாண்டின் தொடக்கத்தில் மகம்மது கோரி டில்லி முதலான பகுதிகளைக் கைப்பற்றி முகம்மதியப் பேரரசை ஏற்படுத்தியிருக்கிறான். குத்புதீன் என்பவன் அந்த அரசை மிகவும் வலிமை உடையதாகச் செய்திருக்கிறான் வட இந்தியாவில். இப்படி நிலைத்த மகம்மதியரது ஆட்சி தெற்கு நோக்கிப் பரவ ஆரம்பித்திருக்கிறது. தட்சிணத்தில் அப்படி ஏற்படுத்திய ஆட்சியே பாமினி ராஜ்யம் எனப்படும். இந்த ராஜ்யம் தென்னிந்தியாவில் பரவாமல் இருக்கத் தென் நாட்டு அரசர்கள் பலர் முயன்றிருக்கின்றனர். ஆனால் அலாவுத்தீன் கில்ஜியின் சேனைத் தலைவனான மாலிக்காபூரின் படையெடுப்பால் தேவகிரி யாதவர்களும் துவார சமுத்திரத்து ஹொய்சலர்களும் நலிவுற்றிருக்கின்றனர். 1338-ல் மகம்மது பின் துக்ளக் என்பவன் தென்னாட்டின் மீது படையெடுத்து ஆனைக் குந்தியைக் கைப்பற்றி அங்குள்ள அரச குலத்தினரை எல்லாம் அழித்திருக்கிறான். அரச குலத்தை நிர்மூலம் செய்த பின்னர் அங்கிருந்த மந்திரிகளில் ஒருவரான ஹக்கா என்பவரை அந்த ராஜ்யத்தின் அதிபதியாக்கியிருக்கிறான். அவர்தான் சரித்திரத்தில் முதலாவது ஹரி ஹர தேவராயர் எனப்படுபவர்.

விட்டலர் கோயில்



அவரது குலகுருவே வித்யாரண்யர். இந்த வித்யாரண்யர் ஆனைக் குந்தியிலிருந்து துங்கபத்திரையைக் கடந்து தென் பக்கமாக நடந்திருக்கிறார் ஒருநாள். அந்த இடத்திலே துரத்தி வரும் வேட்டை நாய்களையே ஒரு முயல் எதிர்த்துப் போராடியதைப் பார்த்திருக்கிறார். அப்படி நிகழ்ந்தது அம்மண்ணின் மகிமையே என்பதையும் உணர்ந்திருக்கிறார். அந்த இடத்தை வீர க்ஷேத்திரம் என்று அழைத்திருக்கிறார். அங்கேயே ஹக்காவையும் அவனது சகோதரன் புக்காவையும் கொண்டு ஒரு ராஜ்யத்தை நிர்மாணித்திருக்கிறார். பாமினி சுல்தான்களிடையே இருந்த மனக்கசப்பும் குரோதமும் இந்தச் சின்ன ராஜ்யம் விரிவடைய வகை செய்திருக்கின்றன. அதனால் இந்த ராஜ்யம் வெற்றி மேல் வெற்றி கண்டிருக்கிறது. வித்யாரண்யரது ஆசியோடு ஆரம்பிக்கப்பட்ட ராஜ்யத்தை வித்யாரண்ய நகரம் என்று அழைத்திருக்கின்றனர் முதலில். அதுவே நாளடைவில் விஜயநகரம் என்று பெயர் பெற்றிருக்கிறது.


இந்த விஜயநகர மன்னர்களில் தலைசிறந்தவராக விளங்கியவர் கிருஷ்ண தேவராயர். அவர் ஆட்சியில் விஜயநகர சாம்ராஜ்யம் மிக்க புகழுடன் விளங்கியிருக்கிறது. மகம்மதியர்களெல்லாம் ஒடுங்கியிருந்திருக்கின்றனர். 1509-ம் ஆண்டு முதல் இருபது வருஷ காலம் இவர் ஆண்டிருக்கிறார். மைசூர், ஒரிஸ்ஸா முதலான நாடுகளையும் வென்றிருக்கிறார். தெற்கே மதுரை வரையிலும் அதற்கு அப்பாலும் வந்து அந்த நாடுகளையும் தம் ஆட்சியின் கீழ் கொண்டு வந்திருக்கிறார். கல்வி அறிவும் கலை உணர்வும் நிரம்பிய இந்தக் கிருஷ்ண தேவராயர் மிக்க திறமையாக அரசாண்டதுடன் பல கலைக் கோயில்களையும் கட்டடங்களையும் நிர்மாணித்திருக்கிறார். கவிஞர்களை, கலைஞர்களையெல்லாம் ஆதரித்திருக்கிறார். இந்தக் கிருஷ்ண தேவராயர் ஆட்சிக் காலத்தில் பாரசீகத்திலிருந்து வந்த தூதுவர் அப்துல் ரஸாக் என்பவர், விஜயநகரத்தின் சிறப்பையும், ராயரின் ஆட்சித் திறமையையும் பற்றி விரிவாக எழுதி வைத்திருக்கிறார்.

கிருஷ்ண தேவராயருக்குப் பின் வந்த விஜயநகர அரசர்கள் திறமையுடையவர்களாக இருக்கவில்லை. அந்தச் சமயத்தில் பாமினி சுல்தான்கள் பலரும் ஒன்று கூடி விஜய நகர மன்னரை எதிர்த்திருக்கிறார்கள். தலைக்கோட்டை என்னுமிடத்தில் நடந்த பெரும் போரில், இந்த விஜயநகர மன்னரைத் தோல்வியுறச் செய்திருக்கிறார்கள். அதன்பின் அவர்கள் விஜயநகரமாம் தலைநகரில் புகுந்து அங்குள்ள கட்டிடங்களை இடித்துத் தரைமட்டமாக்கி

யிருக்கின்றனர். இவர்கள் கலையுணர்வு அற்றவர்களே என்றாலும், அங்குள்ள கோயில்களை முழுதும் அழிந்துபோகுமாறு சிதைக்கவில்லை. அப்படி இவர்கள் கொடுமைக்குத் தப்பிய கோயில்களும் அழிக்கப்பட்ட சின்னங்களுமே இன்றும் ஹம்பியில் தலைதூக்கி நின்று விஜய நகர சாம்ராஜ்யப் பெருமையை நமக்கு உணர்த்துகின்றன. நாம்தான் சென்ற வாரத்திலே விருபாக்ஷர், கோதண்டராமர், அனந்த சயனர் முதலியோருடைய கோயில்களையெல்லாம் பார்த்து விட்டோமே! இன்று நமது சுற்றுலாவை விட்டலர் கோயிலிலிருந்தே தொடங்கலாம்.

துங்கபத்திரை நதியின் தென் கரையில் விட்டலர் கோயில் இருக்கிறது. ஹம்பியில் உள்ள கோயில்களில் எல்லாம் பெரியதும், சிற்பச் சிறப்பு வாய்ந்ததும் இந்தக் கோயில் தான். 500 அடி நீளமும் 310 அடி அகலமும் உள்ள திறந்த வெளியில் இக்கோயில் கட்டப்பட்டிருக்கிறது. இக் கோயிலுக்கு மூன்று பெரிய வாயில்கள் இருக்கின்றன. பிரதான கோயிலைத் தவிர, ஐந்து மண்டபங்கள் இந்தக் கோயில் பிராகாரத்தில் கட்டப்பட்டிருக்கின்றன. விட்டலர் கோயில் மகாமண்டபத்துத் தூண்களெல்லாம் சிற்பங்களை ஏந்தி நிற்கின்றன. மரத்திலே செய்ய முடியாத நுணுக்க வேலைகளெல்லாம் கல்லிலே செதுக்கியிருக்கிறார்கள் சிற்பிகள். இக்கோயிலைக் கிருஷ்ண தேவராயரே கட்டியிருக்கிறார். அவர் சிறந்த விஷ்ணுபக்தர். ஆனதினால் பண்டரிபுரத்துப் பாண்டுரங்க விட்டலருக்குத் தம்முடைய தலைநகரில் ஒரு கோயில் இருக்கட்டும் என்று கட்டினார் என்று சொல்கிறார்கள். 1513-ல் கட்ட ஆரம்பித்த கோயில் 1564-ல் தான் கட்டி முடிந்ததாம். அங்குள்ள தூண்கள் எல்லாம் இசை பாடும் தூண்களாகவே அமைந்திருக்கின்றன. இத்தனை பெருமையுடைய கோயில் இன்று இடிந்து சிதைந்து இருந்தாலும் அக்கோயில் கட்டிய மன்னரின் பெருமையையும் சிற்பிகளின் திறமையையும் உலகுக்குப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது. இக்கோயிலை இவ்வளவு பிரம்மாண்டமாகக் கட்டியபின் பண்டரிபுரத்து விட்டலர் இங்கு வர மறுத்துவிட்டார் என்று கர்ணபரம்பரை கூறுகிறது. தமக்கு என்று அமைந்த சிறு குடிலை விட்டுக் கிளம்பி இவ்வளவு பெரிய கோயிலுக்கு வந்து குடியேற விருப்பம் இல்லை போலும் அவருக்கு. ஆம்! அவர் ஏழை பங்காளன் அல்லவா?


இக்கோயில் வாயிலில் கல் தேர் ஒன்று இருக்கிறது. இருபத்து ஐந்து அடி உயரமுள்ள இந்தக் கல் தேரின் சக்கரங்கள் எல்லாம் இன்றும் உருளுகின்றன. தேரின் மேல் விதானம் செங்கல்லால் கட்டப்பட்டுப் பின்னர் சிதைந்திருக்கிறது. பல கற்களைச் செதுக்கியே இக் கல் தேரை அமைத்திருக்கிறார்கள் என்றாலும், ஒட்டுப் போட்ட இடங்களே தெரியாத வண்ணம் அமைத்திருப்பதால் ஒரே கல்லில் அமைந்த தேர்தானோ என்று சந்தேகிக்கும்படி செய்திருக்கிறார்கள் சிற்பிகள். ஹம்பியில் எதைப் பார்த்தாலும் பார்க்கா விட்டாலும் விட்டலர் கோயிலையும் இந்தக் கல் தேரையும் காணாமல் திரும்புதல் கூடாது. இந்தக் கோயிலிலிருந்து கிழக்கே வந்து தெற்கே


கல் தேர்

திரும்பினால் தாளாரிக் கட்டு என்ற விஜய நகரத்தின் வடக்கு வாயிலை அடையலாம். அதற்குக் கிழக்கே நிம்பபுரம் இருக்கிறது. அங்குதான் வாலி சுக்கிரீவர் சண்டை நடந்திருக்கிறது. அப்பக்கத்தில் கிடக்கும் கற்களை வாலியின் எலும்புகள் என்றும் கூறுகின்றனர். இனி, தெற்கு நோக்கிச் செல்கிற பாதையில் கொஞ்சம் விரைவாகவே செல்லலாம். அப்பாற் சென்று பெல்லாரி செல்லும் பாதைக்குத் தென்புறமுள்ள கமலாபுரத்தில் பட்டாபிராமன் கோயிலையும் பார்க்கலாம். அதன்பின் திரும்பவும் வடக்கு நோக்கித் திரும்பலாம். இந்த வழியில்தான் அரசியர் தங்கும் அந்தப்புரங்கள் இருந்திருக்கின்றன. அந்தப்புர மாதர் நீராடும் நீராழி மண்டபம் மிகவும் அழகாக இருக்கிறது. அதற்குப் பக்கத்திலே சந்திரசேகரருக்கு ஒரு கோயில் இருக்கிறது. இங்குதான் அந்தப் பிரபலமான கமல மஹால் இருக்கிறது. இந்தக் கமல மஹால், தாமரை மலர் விரிந்திருப்பது போல் கட்டப்பட்ட கட்டிடம்; பல்பல கோணங்கள் கொண்டது.

இதையொட்டியே ஹஸரே ராமர் கோயில் இருக்கிறது. இக்கோயில் விஜயநகர மன்னர்களின் சொந்தக் கோயில். சுவர் எல்லாம் சிற்ப வடிவங்கள், ராமாயணக் கதை முழுவதையுமே சிற்பமாக வடித்திருக்கிறார்கள் சிற்பிகள். இங்குள்ள தூண்களெல்லாம் நிறைந்த வேலைப்பாடு உடையன. அவை தாங்கி நிற்கும் விதானங்களும் அழகானவை. இக்கோயிலையும் கிருஷ்ண தேவராயரே 1513-ல் கட்டினார் என்பர். சிற்ப வல்லுநர் இக்கலைக் கோயிலைக் கண்டு இன்றும் அப்படியே அதிசயித்து நிற்கின்றனர். இக்கோயிலை அடுத்தே அந்த சாம்ராஜ்யத்தின் தங்கசாலை இருந்திருக்கிறது.

இங்கிருந்து கொஞ்சம் கிழக்கு நோக்கிச் சென்றால் ரங்கசாமி கோயிலுக்கு வருவோம். அது அவ்வளவு பெரிய கோயில் அல்ல என்றாலும் இங்கு ஒன்பதடி உயரத்தில் ஓர் அனுமார் நின்று கொண்டிருப்பதைக் காணாமல் மேற் செல்லலாமா? இதற்குப் பக்கத்திலே தான் யானை கட்டும் தறி எல்லாம் இருந்திருக்கிறது. இந்த வட்டாரத்தில் ஓர் இடத்தில் மன்னர்களது கொலு இருக்கை இருக்கிறது. கிட்டத்தட்ட எழுபது அடி சச்சவுக்கமாக அமைந்த இந்தக் கட்டிடத்தை மகாநவமி திப்பா என்கின்றனர். மகாநவமியில் மன்னர் தர்பார் நடத்தியது இங்கேதான். இந்தத் திப்பாவைக் கிருஷ்ண தேவராயர் தமது வெற்றிச் சின்னமாகக் கட்டியிருக்கிறார். விஜயநகரத்தின் வெற்றிச் சின்னமான



கமலமஹால்

இந்தத் திப்பா இன்று மொட்டையாகச் சிதைந்து நிற்கிறது.

இவற்றை யெல்லாம் பார்த்து விட்டு இன்னும் வடக்கு நோக்கிச் சென்றால் வழியில் ஒரு சிறு கோயிலைப் பார்ப்போம். அது வீரபத்திரர் கோயில். அதைக் கடந்து கொஞ்ச தூரம் சென்றால் ஒரு சிறு பாதை மேற்கு நோக்கிச் செல்லும். காரிலிருந்து இறங்கி அந்த வழியில் சென்றால், அங்கு ஒரு பிரம்மாண்டமான நரசிம்மர் சிலையைக் காண்போம். இருபத்திரண்டு அடி உயரத்துக்கு மேல் அமைந்த பிரபையுடன் இருக்கும் இந்த நரசிம்மர் கூரை இல்லா வீட்டில் குடியிருக்கிறார். கைகால்களெல்லாம் உடைந்து கிடக்கின்றன. அவர் முகத்தின் உக்கிரம் மட்டும் குறைவுபடவில்லை. சிற்ப உலகிலே தனிப் பெருமை வாய்ந்த வடிவமாக ஒரே கல்லில் உருவான இந்த நரசிம்மரை வணங்கி விட்டு, வடக்கே திரும்பினால் குகை போன்ற ஒரு சிறு மண்டபத்தில் பெரியதொரு சிவலிங்கம் இருக்கும். அவரும் அவரது ஆவுடையாரும் பாதிக்கு மேல் நீருக்குள் முழுகியே இருப்பர். அவரை ஜலகண்டேசுவரர் என்று கூறுகின்றனர். இக் கோயிலுக்குக் கொஞ்சம் வடபுறம் ஒரு கிருஷ்ணன் கோயில் இருக்கிறது. பெரிய மதில்களோடு கூடிய இந்தக் கோயில் மிகவும் சிதைந்திருக்கிறது. இக்கோயிலுள் நுழைய நமக்குத் தைரியம் வராது. ஏனென்றால், அக்கோயிலின் மண்டபக் கற்களெல்லாம் யார் தலைமீது விழுவோம் என்று தொங்கிக் கொண்டிருப்பதாகவே தோன்றும். ஆதலால் எட்டியிருந்தே இக்கோயிலைப் பார்த்துவிட்டு அப்பிரதட்சிணமாக நகரத்துக்குள் நுழைகிறபோது நம்மை வரவேற்ற அந்தச் சசிவே கல்லுப் பிள்ளையார் சந்நிதிக்கே வந்து சேருவோம். ஆம், இதுவரை நாம் ஒன்பது சதுர மைல் பரப்பில் உள்ள விஜய நகரத்தையே சுற்றி வந்திருக்கிறோம்!

விஜயநகர சாம்ராஜ்யத்தின் பெருமை எல்லாம் அந்த சாம்ராஜ்யத்தின் மன்னனாக இருந்த கிருஷ்ண தேவராயரின் புகழாகவே இருக்கக்காண்போம். இவர் உருவாக்கிய சாம்ராஜ்யம் இன்றைய தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், மைசூர், ஒரிஸ்ஸா ராஜ்யத்தை யெல்லாம் உள்ளடக்கியதோர் அகண்ட சாம்ராஜ்யமாக இருந்திருக்கிறது. ஹாஸ்பெட்டிலுள்ள ராயக்கேரி, அனந்தப்பூரில் உள்ள புக்காலய சமுத்திரம், நெல்லூரில் உள்ள ஆனந்த சாகரம் எல்லாம் அவரால் உருவாக்கப் பட்டவையே. இன்னும் தென் விந்தியக் கோயில்கள் பலவற்றிலும் கோபுரங்கள் மண்டபங்கள் கட்டி விரிவாக்கியவரும் அவரே. மதுரை, ஸ்ரீரங்கம் முதலிய இடங்களில் அவர் கட்ட முனைந்த கோபுரங்கள் ராயர் கோபுரம் என்றே இன்றும் பேசப்படுகின்றன. காளத்தியப்பர் கோயிலின் ஆயிரக்கால் மண்டபத்தை, தில்லைச் சிற்றம்பலவன் கோயில் வாயில் வடக்குக் கோபுரத்தை, திருப்பதி வேங்கடவாணனின் வாயில் கோபுரத்தை எல்லாம் கட்டியவரும் இவரே. விஜயநகர நாயக்க மன்னர்களின் வழிபடு தெய்வம் விருபாக்ஷர் என்றாலும், கிருஷ்ண தேவராயர் சிறந்த விஷ்ணுபக்தராகவே இருந்திருக்கிறார். தமிழ் நாட்டு வைணவத் திருப்பதிகளிலெல்லாம் ஆண்டாள் சந்நிதியை அமைத்திருக்கிறார். பிற மதங்களையும் போற்றியிருக்கிறார். ; வேதாந்திகள், அத்வைதிகள்,' துவைதிகள், லிங்காயத்துகள், சமணர்கள் ஏன், முஸ்லீம்கள் எல்லோரையும் ஆதரித்திருக்கிறார். தம்முடைய ராஜ்ய அதிகாரிகளாக முஸ்லீம்களை நியமித்திருக்கிறார் என்றால் அதிகம் சொல்வானேன்? கலைகளை வளர்த்தது போலவே கலைஞர்களையும் ஆதரித்திருக்கிறார். தெலுங்கு இலக்கியம் இவர் காலத்திலே சீரும் சிறப்பும் பெற்று வளர்ந்திருக்கிறது. அல்லசானி பெத்தண்ணா, நந்தி திம்மண்ணா, ராம ராஜபூஷணுடு, குமார தூர்ஜதி, பிங்காலி, சூரண்ணா முதலிய கவிஞர்களெல்லாம் இவரால் ஆதரிக்கப்பட்டவர்களே. சிறந்த விகட கவியாக இருந்த தெனாலிராமனும் இவரது அரசவையில் இருந்து வாழ்ந்தவனே.

ஹம்பிக்கும் ஹாஸ்பெட்டுக்கும் வந்தது தான் வந்தோம். நம்முடைய நடையைக் கொஞ்சம் எட்டிப் போட்டு ஹாஸ்பெட்டுக்கும் மேற்கே மூன்று மைல் தூரத்திலுள்ள துங்கபத்திரை அணையையும்தான் பார்த்து விட்டே திரும்பலாமல்லவா? சமீப காலத்தில் கட்டப்பட்ட அணை அது. அந்தப் பிரம்மாண்டமான அணையின் இரு முனைகளிலும் இரண்டு பிரயாணிகள் தங்கும் விடுதிகளைக் கட்டியிருக்கிறார்கள், அணைகட்டிய இஞ்சினியர்கள். ஒன்றைக் கைலாயம் என்றும், மற்றொன்றை வைகுண்டம் என்றும் அவர்கள் பெயரிட்டிருக்கிறார்கள். கைலாயத்திலும், வைகுண்டத்திலும் சென்று தங்கியிருக்க வசதியும் செய்திருக்கிறார்கள். அந்த வசதியை நாமும்தான் பயன்படுத்திக் கொள்வோமே!

நரசிம்மர்



கால்கேட்டின்மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!



ஏனெனில், ஒரே தேய்ப்பில் கால்கேட் டெண்டல் கிரீம் துர் நாற்றத்தையும் சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சத விகிதத்தை ஒழிக்கிறது.

கால்கேட் உடனடியாக வாய்த் துர் நாற்றத்தை 10ல் 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும், உணவு சாப்பிட்டவுடன் கால்கேட்டினுல் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத பெருமளவில், ஏராளமானவர்களுக்குச் சொத்தை ஒழிக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான பரீட்சைகள் நிரூபித்துள்ளன: இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு!

சாப்பிட்டவுடன் வாயை கொப்பளிப்பதால் மட்டும் போதாது—சாப்பிட்டவுடன் வழக்கமாக கால்கேட் டெண்டல் கிரீமினுல் உங்கள் பற்களை நன்றாகத் துலக்குங்கள். இதன் வீரியமும், ஊடுருவும் தன்மையுமுள்ள நுரை பற்களின் இடைவெளிகளிலே புகுந்து, சொத்தைக்கும், துர் நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிய பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.

கால்கேட்டில் கிடைத்திருக்கும் நூதன நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனுலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்.

வழக்கமாக கால்கேட் உபயோகித்தால், அது:

- ✔ துர் நாற்றத்தை அகற்றுகிறது
- ✔ சொத்தையைத் தடுக்கிறது
- ✔ பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது



நீங்கள் பற்பொடியை விரும்பினுல், இந்த பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.

பரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்ணிற பற்களைப் பெறவும் உலகத்திலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.



அத்தியாயம் 24

படை கிளம்பியது

ஒன்றன்பின் ஒன்றாகச் சென்று கொண்டிருந்த அந்த ராணுவ லாரிகள் போட்ட சத்தம் செவிடனுக்கும் காது கேட்கும் அளவுக்குப் பேரிரைச்சலாகத்தான் இருந்தது. அந்த நெடுஞ்சாலையில் இவ்வாறு அடுத்தடுத்து இரண்டு சாரிகளில் உருண்டு கொண்டிருந்த சக்கரங்களின் எண்ணிக்கை நானூற்றுக்குக் குறையாது. ராணுவ வண்டிகளில் கால்நடைகளைப் போல் அடைந்து கிடந்த கணக்கற்ற வீரர்களுள் வடிவேலுவும் ஒருவனாயிருந்தான். சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்ட அவன் தன் சகாக்களைச் சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்தான். எதிரே ஒரு பஞ்சாபி கண்களை மூடியபடி அரைத் தூக்கத்தில் இருந்தான். அவனுக்கு இடது புறத்தில் மலையாளி ஒருவன் தன்னுடைய பிரதேசத்துப் பாடலொன்றைச் சீட்டியடித்துக்கொண்டிருந்தான். இன்னொரு பக்கத்தில் ஆங்கிலப் புத்தகம் ஒன்றைப் பிரித்து வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான் ஒருவன். மர்மக் கதைகளைப் படிப்பதில் வழக்கமாக அவன் காட்டும் ஆர்வம் இன்றைக்கு இல்லை. ஒரு மூலையில் நான்கு பேர்கள் கடனே என்று சொக்கட்டான் ஆடிக் கொண்டிருந்தார்கள். இப்படியே ஒவ்வொருவரும் அங்கே உற்சாகமிழந்து காணப்பட்டார்கள்.

வடிவேலு அண்ணாந்து பார்த்தான். கான்வாஸ் துணியினால் மூடப்படாத லாரியின் மேல்புறத்தில் வில் போல் வளைந்திருந்த இரும்புச் சட்டங்களினூடே சாலையின் இருமருங்கிலும் வளர்ந்திருந்த பல வகை மரங்களின் உச்சிகள் நன்கு தெரிந்தன. இலைகளைக் கொண்டு எத்தனை வகையான மரங்களை அடையாளம் கண்டு கொள்ளத் தன்னால் முடிகிறது என்று சோதிப்பதில் மூழ்ந்தான் வடிவேலு. 'பலா, வாழை, தென்னை, அரசமரம், ஆலமரம்....சே!' அலுத்து விட்டது அவனுக்கு. வெறுப்புடன் சிகரெட் துண்டைக் கீழே போட்டுப் பூட்ஸ் காலால் அதை நசுக்கித் துவைத்தான்.

'ஜப்பானியனை இப்படித்தான் நசுக்க வேண்டும். ஆனால் போர்க்களத்தைச் சென்றடையுமுன்னரே சோர்வடைந்து விட்டவர்களாய்த் தோற்றம் அளிக்கும் இவர்களால் எதைச் சாதிக்க முடியும்? வீரர்களின் விடுமுறைகளை ரத்துச் செய்து அனைவரையும் முகாமுக்குத் திருப்பி அழைத்த சமயத்தில் அவர்கள் எவ்வளவு கலகலப்பாக இருந்தார்கள் ? ஜப்பானியனுக்குப் பாடம் கற்பிக்கப் போவது பற்றி எவ்வளவு தீவிரத்துடன் மார் தட்டிப் பேசினர்? இரண்டு வாரங்களுக்குள்ளாக இப்படி அழுது வடிகிற மனோபாவத்தை அவர்கள் அடைய என்னவெல்லாம் விபரீதங்கள் விளைந்து விட்டன ?'

ஓட்டப் பந்தயத்தின் ஆரம்பத்தில் 'ரெடி! ஸ்டெடி! கோ!' என்பார்களே, இந்த மூன்றினுள் முதல் வார்த்தையைத் துருப்புக்களைத் திருப்பி அழைத்த இரண்டாம் நாளே உச்சரித்து விட்டனர் அதிகாரிகள். ஜப்பானிய அரசாங்கத்தின் சார்பில் வாஷிங்டனில் குருஸூ நடத்திய பேச்சு வார்த்தைகள் முறிந்து விடுவதற்கான ஹேஷ்யங்கள் தென்பட்டதால் இந்த முன்னேற்பாடு என்றும் தாய்லாந்து மீதோ பிலிப்பைன்ஸ் மீதோ ஜப்பானியர்


படை யெடுக்கும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்று பிரிட்டிஷ் தளபதிகள் நம்புகிறார்கள் என்றும் தெரிய வந்தது. அந்தத் தினங்களில் மைக்கேல் பற்களை நறநற வென்று அரைத்துக் கடித்தது வடிவேலுவுக்கு வேடிக்கையாகவே இருந்தது. 'மடடாரைக் கட்டிக்கொண்டு மாரடிப்பதை இவன் விடவே மாட்டானோ?' என்று தனக்குள் கூறிக் கொண்ட அவன் மெல்ல நகைத்தான்.

'ஸ்டெடி!' என்பதுபோல் மேலதிகாரிகள் விழிப்புடன் இருக்குமாறு துருப்பினரை எச்சரித்தார்கள். இரவு நேரத்தில்கூட பூட்ஸ்களைக் கழற்றாமல் இருந்தான் வடிவேலு. மற்றவர்களும் இதே போல் ஆயத்தமாகவே இருந்தார்கள். துப்பாக்கியைப் பக்கத்திலேயே வைத்துக் கொண்டு படுத்தவர்களுக்குத் தூக்கம் வரவில்லை. எந்த விநாடி என்ன நேரிடுமோ என்று காத்திருந்தார்கள்.

விடியற்காலை நாலு மணிக்கு நெஞ்சைப் பிளக்கும் தீனக் குரலில் அபாய அறிவிப்புச் சங்கு ஊதியது. வழக்கமான ஒத்திகைக்கு அழுகிற சங்கொலி இல்லை அது. உச்சஸ்தாயிக்கு மேல் எழும்பியும் கீழிறங்கியும் உயர்ந்தும் தாழ்ந்தும் இரவின் நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு கேட்டது. வடிவேலு துள்ளி எழுந்து கூடாரத்தை விட்டு வெளியே வந்தான். எல்லைப்புறத்திலிருந்த அவனால் நகரின் மையத்தில் பரவியிருக்கக் கூடிய பரபரப்பை ஊகிக்கத்தான் முடிந்தது. திடீரென்று பத்துப் பதினைந்து பிரகாசமான ஸர்ச் லைட்டுகள் எரியத் தொடங்கி, இருளை நீவிக் கொண்டு செல்லும் ஒளிப் பாதைகளை வானில் வகுத்தன. விமானங்களை வரவேற்கப் பிரிட்டனின் பீரங்கிகள் தயாராக இருப்பதைப் புரிந்து கொண்டான். விமானங்கள் எதையும் கண்ணால் பார்க்காவிட்டாலும் 'பாம்பர்கள்' நெருங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்தான். ஒரே சீரான அந்த ரீங்காரத்தை உணர்ந்தபிறகுதான் கேட்டான். அவன் மேனி சிலிர்த்தது.

கண்களைப் பறிக்கும் மின்னல் வெட்டு; தூரத்திலிருந்து எழும் இடியோசை; யுத்தம் ஆரம்பமாகி விட்டது! சிங்கப்பூரில் ஜப்பானிய விமானங்கள் குண்டுகளைச் சொரிகின்றன. விமானங்களைச் சுட்டு வீழ்த்த முயலும் பீரங்கிகளினின்றும் கிளம்பும் வெடியோசைகளும் செவிகளுக்கு எட்டின.

''குமாரி!'' என்று ரகசியம் பேசும் குரலில் வாய் விட்டு அழைத்தான் வடிவேலு. அவளை நினைத்த மாத்திரத்தில் 'பக்'கென்று அவன் நெஞ்சில் ஏதோ அடைத்துக் கொள்வது போலிருந்தது. தன் நிலையிழந்து, ஆபத்துச் சமயத்தில் அவளருகே இருக்க வேண்டும் என்கிற ஒரே நோக்கத்தில் அவன் அங்கிருந்து விரைவாக நடக்க முற்பட்ட போது, கேவல்சிங்



கின் இரும்புப் பிடியில் அவன் கை சிக்கி விட்டது. ''எங்கே போவதாய் உத்தேசம்?'' என்று அதட்டிக் கேட்டான் ஸுபேதார்.

திருதிரு வென்று சற்று நேரம் விழித்து விட்டு, ''நகரில் அவதியுற்ற வர்களுக்கு உதவலாமே....?'' என்று இழுத்தமாதிரியாக ஏதோ சொல்லி வைத்தான் வடிவேலு. அவனுக்கே நன்றாகத் தெரியும், அது அவன் கடமை யல்லவென்று. 'ஏ. ஆர். பி., ரெட் கிராஸ்' ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் அதற்காகவே சித்தமாயிருந்தார்கள். யுத்தகளத்தில் ஜப்பானியனை நேருக்கு நேராகச் சந்திக்கும் வரையில் அவ னுக்கு வேலையில்லைதான்....

விமானப் படையெடுப்பு முடிந்து விட்டதற்கு அறிகுறியாக வெகுநேரத் துக்குப் பின் மீண்டும் சங்கு ஊதி யது. ஆகாய விமானங்களின் அணி வகுப்புடன் அணுகி வந்த அபாயம் இப்போது நீங்கி விடவே, அறிவு தீவிரமாகச் செயல்பட்டது வடிவேலு வுக்கு. தன்னைத் தானே அவன் கேட் டுக் கொண்டான்: 'உள்ளத்துக்குள் மிக அருகில் இருக்கும் ஜப்பானிய விமானத் தளமே எழுநூறு மைல்களுக்கு அப்பால் இருக்கும்போது, இந்தப் படை யெடுப்பை நடத்துவது அந்த விமானி களுக்கு எப்படிச் சாத்தியமாயிற்று?'

தன் மனத்தைக் குடைந்து கொண் டிருந்த இந்தச் சந்தேகத்தை வடி வேலு அன்று இருட்டுகிற சமயத்தில் மைக்கேலிடம் வெளியிட்டான். தன்னை விட உயர் பதவி வகிப்பவர்களுடன் மேற்கொண்டு ஆக வேண்டிய காரி யங்கள் பற்றிக் கலந்தாலோசித்து விட்டு முகாமுக்குத் திரும்பிய காப் டன், அப்போதைக்கு வடிவேலுவைக் காரோட்டியாகப் பயன்படுத்திக்கொண் டிருந்தான். அவனுடைய ஐயத்தைக் கேட்டதும் பேய்ச் சிரிப்புச் சிரித்தான் மைக்கேல். ''டாம் இட்! இது போன்ற ஒரு ஹாஸ்யத்தை நான் இன்று வரையில் கேட்டதேயில்லை!''

''இதில் வேடிக்கை என்ன இருக் கிறது.....?''

''தாய்லாந்து மீது படையெடுக்கத் தயங்கக் கூடாதென்று நான் வலி யுறுத்திய போதெல்லாம் என் மேலதி காரிகள் என் பதற்றத்தைக் கண்டு பயங்கொள்ளி என்று தீர்மானித்துச் சிரித்தார்கள். இப்போது சிரிக்க வேண்டியது என் முறை. வடிவேலு! இன்று அதிகாலை குண்டுகளைச் சிங்கப்பூ ரில் வீசிய அந்த விமானங்கள் எங் கிருந்து புறப்பட்டு வந்திருக்கின்றன தெரியுமா? தாய்லாந்தின் தென்புறத்தி லுள்ள படானி நகரின் விமானக் கூடத்திலிருந்து! அந்த நிலையத்தில் கடைசி நிமிஷம் வரையில் விமானம் ஓடும் பாதைகள் மீதெல்லாம் புல் வளர விட்டிருந்திருக்கிறார்கள், வேவு பார்க்கச் செல்லும் நம் விமானிகளை ஏய்க்க. மரங்களுக்கடியில் குழி தோண்டிப் பெரிய பெட்ரோல் டின்களைப் புதைத்து மேலே மண்ணைத் தூவி வைத்திருந்திருக் கிறார்கள். 'தாய்லாந்துக்குள் பிரவேசிப் பவர்கள் யாராயிருந்தாலும் அவர் களை எதிர்ப்போம்' என்று முழக்கிய தும் ஒரு கண் துடைப்பு வித்தை தான். நேற்று இரவு ஸிங்கோரா, படானி ஆகிய துறைமுகங்களில் ஏராளமான ஜப்பானியத் துருப்புக் களும் யுத்த தளவாடங்களும் வந்து இறங்கியபோது ஸயாமியர் ஒப்புக்குச் சண்டையிடுவது போல் நடித்ததோடு நிறுத்திக் கொண்டார்கள்!''

''எப்பேர்ப்பட்ட சதித் திட்டம்!'' என்று அதிசயித்தான் வடிவேலு.

''ஒன்றல்ல, இரண்டல்ல, அறுபத் தைந்து கப்பல்களில் வந்து சேர்ந்த சிப்பாய்களுக்கும் டாங்குகளுக்கும் மற் றப் போர்க் கருவிகளுக்கும் அடைக் கலம் அளித்திருக்கிறது நம் அண்டையி லுள்ள நாடு!''

''நம் விமானிகள் என்ன தூங்கிக் கொண்டா இருந்தார்கள்? கடல்மார்க் கங்களைக் கண்காணிக்கவில்லையா? கலங் களைப் பார்த்ததுமே குண்டு வீசி அவற்றைத் தகர்ப்பதுதானே? வடக் கெல்லையில் தண்டு இறங்கியுள்ள நமது படை வீரர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? உடனடியாகத் தாய்லாந்துக்குள் நுழைந்து, துறை முகங்களில் ஜப்பானியர் கப்பல்களை விட்டு இறங்கும்போதே நல்ல வர வேற்பு அளித்திருக்கலாமே? அப்போது அவர்களை வெற்றி காண்பது எளிதாய் இருந்திருக்குமே?''

''ஜப்பானியக் குள்ளநரியின் போர்த் தந்திரம் நம்மைப் பிரமிக்க வைக்கும் வடிவேலு! அந்த அறுபத்தைந்து கப் பல்களைத் தவிர வேறு நான்கு கலங் களை ஏற்கனவே தங்கள் ஆக்கிரமிப் புக்கு வசப்பட்டுள்ள இந்தோசீனா வின் தெற்கு முனையை நோக்கித் திருப்பி விட்டார்கள். இதைப் பார்த்து விட்டு விமானங்களில் பறந்து சென்ற நமது ஒற்றர்கள் ஏமாந்து போய் விட்டார்கள். எல்லாக் கலங்களுமே இந்த முன்னணிக் கப்பல்களைப் பின் பற்றித் திசை திரும்பி விடும் என்று நம்பி விட்டார்கள்! ஆகவேதான் நமது தளபதிகளும் விமானத் தாக்கு தலை நடத்துமாறோ அல்லது 'மட

டார்' திட்டத்தை நிறைவேற்று மாறோ உத்தரவுகள் பிறப்பிக்கவில்லை.''

''வெட்கக்கேடு!''

''இப்போது ஜப்பானியர் மலேயாவுக்குள் இரு முனைகளில் பிரவேசிக்க முற்பட்டிருக்கிறார்கள். வடக்கேயிருந்து நில மார்க்கமாக முன்னேறி வருகிறார்கள். கிழக்குக் கடற்கரையில் கப்பல்களிலும் வந்து இறங்க முயலுகிறார்கள். தாய்லாந்துக்குள் வீறுநடை போடுமாறு உத்தரவு வரும் என்று எதிர்பார்த்து வடக்கெல்லையில் காத்திருந்த நம் துருப்பினருக்குத் தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. தாக்குவதில் தீவிரமாயிருந்தவர்களைப் பதுங்கிப் போராடி நமது பிரதேசத்தைப் பாதுகாக்கச் சொன்னால் அவர்கள் மன நிலை எப்படி யெல்லாம் மாறும்? யோசித்துப் பார்! அதோடு மட்டுமா? காலையிலிருந்து நடைபெற்று வரும் குண்டு வீச்சுக்கு மலாயாவிலுள்ள நமது விமானக் கூடங்கள் எல்லாமே இலக்காகி யிருக்கின்றன. நமது விமானப் படையின் பலம் இதற்குள்ளாகவே பெருமளவுக்குக் குறைந்து போய் விட்டது!''

வடிவேலு பெருமூச்சு விட்டான். ''மனத்துக்கு நிம்மதி அளிக்கக் கூடிய விஷயமாக ஒன்றுமே கிடையாதா?''

''இருக்கிறது வடிவேலு! அமெரிக்கக் கடற்படைத் தளமாகிய பேர்ல் ஹார்பரில் ஜப்பானிய விமானங்கள் குண்டு வீசியதாகச் செய்தி வந்துள்ளது. இனி மேல் பிரிட்டன் இந்த யுத்தத்தில் தனித்து நிற்கவில்லை. அமெரிக்காவையும் சண்டையில் இழுத்து விட்டு விட்டான் ஜப்பானியன். நமக்குப் பக்கபலம் கிடைத்திருக்கிறது! நம்முடைய மேஜர் ஜெனரல்களும் லெப்டினன்ட் ஜெனரல்களும் பரம ரகசியமாகக் கருதும் இன்னொரு சங்கதியும் என் காதுகளில் விழுந்தது. எனக்குத் தெரியவந்தது போல் இன்னும் எத்தனை பேர்களுக்கு அந்த விஷயம் எட்டியதோ, யார் கண்டார்கள்? தாய்லாந்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் ஜப்பானியக் கலங்களை அழித்துத் துவம்சம் செய்ய நமது கடற்படை இன்று மத்தியானத்துக்குமேல் சிங்கப்பூர்த் துறைமுகத்தை விட்டுக் கிளம்பி விட்டதாம்!'' என்று ஏராளவுக்குக் குதூகலத்துடனேயே கூறினான் மைக்கேல்.

அத்தியாயம் 25

அன்புக்குரியவன்

ஆறு தினங்களுக்கு முன்னர் நான்கு நாசகாரிகள் புடைசூழப் பிரும்மாண்டமான இரண்டு யுத்தக் கப்பல்கள் சிங்கைத் துறைமுகத்தை வந்தடைந்த செய்தி எட்டியபோது வீரர்கள் எழுப்பிய மகிழ்ச்சி ஆரவாரத்தில் தானும் கலந்து கொண்டது வடிவேலுவுக்கு நினைவு வந்தது. 'மலாயாவாழ் மக்களுக்கும் துருப்புக்களுக்கும் புதுத் தெம்பு ஊட்டிய அந்தக் கலங்களை நேரில் கண்டு திரும்பிய மைக்கேலினால் தன் சந்தோஷத்தை மறைத்துக் கொள்ள முடியவில்லையே! வெண் முகில்கள் விரவிக் கிடந்த நீல வானுக்கும் கருநீலக் கடலுக்கும் இடையில் சாம்பல் நிறத்தில் 'பிரின்ஸ் ஆப் வேல்ஸ், ரிபல்ஸ்' எனப்படும் இரண்டு கப்பல்களும் கம்பீரமாய் விளங்கியதை அன்று வர்ணிக்கக் கூடச் செய்தானே காப்டன். கனவு நனவாகியதென்றும் மலாயாவின் மட்டிலாப் பலத்தைக் கண்ணுக்கு மெய்யாகத் தான் கண்டு விட்டதாயும் திருப்தியுடன் கூறினானல்லவா? அத்தகைய மிதக்கும் இரும்புக் கோட்டைகள் இன்று புறப்பட்டு விட்டனவா? கடல் நீரைக் கிழித்துக் கொண்டு சீறிப் பாய்ந்து செல்கின்றனவா? ஜப்பானியனே, உனக்கு முடிவு காலம் நெருங்குகிறது ஜாக்கிரதை!'

இரண்டே மணி நேரத்தில் அந்த மாபெரும் யுத்தக் கப்பல்கள் இரண்டையும் ஜப்பானிய விமானங்கள் மூழ்கடித்தன!


உலகையே கிடுகிடுக்க வைத்த செய்தி அது! மலாயாவில் வசித்தவர்கள் அடைந்த பீதியைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? வடிவேலுவின் முதுகுத் தண்டில் ஒருவிதக் குறுகுறுப்பு உருவாகி உடலின் நரம்புகளிலெல்லாம் பாய்ந்தோடியது. அடுத்தடுத்து விழும் இந்தப் பேரிடிகளை யெல்லாம் எவ்வாறு தாங்குவது?

ஜப்பானிய விமானிகளின் அசகாய சூரத்தனத்தைப் பற்றிக் கதை கதையாக அவனிடம் பலர் அளந்தார்கள். ''விமானத்தில் குண்டுகளை ஏற்றிக் கொண்டு வானில் பறக்கும் அவர்கள், வேண்டுமென்றே கப்பலின் மேல்தளத்தில் விமானத்தை இறக்கி வந்து மோதுவார்கள்; விமானம் நொறுங்

கியபோதிலும் கப்பலுக்கும் பலத்த சேதம் விளையும்; தங்கள் உயிரைப் பற்றி அவர்களுக்கு லட்சியமே இல்லை.''

வடிவேலு இதைக் கேட்டுச் சிரித்தான். கப்பலில் உள்ள பீரங்கிகளினின்றும் பாயும் குண்டுபட்டு விமானம் பற்றி எரிந்தால் அந்த விமானி எப்படியானுலும் விமானம் பாழாகப் போவதையும் தான் உயிர் துறக்க வேண்டியிருப்பதையும் உணர்ந்து கப்பலின் மேல்தளத்தில் விமானத்தை இறக்கிப் பழிதீர்த்துக்கொள்ள முற்படலாம். ஆனுல் தற்கொலைப் பட்டாளமென்றே ஒன்று தனியாக இருப்பதை வடிவேலு நம்ப மறுத்தான்.

மலாயாவில் இருந்துகொண்டு ஜப்பானியனுக்காக உளவறிந்து ரேடியோக் கருவி மூலமாகச் செய்திகளை அனுப்புகிற கைதேர்ந்த ஒற்றனொருவன்தான் கடற்படை கிளம்பியதை எதிரிக்கு அறிவித்திருக்க வேண்டும் என்று சிலர் பேசிக் கொண்ட போது, கடற்படை கிளம்புகிற தகவலை இரகசியமாகப் பாதுகாத்து விடலாம் என்று எண்ணிய வெள்ளையனின் அறிவின்மையை நினைத்து வடிவேலு தலையிலடித்துக் கொள்ளாத குறையாக விசனித்தான். 'கடற்படை என்பது என்ன கட்டு மரங்களா? யாருமறியாமல் நடுக்கடலுக்கு நழுவிச் செல்ல?' கூடவே அவனுக்குக் கதிரேசனின் நினைவு வந்தது. மைக்கேலிடம் போய்த் தன் மனத்தில் இருப்பதைக் கூறிவிட எண்ணி விரைந்தான். நடக்க நடக்க அவன் வேகம் —



குறைந்தது. 'காலங் கடந்தபின் சொல்வித்தான் பயன் என்ன? கதிரேசனிடம் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த தன் மீதே சந்தேகம் ஏற்பட வழி வகுத்ததாகும்!'

''என்ன வேண்டும் உனக்கு?'' என்று மைக்கேல் கேட்ட சமயம், வடிவேலுவின் மனக் கண் முன்னால் குமாரியின் துயரம் தோய்ந்த வதனம் தோன்றியது. மன்றாடுகிற அந்தக் கண்களின் வேண்டுகோளைப் புறக்கணிக்க முடியாமல் அவன் தடுமாறினான்.

''எதற்காக வந்தாய்?'' — மைக்கேல் அதட்டினான்.

''எத்தனை நாட்களுக்கு இப்படிப் பழியாகக் காத்திருப்பது?'' என்று பொறுமை இழந்தவன்போல் கேட்டான் வடிவேலு. ''ஜப்பானியனை என்றைக்கு எதிர்த்துப் புறமுதுகிட்டு ஓடச் செய்யப் போகிறோம்?''

''தெரியவில்லை வடிவேலு!'' என்றான் மைக்கேல் புன்முறுவலுடன். ''நம்மை 'ரிஸர்வ்' பட்டாளமாக வைத்திருக்கிறார்கள். நெருக்கடி நிலையில்தான் போருக்கு அனுப்புவார்கள்....!''

இரண்டொரு நாட்களில் அந்த நெருக்கடி நிலையும் வந்து விட்டது. பகுதி பகுதியாகப் பிரிந்து சிப்பாய்கள் ரயில்களில் ஏறினார்கள். வேறு பலர் லாரிகளில் பிரயாணம் செய்தார்கள். அவற்றுள் ஒன்றில் அமர்ந்து ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டிருந்த வடிவேலு, எதிரியின் திறமையைக் குறைத்து மதிப்பிட்டுவிடவில்லை. 'கடலிலும் ஆகாயத்திலும் தன்னைக் கட்டிப் பிடிக்க முடியாதென்பதை ஏற்கனவே நிரூபித்து விட்ட அவன் நில மார்க்கமாகவும் வேகமாக நடை போடுவதைத் தடுக்கப் போர் தொடங்கிய நாலாவது நாளன்றே 'ரிஸர்வ்' பட்டாளங்களைப் பயன்படுத்த நேர்ந்ததென்றால் எல்லா விதங்களிலும் ஜப்பானியனுடைய கை ஓங்கி இருப்பதாகத்தானே அர்த்தம்? வடக்கெல்லையிலும்



கிழக்குக் கடற்கரையிலும் குவிக்கப் பட்டிருந்த பிரிட்டிஷாரின் துருப்புக்க ளெல்லாம் என்னவாயின? அவர்கள் பின்வாங்கி வருகிறார்களா? அல்லது பரலோகத்தைச் சென்றடைந்து விட் டார்களா? அவ்வாறு அவர்களைத் தோல்வியுறச் செய்தது ஜப்பானிய வீரர்களின் எண்ணிக்கையா, சண்டை யிடுவதில் அவர்களுக்குள்ள சாமர்த் தியமா, ஆயுத பலமா, அல்லது இவை அனைத்தும் ஒன்றாகச் சேர்ந்திருக் கிறதா? ஒருவேளை இவை எல்லாவற் றுக்கும் மேலாக ஏதேனும் ஓர் அசுர சக்தி அவர்களுக்குத் துணை புரிந்து கொண்டிருக்கிறதோ?'

வடிவேலு பயப்படவில்லை. சிங்கப் பூரில் தங்கியிருந்த நாட்களில் தான் குமாரியுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளாமல் இருந்திருந்தால், அவ ளுடைய அந்தரங்க நட்பைப் பெறாம லிருந்திருந்தால் தன் வாழ்க்கையில் நேரப் போகிற இந்த மிகப் பெரிய சோதனையைச் சமாளிப்பது சுலபமா யிருந்திருக்கும் என்று அவனுக்குத் தோன்றியது.

குமாரியிடமிருந்து நேற்றுத்தான் தனக்குக் கிடைத்திருந்த கடிதத்தைச் சட்டைப் பைக்குள்ளிருந்து எடுத்து எட்டாவது முறையாகப் பிரித்துப் படித்தான்.

"என் அன்புக்குரியவருக்கு....." என்று அவள் தொடங்கியிருப்பதை முதல் தடவையாகப் படித்த போது ஏற்பட்ட வியப்பு இப்போது கனி வுக்கு இடமளித்திருந்தது. விஷமத் தனம் என்று ஆரம்பத்தில் தீர்மா னித்தவன் இப்போது அந்தச் சொற்களை விரும்பி ரசித்தான். திரும்பத் திரும்ப அந்த வார்த்தைகளையே ஏழெட்டுத் தரம் முணுமுணுத்து விட்டு அடுத்த வரிகளுக்குப் போனான்.

சிங்கப்பூரில் குண்டுகள் விழுந்த போது தான் பயந்து நடுங்கியதையும் அதைவிட அதிகமாக அவள் அவனுக் காகக் கவலைப்பட்டதையும் விவரித் திருந்தாள். தன் தகப்பனாருடன் மறு நாள் குண்டு விழுந்து சேதமடைந் திருந்த ராபின் ஸ்குவார் பகுதிக்குச் சென்றிருந்ததைக் குறிப்பிட்டு, அந் தப் பரிதாபத்தைக் கண் கொண்டு பார்க்க முடியவில்லை என்றும் யுத்தம் எவ்வளவு பயங்கரமானது என்பதை இப்போதுதான் நன்றாகப் புரிந்து கொண்டதாகவும் எழுதியிருந்தாள். இறுதியாக, "வடக்கே நீங்கள் போவ தைத் தடுக்க என்னால் முடியாது. இந்தக் கடிதம் உங்கள் கைக்கு வந்து சேரு முன்னரே நீங்கள் புறப்பட்டு விட்டிருப்பீர்களோ என்னவோ என்று தான் நான் அஞ்சுகிறேன். உங்களைக் கெஞ்சிக் கூத்தாடிக் கேட்டுக் கொள் கிறேன். தயவுசெய்து எனக்காக உங்கள் உயிரைப் பத்திரமாகப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்" என்று உருக்கமாக வேண்டிக் கொண்டிருந்தாள்.

கடிதத்தை மடித்துப் பைக்குள் வைத்துக் கொண்டான் வடிவேலு.

'குமாரி! இந்தக் கடிதத்தின் மூல மாக நீ என்ன கருத்தை என் மனத் துக்குள் பதிய வைக்க முயலுகிறாய்? குழந்தைத்தனம் மாறாத சிறு பெண் என்று உன்னைப் பற்றி நான் எண்ணி வந்தது தவறா?'

வடக்குத் திசை நோக்கி உருண்டு கொண்டிருந்த சக்கரங்கள் கோலாலம் பூர், ஐபோ ஆகிய நகரங்களை யெல் லாம் கடந்து இன்னும் மேலே சென் றன. மலேயா தீபகற்பத்தின் மேற்குப் பக்கத்தில் பினாங்குத் தீவுக்கு எதிராக உள்ள வெலஸ்லி வழியாகச் செல்லும் சாலையில், லாரிகள் விரைந்து கொண் டிருந்த போது அந்தச் சத்தம் கேட்டது.

என்ன சத்தம் என்று அடையாளம் கண்டுபிடிப்பது யாருக்குமே கடின மாக இல்லை. லாரிகளெல்லாம் திடும் திடுமெனக் குலுங்கி நின்றன. வீரர்கள் கீழே குதித்துச் சாலையின் இரு பக்கங் களிலும் பிரிந்து ஓடினார்கள். தலை தெறிக்கக் கண்மூடித்தனமாகப் பாய்ந் தோடிய வடிவேலு பாதை ஓரமா யிருந்த மழை நீர் ஓடும் வாய்க்காலைக் கவனிக்கவில்லை. தடுமாறி அதனுள்ளே விழுந்தவன் மீண்டும் எழுந்திருக்கவு மில்லை. சகதியில் குப்புறப்படுத்துத் தலைக்கு மேலாக விரல்களைக் கோத் துக் கொண்டான்.

அந்தப் பயங்கர ஓசை இப்போது மிகக் கிட்டத்தில் வந்து விட்டது. ஆர் வத்தை அடக்கமாட்டாமல் இலேசாகச் சிரத்தைத் தூக்கி விழிகளை உயர்த்தினான் வடிவேலு.

பகீரென்றிருந்தது அவனுக்கு. 'ஒன்றா இரண்டா, பத்தா? இல்லை! இல்லை! எழுபதுக்குக் குறையவே குறையாது!' வானில் ஒன்றுசேரப் பறக்கும் அத் தனை பறவைகளைக் கூடப் பார்த்த தில்லை வடிவேலு. இம்மி அளவு பிச காமல் ஒரே ஒழுங்காக அந்த ஜப்பா னிய 'பாம்பர்'கள் அணிவகுத்து வரும் காட்சியிலே அழகு துலங்கியது, அரக் கத்தன்மையும் இருந்தது. திகிலைத் தருவிக்கக் கூடிய திறமை தென் பட்டது. (தொடரும்)



பாது
காப்புக்குப்
பொன்
"ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா"
அரசாங்கத்தால் நிறுவிய
'தேசியப் பாதுகாப்பு நிதிக்காக'
இந்த அபாய சமயத்தில்
நமது தேசத்தைப் பாதுகாக்கும்
SISTAS 5-8 69

மனங்கவர்ந்த விருந்தினர்கள்

மலாயாப் பிரதமர் துங்கு

மலாயா நாட்டுப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் சமீபத்தில் இந்தியாவை விட்டுச் சென்ற போது பாரத மக்களின் பேர் அன்பையும் கூடவே எடுத்துச் சென்றார். அவர் இந்நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்ய அடியெடுத்து வைத்த போது சீன ஆக்கிரமிப்புச் செய்தி வந்தது. அப்போது பிறநாடுகள் எந்தப் பக்கம் சாய்கின்றன என்று எதிர்பாராமல் சீன ஆக்கிரமிப்பைக் கண்டித்தும் இந்திய நிலையை ஆதரித்தும் பேசி, தாம் இந்தியாவின் பிரிய நண்பர் என்பதை வெளிப்படுத்திக் கொண்டார்.



மலாய் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் பிறப்பால் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்? வட மலாய் நாட்டிலுள்ள கெடா நாட்டுச் சுல்தானின் புதல்வர். இங்கிலாந்துக்குச் சென்று அவர் படித்தார். சட்டப் பரீட்சையில் தேற முடியவில்லை. தாய் நாட்டுக்குத் திரும்பி, அப்போது அங்கு நிலவிய பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் ஜில்லா கலெக்டராகப் பணியாற்றி வந்தார். இதற்குள் யுத்தம் மூண்டது. அப்போதுதான் ஒரு சுவையான சம்பவம் நிகழ்ந்தது.

அப்துல் ரஹ்மான் அவர்களின் தந்தையான சுல்தானை பிரிட்டிஷார் பினாங்கு நகரத்துக்கு ஓடிப்போய் விடும்படி கூறினர். ஒரு காரில் சுல்தான் விரைந்து கொண்டிருந்தார். அப்போது ஏ. ஆர். பி. டைரக்டர் உடையை அணிந்த ஒருவர் அந்தக் காரை நிறுத்தி, பக்கத்திலுள்ள ஒரு நகருக்குப் போகும்படி பிரிட்டிஷார் மறு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள் என்று கூறினார். கார் திசை மாறிச் சென்றது. பிறகுதான் அப்படி ஓர் உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்பதும், ஏ.ஆர்.பி. உடையில் வந்து திசையை மாற்றிய அதிகாரி சுல்தானின் புதல்வரான துங்கு அப்துல் ரஹ்மான்தான் என்பதும் தெரிய வந்தன. இவ்வுண்மை அறிந்த அப்துல் ரஹ்மானின் சகோதரர், "ஏன் இப்படிச் செய்தாய்?" என்று அவரைக் கடுமையாகக் கோபித்துக் கொண்டாராம். "தம் மக்களுக்குக் கஷ்டம் வந்த காலத்தில் சுல்தானாக இருப்பவர் மக்களை விட்டு ஓடலாமா, என்ன? அதனால்தான் இப்படிச் செய்தேன்" என்றாராம் துங்கு.

அரசாங்க உத்தரவை எவ்வளவு உயரிய நோக்கத்தோடு மீறியிருக்கிறார், பாருங்கள்.

1946-ம் ஆண்டு இங்கிலாந்து சென்று பல ஆண்டுகளுக்கு முன் விட்ட சட்டப் படிப்பை மீண்டும் படித்துத் தேறினார். அப்போது தான் அவருக்கு அரசியலிலும் சுதந்திரக் கிளர்ச்சியிலும் ஆர்வம் ஏற்பட்டது.

1957-ம் ஆண்டு மலாய் நாட்டுக்குச் சுதந்திரம் வந்தது.

சுதந்திர நாட்டுக்குப் பொருத்தமான பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான்தான் என்று மலாய் நாட்டு மக்கள் ஏகோபித்துத் தீர்மானித்தனர்.

இப்போது அப்துல் ரஹ்மான் இழக்காசியாவில் கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கத்தை ஒழிக்கச் சிங்கப்பூருடன் இணைந்த மலேஷியாவைச் சிருஷ்டிக்க முயன்று வருகிறார்!

சைப்ரஸ் ஜனாதிபதி மக்காரியாஸ்

சீனாவின் ஆக்கிரமிப்பைக் கண்டித்து, நமக்கு அன்பும் அனுதாபமும் தெரிவித்த மற்றொரு அந்நிய நாட்டு விருந்தினர் சைப்ரஸ் ஜனாதிபதியான ஆர்ச் பிஷப் மக்காரியாஸ்.

"கடவுளுக்கும் மக்காரியாஸுக்குமிடையில் யாருமே கிடையாது!" என்று கூறினாராம் ஒரு சைப்ரஸ் பிரஜை. அதாவது மக்காரியாஸின் வாக்கைக் கடவுளின் கட்டளையாகவே தாங்கள் கருதுவதாக அவர் கூறினார்.



ஐரோப்பாவில் மத்திய தரைக் கடலில் துருக்கிக்கு நாற்பது மைல் தூரத்தில் சைப்ரஸ் என்ற சின்னஞ் சிறு தீவு உள்ளது. தீவு சிறியதாயினும் அதன் கீர்த்தி பெரியது. கிறிஸ்து பிறப்பதற்கு ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முந்தியே எழுநூறு மைல் தொலைவில் உள்ள கிரேக்க நாட்டுடன் தொடர்பு கொண்டிருக்கிறது.

சைப்ரஸ் மக்கள் பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, கிரீஸுடன் இணைய வேண்டும் என்று ஆர்ச் பிஷப் மக்காரியாஸ் தலைமையில் பெரும் கிளர்ச்சி நடத்தினர். சைப்ரஸில் உள்ள கிரேக்கர்களுக்குப் பூரண சுதந்திரம் கொடுத்தால் சிறுபான்மையோரான துருக்கியர்கள் கதி என்ன ஆவது என்று பிரிட்டிஷார் சொல்லி வந்தனர். கிளர்ச்சி வலுவுற்றபோது மக்காரியாஸை நாடு கடத்தி இந்து மகா சமுத்திரத்தில் ஒரு தீவில் சிறைப்படுத்தி வைத்திருந்தனர். மக்கள் எழுச்சி இதனால் குன்றிவிடவில்லை; வளர்ச்சியே பெற்றது. கடைசியில் 1959-ம் ஆண்டு பிரிட்டிஷ் அரசாங்கம் பாதுகாப்புக்குரிய ராணுவ தளங்களைத் தன் வசம் வைத்துக்கொண்டு சைப்ரஸுக்குப் பூரண சுதந்திரம் அளித்தது. சைப்ரஸ் மக்கள் தங்கள் குடியரசின் முதல் ஜனாதிபதியாக ஆர்ச் பிஷப் மக்காரியாஸையே தேர்ந்தெடுத்து, 1960-ம் ஆண்டு 16-ந் தேதி அவரை அந்தப் பதவியில் அமர்த்திக் கொண்டாடினர். இறை பணி புரியப் பிறந்தவர் சந்தர்ப்ப விசேஷத்தால் தமது நாட்டின் விடுதலைப் போரில் ஈடுபட்டுத் தமது மக்கள் அந்த லட்சியத்தை அடையச் செய்த தீரர் ஆர்ச் பிஷப் மக்காரியாஸ்.





ஸரோஜா ராமமூர்த்தி

மூல ஸ்தானத்தில் எழிலுருவம் காட்டிப் புன்னகை செய்தபடி நின்றிருந்த அம்பிகையின் திரு மார்பில் வைரப் பதக்கம் சுடர் விட்டது. மரகதமும், கெம்பும், புஷ்பராகமும் சேர்த்து இழைத்த நவமணிப் பதக்கம் அது. அதை இருபுறமும் தகதக வென்று மின்னும் தங்கச் சங்கிலி தாங்கியபடி மார்பில் துவண்ட கோலம் பார்ப்பவரின் கருத்தை ஈர்க்கத்தான் செய்தது.

குருக்கள் திருநாமங்களைக் கூறி அர்ச்சித்தபடி அம்பிகையின் அழகில் மூழ்கியிருந்தார். எல்லையில்லா எழிலில் தன்னை மறந்து — ஏன் 'தான்' என்பதையே மறந்து அவர் அந்தச் சக்தியுடன் ஒன்றிய மனத்தினராக ஆகி விட்டார் என்று பெருமை கொள்ள முடியாது. அம்பிகை எழிலாக விளங்குவதற்குத் 'தான்' தான் காரணம் என்று கணபதிக் குருக்கள் கருதினார். இறுமாந்தார். அம்பிகையின் கண்டத்தில் புரளும் அந்தப் பதக்கத்தை நிர்மாணித்த பொற்கொல்லர் இடுப்பில் வரிந்து கட்டிய வேஷ்டியுடன் கண்களை மூடித் தியானிப்பது போல் நின்றிருந்தார். உண்மையிலே அவர் கண்களை மூடி அவளைத்தான் தியானிக்கிறாரா? அதோ அந்த இரு நயனங்களும் மூடி மூடித் திறக்கின்றனவே. அப்பொழுதெல்லாம், சுடர்விட்டு ஒளி வீசும் அந்தப் பதக்கம் 'என்னை உண்டாக்கியவன் நீதான், நீதான்' என்று கூறி அவரைத் 'தான்' என்கிற அகங்கார மாயையில், மாட்டி விடுவதேன்?

பொற்கொல்லர் தம் கண்களை நன்றாகத் திறந்து விட்டார்.

''ஆறுமுகம்! உன் கைத்திறமையே திறமை. பதக்கம் கன ஜோராக அமைந்து விட்டதப்பா.'' கணபதிக் குருக்கள் ஆறுமுகத்தை நோக்கிப் பேசவும், ஆறுமுகம் இறுமாப்புடன் தம்மையே தாம் நோக்கி இறும்பூது எய்தினார். கின்னுக் கின்னாகக் கொசுவம் வைத்துத் தைத்த சந்தன வண்ணப் பட்டுப் பாவாடை அம்பிகையின் பாதச் சிலம்புகளுடன் உறவாடி, உராய்ந்து மகிழ்ந்து கொண்டிருந்தது. அதை அம்பிகைக்குத் தம் காணிக்கையாகச் செலுத்திய வேலுச் செட்டியார்தான் அந்த ஊரில் பிரபலமான ஜவுளிக் கடைக்காரர். வேலுச் செட்டியார் கடையில்தான் பிரபல சினிமா நட்சத்திரங்கள் தீபாவளி, புத்தாண்டுச் சமயங்களில் ஜவுளி எடுப்பது வழக்கம். அந்த ஆண்டும் பிரபல நடிகை ஒருத்தி அவர் கடை தேடி வந்து மூவாயிரம் ரூபாய்க்குப் புடவைகள்

எடுத்துப் போன மகிழ்ச்சியை, இந்தப் பாவாடையை அம்பாளுக்குச் சாத்தி மகிழ்வதின் மூலமாக வேலூச் செட்டியார் தம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்.

''செட்டியார்வாள்! பாவாடை இருக்கு, பாருங்கோ. பார்டர் தனி ரகம். இந்த வருஷத்துப் புதுப் பாஷன் போலிருக்கு'' என்று கணபதிக் குருக்கள் மகிழ்ந்து கூற, ''ஆமாங்க, அனுசூயா தேவி இந்த மாதிரி ஒரு சேலை வாங்கிட்டுப் போனுங்க. அதிலேருந்து அம்பாளுக்கும் இது நல்ல டிசைன்னு பாவாடை போடச் சொல்லிக்கொண்டு வந்தேன். நல்லா இருந்தா சரிதான்'' என்றவாறு 'தான்' அளித்த உடையைப் பார்த்துத் தம்முடையது என்கிற நினைப்பில் மூழ்கியிருந்தார் அவர்.

இரு புறங்களிலும் தோள்களிலிருந்து வழிந்து துவண்ட பெரிய பெரிய ரோஜா மாலைகள் இரண்டும் பன்னீர் மணத்துடன் கம்மென்று மணத்தன. பூக்கார முத்து நெற்றியில் அப்பிய குங்குமத்துடன் கரங்களைக் கூப்பியவாறு நின்றிருந்தார் அங்கே. ஓர் அடுக்கு ரோஜா மலர்கள், இடையில் கதிர்ப் பச்சை, திரும்பவும் . ரோஜாக்கள், அடுத்த வரிசை தவனம் என்று ரோஜாவும் பச்சையுமாக அந்த மாலைகள் அபூர்வ வேலைப்பாடுடையவை. தஞ்சையில் பூக்கட்டிப் பெயர் பெற்ற முத்து வாயிற்றே. ''மாலை யாருடைய கைங்கரியம்?'' என்று பொற்கொல்லர் ஆறுமுகம் குருக்களைக் கேட்டார்.

''ஆமாங்க. நல்ல பெயர் வாங்கியிருந்தாங்க. தெற்கே எந்தக் தலத்திலும் உற்சவக் காலங்களில் அவர் கைங்கர்யம்தாங்க. அதோ நிற்கிறார் பாருங்க. அவர்தாங்க....'' முத்துவைச் சுட்டிக் காட்டிப் பேசினார் குருக்கள்.

பூக்காரர் முத்து மிகமிக விநயத்துடன் பொற்கொல்லரைப் பார்த்துத் தம் விரல்களில் உள்ள மோதிரங்கள் பளிச்சிடக் கையெடுத்து வணங்கினார். இந்தத் தொழிலிலே தாம் கைதேர்ந்தவர், அதற்கு அத்தாட்சியாகப் பெற்ற சம்மானங்களே இந்த மோதிரங்கள் என்று கூறுவது போல் குழல் விளக்கின் ஒளியில் தகதகவென்று மோதிரங்கள் ஒளியிட்டன.

வெளியே நாதஸ்வரத்தின் இசை ஷண்முகப்பிரியா ராகமாக உருவெடுத்துப் பெருகி வழிந்தது. பந்தல் முழுதும் மக்கள் நிரம்பி இசை அமுதத்தில் மூழ்கியிருந்தனர். வித்வான் அடிக்கடி திறந்திருந்த தம் மார்பைக் குனிந்து பார்த்துக் கொண்டார். ஆங்காங்கு வாங்கிய பொற் பதக்கங்களை மாலையாக அணிந்திருந்தார் அவர். மகாராஜாக்கள் அவர் வித்தையை மதித்துப் போற்றிக் கொடுத்த பட்டுச் சால்வை ஒன்றை வரிந்து இடுப்பில் கட்டியிருந்தார். தோற்றம் மிடுக்காக இருந்தாலும், தெய்வ சன்னிதியில் இருக்க வேண்டிய பணிவு, அடக்கம், பக்தி குறைவாகத்தான் காணப்பட்டது.

வேலூச் செட்டியார் பாட்டை ரசித்துச் சிரக்கம்பம் செய்தார். ''பையன் யாருங்க? புதுசா இருக்கே?'' என்று குருக்களிடம் விசாரித்தார் அவர்.

''புதுசா? நீங்க என்ன அப்படிக் கேட்கறீங்க? உங்க காலத்திலே சங்கரம் பிள்ளைன்னு பிரபலமா இருந்த நாகஸ்வர வித்வானைப் பத்திக் கேட்டிருப்பீங்க. அவர் மகன்தாங்க.....நம்ப ஊரிலே பிறந்த பையன்தான்! பொறந்து எட்டு வருஷம் பேச்சே வராமல் கிடந்தான். அவன் அம்மா இந்தக் கோயிலைச் சுத்திச் சுத்தித் தவம் கிடந்தா. அவ என்ன வேண்டிக்கிட்டாளோ அந்த அம்பிகைக்குத்தான் தெரியும். கிடுகிடுன்னு இருபத்திரண்டு வயசுக்குள் மகா வித்வான் ஆயிட்டான்! அவன் அம்மா சாககறத்துக்கு முந்தி, 'குருக்களய்யா! பையன் பேசணும்னு ஆத்தாளைக் கேட்டேன். பாடவே வச்சுட்டா. வருஷா வருஷம் நவராத்திரியிலே ஒரு நாள் அவன் எங்கேயிருந்தாலும், அவன் மறந்து போனாலும், நீங்க மறக்காமல் அவனை நம்ப ஊர்க் கோயிலுக்கு ஒரு நாள் வாசிக்கச் சொல்லுங்க'ன்னு கேட்டுட்டுப் பிராணனை விட்டாள். இந்தப் பையனைத் தேடிப் பிடிக்கிறது பெரிய பாடுங்க. இந்த வருஷம்கூட 'ஹாய், ஊய்.... எனக்கு அங்கே கச்சேரி, இங்கே கச்சேரி' என்று தபாய்ச்சான். எப்படியோ சொல்லி இழுத்து வந்தேன்.''

நாகஸ்வர வித்வான் ஒரு கணம் பாட்டை நிறுத்தி விட்டுத் தம்மைச் சூழ்ந்திருந்த திரளான மக்களைப் பார்த்தார். ''ஆஹா! இந்தச் சிறிய கோயிலுக்கு இவ்வளவு கூட்டம் கூட வருவதுண்டா? என்ன எல்லாம் என்னுடைய இசையின் மகிமை!'' என்று நினைத்தவாறு சங்கராபரணத்தில் கீர்த்தனம் ஒன்றை ஆரம்பித்தார்.

கோயிலின் பிராகாரமெங்கும் முத்து முத்தாக இழை கோலங்கள் மிளிர்ந்தன. சிக்குத் தாமரையும், தேர்க் கோலமும், மண்டபங்களும், வாழை இலைக் கொத்துக்களும், கிளிகள் தாங்கும் மணி அரங்குகளுமாகச் சுத்தமான அரிசி மாவினால் கீற்றுக் கீற்றாக அவை மின்னின. நிலவைக் குழைத்து வானத்திலிருந்து மயன்தான் பூமிக்கு இறங்கி இந்த மாயா ஜாலங்களை வாரி

வாரி இறைத்திருக்க வேண்டும் என்று நினைக்கும்படி இருந்தது.

கூட்டம் நிரம்பி வழிந்த சன்னிதியில் பொற் கொல்லர் ஆறுமுகத்துக்கு அம்பிகையின் மாலையை அணிவித்துப் பிரசாதம் கொடுத்துக் கௌரவித்தார்கள். வேலுச் செட்டியார் தம் இரண்டு கரங்களாலும் மாலையைப் பெற்றுக்கொண்டு குங்குமத்தை, ''அம்மா! தாயே. என் வியாபாரம் செழிக்க வேண்டும்'' என்று தம்மைப் பற்றி நினைத்தவாறு நெற்றியில் அப்பிக் கொண்டார். பூக்கார முத்து வாயெல்லாம் பல்லாகப் பிரசாதம் பெற்றுக் கொண்டார். நாகஸ்வர வித்வானுக்கு இன்னொரு பொற்பதக்கம் கிடைத்தது.

அதோ! தூண்களின் மறைவில் ஏகாக்ர சிந்தனையுடன் அம்பிகையின் திரு உருவில் தன்னை லயிக்க விட்டுச் சுற்றுப்புறத்தை மறந்த ஏழை பார்வதியையும், அவள் மாக்கோலங்களையும் யார் கவனிக்கிறார்கள்? பக்தர்களின் கால்களில் மிதிபட்டு அழியும் சிக்குத் தாமரை, தேர்க் கோலத்தைப் பார்த்துப் பெருமூச்செறிந்து பேசியது.

''இதோ! மௌனமாக மிதிபட்டு அழிந்து போகும் நாம் நம்மைப் பற்றியோ, நம்மைப் படைத்தவளைப் பற்றியோ ஒரு வார்த்தை பேச அருகதையற்றவர்களாகி விட்டோம்.''

தேர்க்கோலம் பெருமையுடன் அதற்குப் பதில் கூறும்: — ''உன்னையும், என்னையும் படைத்தவள் அதோ தூண் மறைவில் நிற்கிறாள். ஆனால், அவள் உன்னையும், என்னையும் படைத்த விநாடியில் அதைப்பற்றி மறந்து விட்டாள். ஏன்? அவள் தன்னையே மறந்து நிற்கிறாள். உயிரற்ற நாமும், உயிருள்ள அவளும் இப்பொழுது ஒன்றுதான்......''

தன்னை மறந்த பார்வதிக்குக் குருக்களிடமிருந்து பிரசாதம் பெற்றுக் கொள்ளக் கூடத் தெரியவில்லை. அவளுக்குத் தான் ஊரார் பிரமை பிடித்தவள், அரைப் பைத்தியம் என்ற பெயரைச் சூட்டியிருக்கிறார்களே? நாம் ஏன் அது குறித்து வருந்த வேண்டும்?

படித்துப்  பாருங்கள்

ஸ்ரீ காவேரி ரஹஸ்யம்

'காமகோடி புரீம் காஞ்சீம் காவேரீம் சவரித் வராம்' என்பதாகக் காமகோடியையும் காவேரியையும் அடுத்தடுத்துப் பேசுகிறது ஸ்ரீமத் பாகவதம். இதிலும் ஒரு பொருத்தம் இருப்பதே போல் காமகோடி பீடத்து ஆசாரிய ஸ்வாமிகள் காவிரியாற்றின் புராண, இலக்கிய, சரித்திர மகிமைகளையெல்லாம் தொகுத்து ஒரு நூலாக வெளியிட வேண்டுமென்று எண்ணம் கொண்டார்கள். அந்த எண்ணமே ஓர் உருவம் கொண்டு இந்த அரிய நூலாக வாசகர்களுக்குக் கிடைத்திருக்கிறது. தொகுப்பாசிரியராக நற்பணி புரிந்துள்ள ஸ்ரீ பி. மகாதேவ அய்யர் அவர்களுக்கு நம் பாராட்டும், நன்றியும் உரித்தாகின்றன.

தமிழகத்தின் நீர் வளத்துக்கு மட்டுமின்றித் தமிழ் மக்களின் கலை வளத்துக்கும் தாயாகத் திகழ்பவள் காவிரி. இவளது பெருமையை உலகுக்கெல்லாம் ஒரு பொது இலக்கியமாகிய வேதமும் கூறுகிறது. அகஸ்தியர் பத்தினியாகிய லோபாமுத்ரையே காவிரி ஆறாகி அருள் புரிந்தாள் என்பது திக்வேத வரலாறு. ஸ்காந்தம், ஆக்னேயம், பிரம்ம வைவர்த்தம், பாகவதம் முதலிய புராணங்களும் காவிரியைப் பலபடப் போற்றிப் புகழ்ந்துள்ளன. தமிழகத்தின் தவச் சொத்தாகிய தெய்வக் காவிரியைத் தமிழ்க் கவிகள் — நாயன்மார்களும், ஆழ்வாரும் கூட மகா கவிகள் அல்லவா?—அந்த ஆற்றின் கதியோடு போட்டியிடும் அழகுநடையில் பாடியுள்ளனர். இப்படிக் காவிரியைக் குறித்து சம்ஸ்கிருதத்திலும், தமிழிலும் உள்ள எல்லா முக்கியமான குறிப்புக்களையும் தன்னகத்தே கொண்டு 'காவிரி — என்ஸைக்ளோபீடியா' வாக விளங்குகிறது இந்நூல்.

புராணப்படி காவிரியின் கதையைக் கூறுவதுடன், பிரத்தியட்சத்தில் காண்பது போலவே காவிரியின் உற்பத்தி ஸ்தானத்திலிருந்து சங்கம ஸ்தானம் வரையில் அந்த ஆற்றின் போக்கைப் பூகோள ரீதியில் விளக்கும் பகுதியும் இந்நூலில் உண்டு.

தீர்த்தாடனத்துடன் க்ஷேத்திராடனமும் செய்யும் தூய உணர்ச்சியையும் இந்நூல் நல்குகிறது. காவிரியின் இருமருங்கும் விளங்கும் ஸ்தலங்களுக்கெல்லாம் நம்மை இட்டுச் செல்கிறது இப்புத்தகம். புனித காவிரி தீரத்தில் வாழ்ந்த பல புனிதர்களின் வாழ்க்கைக் குறிப்புக்களையும் இதில் காண்கிறோம்.

காவேரி பூஜாவிதியும், இந்த நதியைக் குறித்த துதிகளும் ஆஸ்திகர்களின் இதயத்துக்கு அரும் சுவை நீராகும்.

நல்லதொரு முயற்சி நல்ல முறையில் பலிதமாகியிருக்கிறது. பழத்தைப் புசித்து மகிழுவது வாசகர்கள் கையில் இருக்கிறது.

கிடைக்குமிடங்கள்: டி. ஜீ. கோபால் பிள்ளை அண்டு கம்பெனி, புத்தகப் பதிப்பகத்தார், திருச்சி-2; பி. ஜீ. பால் அண்டு கம்பெனி, 4, பிரான்ஸிஸ் ஜோசப் தெரு, சென்னை—1; விலை: ரூ. 4.

சிறு தொழில்களுக்கு மின்சாரக் கட்டண உதவி

தமிழ் நாட்டில் உள்ள எல்லாச் சிறு தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்களுக்கு மின்சாரக் கட்டணத்தில் உதவி நிதி அளிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதில் அரிசி, மாவு, எண்ணெய் மில்கள், காப்பிக் கொட்டை அரைக்கும் மில்கள், மற்றும் கைத்தறி போர்டின் கீழ் வரும் தொழில்களுக்கு உதவி தரப்பட மாட்டாது. உயர்ந்த பட்சம் மின்சார லோடு 20 குதிரைச் சக்திக்கு மேல் இராத தொழில்களுக்குக் கீழ்க் கண்ட நிபந்தனைகளின்மேல் இந்த உதவி தரப்படும்.

மாநில கதர் கிராமத் தொழில் போர்டின் நிர்வாகத்தின் கீழ் உள்ள கதர் கிராமத் தொழில் யூனிட்டுகள், மற்றும் கிராமத் தொழில்களில் ஈடுபட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இந்தத் திட்டம் பொருந்தும். இதிலும் உயர்ந்த பட்ச மின்சார லோடு 20 குதிரைச் சக்திக்கு மேல் இருதல்லாகாது.

1. தலா யூனிட்டுக்கு ஒன்பது புதுக்காசுகளுக்கு அதிகமாக உள்ள தொகை உதவியாகக் கொடுக்கப்படும். ஆனால் இந்த உதவித் தொகையும் தலா ஒரு யூனிட்டுக்கு ஒன்பது புதுக்காசுகளுக்கு மேல் தரப்படமாட்டாது.

2. மாநில அரசாங்கம் விதிக்கும் மின்சாரக் கட்டணங்கள் இந்த உதவியில் அடங்காது.

3. விவசாய காரியங்களுக்கான துணைத் தொழில்கள், அரிசி, மாவு, எண்ணெய் மில்கள், காப்பிக் கொட்டை அரைத்தல் மற்றும் கைத்தறி போர்டின் கீழ்வரும் தொழில்கள் நீங்கலாக, உயர்ந்த பட்ச மின்சார லோடு 7.5 குதிரைச் சக்திக்கு அதிகமில்லாத எல்லா சிறு தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்கள், அவைத் தொழிற்சாலைச் சட்டத்தின்கீழ் வந்தாலும் இல்லாவிட்டாலும் அவைகளுக்கு விவசாயக் காப்பு வரி விதப்படி கட்டணம் விதிக்கப்படும். தொழில் காப்பு வரியானது ஒன்பது புதுக்காசுகளுக்கு அதிகப்படாமல் இருந்தால், தொழில் காப்பு வரிக்கும், விவசாயக் காப்பு வரிக்கும் உள்ள வித்தியாசத் தொகையானது உதவியாகத் தரப்படும்.

இதுபற்றிய முழு விவரங்களை சம்பந்தப்பட்ட மாவட்ட தொழில் வர்த்தகத்துறை உதவி நெறியாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வெளியிட்டது:

தொழில் வர்த்தகத்துறை நெறியாளர் — சென்னை-5

வக்கீல் வராகசாமி பிரபல வக்கீல். மிக மிகப் பிரபல வக்கீல் என்பது ஊர் அறிந்த, நாடறிந்த விஷயம். பணம்தான் பேசும் அவரிடம் என்பதும் பலர் அறிந்த விஷயம். அவரது அறையைப் பார்த்தவர்கள் அப்படியே அசந்து போய்விடுவார்கள். அத்தனை சட்டப் புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். பீஸ் வாங்குவதிலும் அவர் வல்லாளகண்டர். அவர் கேட்பதைக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் கனகோபம் அவருக்கு வந்து விடும்.

அன்று அவர் தம் அறையில் அமர்ந்து ஏதோ சட்டப் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தார். இளைஞன் ஒருவன் அவரை அணுகி வணக்கம் தெரிவித்தான். 'என்ன?' என்று கேட்கும் தோரணையில் அவனை ஏற இறங்கப் பார்த்தவர், எடுத்ததும், "பீஸ் கொண்டு வந்திருக்கிறாயா?" என்று கேட்டார். குரலில் கடுமை தொனித்தது. ஒருவேளை இந்தச் சின்னப் பிள்ளை பெரிதாக என்ன 'பீஸ்' கொண்டு வந்திருக்கப் போகிறான் என்ற அலட்சிய பாவம்தான் அவரை அப்படிப் பேச வைத்ததோ என்னவோ?


இளைஞன் கலவரமடைந்து விடவில்லை: "உங்கள் பீஸ் என்னவோ?" என்று பவ்யமாகக் கேட்டான்.

"என் பீஸ் என்னவென்று தெரியாமலே என்னை வக்கீலாக அமர்த்திக் கொள்ள வந்தாயா? நல்ல ஆள் அப்பா நீ!" என்றார் முன்னைக் காட்டிலும் அதிகக் கடுமையுடன்.

"நம்பினால் நம்புங்கள், நம்பாவிட்டால் போங்கள். நிசமாக எனக்கு உங்கள் பீஸ் என்னவென்று தெரியாது!" என்றான் இளைஞன் இளநகையுடன்.

"சட்ட ஆலோசனை மட்டும் கேட்க வேண்டுமென்றால்...." — இதைச் சொல்லும் பொழுதுதான் அவர் சொல்லிலும் முகத்திலும் என்ன காம்பீர்யம்! — "முந்நூறு ரூபாய் வாங்குகிறேன்!" என்று முடித்தார்.

"நூறு ரூபாய் நோட்டுக்களில் கள்ள நோட்டுகள் உலாவுவதால் ஒரு வேளை வாங்க மாட்டீர்களோ என்று பத்து ரூபாய் நோட்டுக்களாகவே கொண்டுவந்திருக்கிறேன்!" என்று கூறி முந்நூறு ரூபாயை எண்ணி வைத்தான் இளைஞன்.



பணத்தைப் பார்த்ததும் வராகசாமியின் முகம் மலர்ந்தது. கொதித்த கடுமை தணிந்து விட்டது. "என்ன விஷயம்? சொல்லுங்கள்!" என்றார்.

"விஷயம் ஒன்றும் பிரமாதமில்லை. என் நண்பர் ஒருவருக்குக் குழந்தை இல்லை. கல்யாணமாகி நாலைந்து ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது....!"

"குழந்தை எப்பொழுது பிறக்கும் என்று கேட்க என்னிடம் வருவதற்குப் பதிலாக ஒரு நல்ல சோதிடரிடம் அல்லவா போக வேண்டும்! தவறான இடத்துக்கல்லவா வந்திருக்கிறீர்கள்!"

இளைஞன் அமைதியாக, "குழந்தை பிறக்குமா, பிறக்காதா என்ற பிரச்னைக்குத் தீர்வு காண உங்களை நாடி வரவில்லை. நான் வந்தது வேறு காரியத்துக்காக" என்றான்.

"சொல்லுங்கள்!"

"விஷயம் என்னவென்றால், என் நண்பன் இன்னொரு கலியாணம் செய்து கொள்ள விரும்புகிறான்!"

"பேஷாக, மேளதாளத்துடன் செய்து கொள்ளட்டுமே! யார் வேண்டாம் என்றார்கள். ஆனால் நான் கல்யாணத் தரகரோ, புரோகிதனோ இல்லையே! எதற்காக என்னிடம் ஆலோசனை கேட்க வந்துள்ளீர்கள்?"

"முதல் மனைவி இடையூறாகக் குறுக்கே நிற்கலாமல்லவா?"

"அதெல்லாம் ஒன்றும் பெரிய இடைஞ்சல் இல்லை, ஐயா! அவளை பொதுவாகப் பிறந்த வீட்டுக்கு அனுப்பி விடுங்கள். அப்புறம் அவளைத் திரும்ப அழைக்கவே அழைக்காதீர்கள்!"

"அவளாக வந்து விட்டால்.....?"

"வீட்டுக்குள் நுழைய விடாதீர்கள்!"

"அடிதடி, சண்டை என்று ஏதாவது ஏற்பட்டால்...."

"இந்த அடிதடிச் சண்டையை யார் ஐயா இந்த நாளில் பெரிதாக நினைக்கி



வக்கீல் வராகசாமி

— குறும்பன் —

ளூர்கள்? சட்டம் இதையெல்லாம் பொருட்படுத்தாது, ஐயா!''

''அவன் உறவினரும் உங்களைப் போலப் பெரிய வக்கில் ஆயிற்றே!''

'' இருக்கட்டுமே! மீதமிருப்பின் போனால் அவனுக்கு ஜீவனாம்சம் கேட்பார்கள். அவ்வளவுதானே?''

''கேட்கும் ஜீவனாம்சத்தைக் கொடுக்கத் தயார்!''

''இந்த இருதாரத் தடைச் சட்டம்.....''

''அதெல்லாம் கலியாணத்துக்கு முந்தி யாராவது தடுத்தால்தான் உண்டு. கல்யாணம் என்று ஆகிவிட்டால் அப்புறம் யார் என்ன செய்ய முடியும்?''

''ஒன்றும் செய்ய முடியாதா?''

''முடியாது, ஐயா, முடியாது. சொந்தத் தகப்பனே வக்கீலாயிருந்தால் கூட உங்களை அசைக்க முடியாது. இந்த நாளிலே சட்டம் இப்படியும் பேசும், அப்படியும் பேசும்!''

''இதிலே சந்தேகம் இல்லையே? அப்படியானால் அவன் முதல் மனைவியை அவள் தாய் வீட்டுக்கு அனுப்பிவிடலாம் இல்லையா?''

''அனுப்புங்க ஐயா! பயப்படவே தேவையில்லை!''

''அப்படியானால் வரட்டுமா?'' என்று கேட்ட வாலிபன், ''வழக்கு என்று வந்தால் எங்கள் கட்சியை நீங்கள் எடுத்துக் கொள்வீர்கள் அல்லவா?'' என்று கேட்டான்.

''சந்தேகமே படவேண்டாம். தாராளமாக வாருங்கள். எனக்கு ஏற்பட்ட பீஸை மட்டும் குறையாமல் 'கரெக்டா' கொடுத்து விட வேண்டும். இதே போன்ற ஒரு வழக்கைத் தான் இப்போது நான் நடத்திக் கொண்டிருக்கிறேன். வெற்றியைப் பற்றிச் சந்தேகம் இல்லை'' என்றார் வராகசாமி.

ஃ ஃ ஃ

மறுநாள் காலை வராகசாமி கோர்ட்டுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். அவர் பெண் மதுரம் அவரெதிரே வந்து நின்றாள். அவள் முகம் போயிருந்த போக்கைச் சொல்லி முடியாது. என்ன என்று கேட்கத் தோன்றவில்லை வராகசாமிக்கு. அப்படியே திகைத்துத் திக்பிரமை பிடித்தவர் போல் நின்றார்.

''அப்பா! அப்பா! என் வாழ்க்கையையே குட்டிச் சுவராக்கி விட்டீர்களே!'' என்று விசும்பியவாறே கூறினாள் மதுரம்.

''என்ன, உன வாழ்க்கையை நான் குட்டிச் சுவராக்கினேனா? எத்தனை ரூபாய் செலவழித்து, நீ நன்றாக இருக்க வேண்டுமென்பதற்காகப் பெரிய இடத்தில் கல்யாணம் செய்து வைத்தேன்!'' — வராகசாமி வியப்புடன் கேட்டார்.

''என் கணவருக்கு மறுமணம் செய்து கொள்ளலாம் என்று ஆலோசனை கூறியது நீங்கள் தானே?''

''நானா? நான் எங்கேயாவது அப்படிச் சொல்வேனா, அம்மா!''

''சொல்வதையும் சொல்லி விட்டு இல்லையென்று மறைக்கமுடியுமா? நேற்று முந்நூறு ரூபாய் வாங்கிக் கொண்டு நீங்கள் ஆலோசனை சொன்னீர்களே, அது யாருக்கு?'' — மதுரம் விம்மி, விம்மி அழலானாள்.

வராகசாமி அப்படியே தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார். அவருக்கு உலகமே சுற்றுவது போல் இருந்தது.

'எத்தனை சட்டம் படித்து என்ன? தனக்கு வந்தால்தானே தெரியும் தலைவலியும், திருகுவலியும்? — இப்படி என் ஆலோசனையே என்னைக் கெடுக்க வேண்டுமா?' என்று எண்ணியவருக்கு, இனி பணத்துக்காக வழக்கெடுத்துக் கொள்ளக் கூடாது; நீதியையும், நியாயத்தையும் நிலைநாட்டவே பாடுபட வேண்டும் என்று தோன்றியது. ''நீ உள்ளே போம்மா! நான் ஒரு கை பார்த்துவிடுகிறேன்!'' என்று சொல்லி விட்டுக் கோர்ட்டுக்குப் புறப்பட்டார்.

கோர்ட்டுக்குப் போனதும் முதல் காரியமாகத் தாம் எடுத்துக் கொண்டிருந்த ஜீவனாம்ச வழக்கைச் சல்லிசாகச் சமாதானம் செய்து தீர்த்து வைத்தார். தம் கட்சிக்காரனை மறுமணம் செய்து கொள்ளாமல் இருக்குமாறும் சம்மதிக்க வைத்தார். அவர் எடுத்துக் கொண்ட வழக்குகளில் அது ஒன்று தான் அனுமார் வால் போல் நீளாமல், நல்லபடியாக முடிந்தது.

அந்த மகிழ்ச்சியில் வீட்டுக்கு வந்து பார்த்தால், பெண்ணைக் காணோம். என்னவோ, ஏதோ என்று பயந்தவருக்குப் பெண்ணின் கணவன் வந்து அவளைத் தன் வீட்டுக்கு அழைத்துப் போய் விட்டதாக நல்ல செய்தியே காத்திருந்தது.



‘ஹேவ் ஹோ’ தேர்த் திருநாள்

ஆனந்தமாக கோஷமிட்டுக்கொண்டு ரதத்தை இழுக்கிறார்கள் பக்தகோடிகள் அவர்கள் இஷ்டதெய்வத்தைத் தாங்கி, நகரத்தின் முக்கிய வீதிகளில் கம்பீரமாக நகர்ந்து செல்கிறது ஜகன்னாத ஸ்வாமி திருத் தேர். தென்னிந்தியாவில் தேர்த் திருநாள் ஓர் உன்னதக் காட்சி; ஆனந்த பரவசமும், பக்திப் பரவசமும் ஒருங்கே அமைந்த காட்சி. அரவிந்த் துணிகள் அணியும்போதும் அம்மாதிரியான மகிழ்ச்சி அனைவருக்கும் ஏற்படுகிறது. அவர்கள் தேர்ந்தெடுக்கும் உயரிய துணிகளல்லவா அவை!

ஸான்பொரைஸ்டு பாப்லின்கள்	-	கோல்ட்டிரிங், ப்ளு பேர்ட்
	-	எவர்பிரைட், குட்லைன், 3602, 3612
வேஷ்டிகள்	-	ராஜா ஸ்பெஷல், ராணி ஸ்பெஷல்
	-	ஜனதா ஸ்பெஷல், பிளாட்டினம்
பிரிண்டுகள்	-	பிரிண்டட் லான்கள், வாயில்கள்
	-	பாப்லின்கள்
	-	ஸ்கிரீன் பிரிண்ட் புடவைகள்
சூட்டிங்குகள்	-	கேபிரிடின், டஸர்
ஷர்ட்டிங்குகள்	-	ஸ்டிரைப், செக்
	-	டோபி, பைஜாமா

செசவு கலர் புட்டாக்கள்
2 × 2 புல் வாயில்கள் வெரே
மற்றும் புட்டாக்கள்

அரவிந்த்


மில்ஸ் லி., அஹமதாபாத்-2.

Arvind Quality FABRICS

‘SANFORIZED’

உண்டி கொடுத்தோர்

தி. சா. ராஜு



இரவு மணி பதினொன்றிருக்கும்: மணலூர்க் கிராமம் மெள்ள மெள்ள அமைதிநிலையை நெருங்கிக் கொண்டிருந்தது. தொலை தூரத்தில் நெடுஞ்சாலையில் ஊர்ந்துகொண்டு சென்ற பார வண்டிகள் மட்டும் ஒரேசீரான இருசொலியை எழுப்பிக் கொண் டிருந்தன. தன்னுடைய வீட்டின் ஆளோடியில் கயிற்றுக் கட்டிலின்மேல் அமர்ந்திருந்த நாகலிங்கம் ஆழ்ந்த யோசனையில் மூழ்கியிருந்தார். எதிர்த்த செங்கல் மேடையில் ஒரு புகை படிந்த மண்ணெண்ணெய் விளக்கு சிறு வெளிச்சத்தைத் தந்தது.

ஏதோ அரவம் கேட்டு நிமிர்ந்து பார்த்தார். அவருடைய மனைவி பார்வதி கையில் ஒரு சிறு கிண்ணத்துடன் நின்று கொண்டிருந்தாள். அவளுடைய கூந்தல் கலைந்து கிடந்தது. முகத்தில் முதுமையின் கீற்றுக்கள் அளவுக்கு மீறி ஓடின. மூக்கில் இருந்த ஒற்றைக்கல் அந்த மங்கிய ஒளியிலும் பூரித்தது. நெற்றியில் ஒளிர்ந்த பெரிய திலகம் அவளுடைய முதிய முகத்துக்குத் தனிச் சோபையைத் தந்தது.

கிண்ணத்தை அவர் அருகில் வைத்த பார்வதி, ''இருங்கள், இதோ கையைச் சுத்தம் செய்துகொண்டு வருகிறேன்'' என்று கூறிப் பின்புறம் சென்றாள். கிண்ணத்திலிருந்த மைசூர்ப் பாகுத் துண்டமொன்றை எடுத்து விளக்கின் மங்கிய ஒளியில் பார்த்து விட்டுத் திரும்ப அதைக் கிண்ணத்திலேயே போட்டார் அவர். கட்டிலில் மல்லாந்து படுத்துக் கொண்டார். நாகலிங்க ஐயருடைய காலடியில் அமர்ந்து கொண்ட பார்வதி அவருடையபாதங்களை அழுத்திப் பிடித்து விட்டாள்.

''பாகு சரியாகக் காயவில்லை போலிருக்கிறதே?'' நாகலிங்க ஐயர் வினவினார்.

''அவர்களுடைய சம்பந்திக்கு அப்படி இருந்தால்தான் பிடிக்குமாம். அவர்கள் வடநாட்டுப் பட்சணங்களையே தின்று பழக்கப் பட்டவர்கள். அதனால்தான் அவ்வாறு செய்து கொடுத்தேன்.'' பார்வதி கூறினாள். அவர் கால் விரல்களை இழுத்துச் சொடுக்கினாள். பிறகு தொடர்ந்து பேசலுற்றாள்:

''தாம்பாளத்தில் பாகைக் கொட்டிக் கொண்டிருந்த போது அந்தக் குட்டி லட்சுமி ஓடி வந்து 'உங்கள் வீட்டு வாசலில் வண்டி நிற்கிறது' என்றது. நான் கொஞ்சம் கவலைப்பட்டேன். அந்த வீட்டுக்காரப் பாட்டிகூட 'நீ போ பார்வதி, இனி வில்லையை நான் கீறிக் கொள்ளுகிறேன்' என்றாள். எனக்குத் தான் மனம் இடம் கொடுக்கவில்லை.'' இடுப்பில் செருகியிருந்த ஐந்து ரூபாய் நோட்டை எதிர்த் திண்ணை மேல் வைத்தாள் பார்வதி.

''போய்ப் படுத்துக் கொள் பாரு'' என்று நாகலிங்க ஐயர் கூறினார்.

''வந்திருந்தது யார்?''

ஐயர் பழக்கூடையைக் காட்டினார். "உன் பிள்ளைதான்."

எரிந்து கொண்டிருந்த விளக்கின் திரியைச் சற்று நேரம் உற்றுப் பார்த்தாள் பார்வதி. பிறகு 'வசந்தி' என்று குரல் கொடுத்தாள்.

"இதோ வந்தேன்."

இருபது வயது மதிக்கக் கூடிய எழில் பூ ஒன்று எதிர்ப்பட்டது.

"இந்தக் கூடையை எடுத்துப் பலகையின் மேல் வை. இந்த மைசூர்ப்பாகைச் சாப்பிடு. பணத்தைச் சுவாமி உண்டியலில் போடு!"

மணம் நிறைந்த அழகிய மலர் சென்று நகர்ந்தது. பார்வதி நீண்ட பெருமூச்சு விட்டாள். "நீங்கள் வசந்தியைப் பற்றி அவனிடம் ஒன்றும் பேசவில்லையா?"

"காரிய ஜயம் பெற வேண்டிக் கோவிலுக்கு நேர்ந்து கொண்டவன் சிதறுகாய் போட வருவது போல் வந்து விட்டு அவன் ஓடுகிறான். அதிக நேரம் இங்கே நின்றால் உறவு ஒட்டிக் கொண்டு விடுமோ என்று வெட்டிக் கொண்டு விரைகிறான். அவனிடம் என்ன பேசுவது?" ஐயர் சினத்தினால் படபடத்தார்.

"கோபித்துக் கொள்வதில் பயனுண்டோ? உண்டு என்றால் நானும் கோபித்துக் கொள்கிறேன். பெண்ணுக்குடைய நாம்தான் பணிந்து போக வேண்டும். உங்களுடைய தங்கை தம்மிடம்தானே வசந்தியை ஒப்படைத்தாள்?"

"பார்வதி இந்த உயிருக்கு இன்னும் சக்தி இருக்கிறது. இந்த நாவுக்கும் கைகளுக்கும் இன்னும் வலிமை இருக்கின்றன. நான் விரும்பினால் அடுத்த வாரமே நல்லதொரு வரனைத் தேர்ந்தெடுத்துச் சிறப்புடன் வசந்தியின் கல்யாணத்தை முடித்து வைப்பேன். நீதான் சேகரன், சேகரன் என்று மறுகிக் கொண்டிருக்கிறாய்?"

"வசந்தி வயது வந்த பெண். அவளுடைய எண்ணத்துக்கு நாம் மதிப்பு வைக்க வேண்டாமா? சேகரனுக்கு மட்டும் கடமை ஏதும் இல்லையா? தன்னுடைய அத்தையின் பெண் என்ற எண்ணமே அவனுக்குக் கிடையாதா?"

நாகலிங்க ஐயர் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்து கொண்டார். அந்த விளக்கின் மங்கலான ஒளியிலும் அவருடைய முகத்தில் இருந்த பொறுமையின் ரேகைகள் புலப்பட்டன. இரு கைகளையும் அவர் தொடை மேல் வைத்துக் கொண்டு பேசினார்:

"பார்வதி! காஷ்மீர நாட்டிலே அக்ரோட் என்று ஒரு வகை மரமுண்டு. அவை வைத்துப் பயிர் செய்கிறவர்கள் எவரும் தம் ஆயுளிலே அதன் பயனைப் பெற முடியாதாம். அது பலன் தருவதற்கு நூறாண்டுகளுக்கு மேல் ஆகும் என்பது அனுபவத்தில் கண்ட உண்மை. தெரியுமா?

"மாற்றுத்தாயின் மகன் என்றும் பாராமல் என் தம்பியிடம் நான் எல்லை கடந்த பிரியத்துடன் இருந்தேன். அவனுடைய எதிர்பாராத மரணத்துக்குப் பிறகும் அவனுடைய சந்ததி வளமாக இருக்க வேண்டும் என்று நாம் இருவரும் உடல் ஓடாக உழைத்தோம். எத்தகைய பலனையும் எதிர்பார்த்து இதைச் செய்யவில்லை. ஆதியிலிருந்தே, என் தம்பியாகட்டும், இந்தச் சேகரனாகட்டும், நம் உறவையும் பாசத்தையும் மதிக்கவே இல்லை. என்னைத் தன் பெரியப்பா என்று சொல்லிக் கொள்ளவே அவன் வெட்கப்பட்டான். இன்றும் வெட்கப்படுகிறான். நான் வெறும் பரிசாரகன்தானே!" சோர்ந்தாற்போல உணர்ச்சி வசப்பட்டுப் பேசியதால் அவருக்கு மூச்சு வாங்கியது. மறுபடியும் படுத்துக்கொண்டார்.

"இருந்தாலும் அவனுடைய எண்ணம் என்ன என்று ஒரு வார்த்தை கேட்டுவிட்டால் நல்லதில்லையா?" பார்வதி வினவினாள்.

"இந்த நாகலிங்கம் சொல்ல முடியாத அளவு மமதை பிடித்தவன். தனக்கு மமதை உண்டு என்பதையும் உணர்ந்தவன்." அவர் நெஞ்சைத் தடவிக் கொண்டார். "எனக்கு இதைக் கொடு, அதைத் தா என்று மௌனமாகக்கூட இறைவனையும் நான் கேட்டதில்லையே! வேறு யாரையாவது வாய் திறந்து உதவி கேட்பேன் என்று நினைக்கிறாயா? நான் எண்ணியபடி ஒரு செயல் நடக்கவில்லை என்றால் அந்த எண்ணத்தில் திண்மை இல்லை என்று அர்த்தம். என் மனத்திலிருந்து அழுக்கு நீங்கவில்லை என்று அதற்குப் பொருள் கொள்ள வேண்டும்."

பார்வதி பேச்சை மாற்ற எண்ணினாள். "இப்போது சந்திரசேகரன் எங்கே போகிறானாம்...?"

"உமையாள்புரம் கல்யாணத்துக்கு...." அவருடைய விழிகள் பளபளத்தன.

"அரண்மனைக்காரர் வீட்டுக் கல்யாணத்துக்கா?" என்று கேட்டாள் பார்வதி.

"ஆமாம்."

"நீங்கள் அங்கே சமையலுக்கு அச்சாரம் வாங்கிக் கொண்டிருப்பதை அவனுக்குச் சொன்னீர்களா?"

"இல்லை, அவன் கேட்கவும் இல்லை, நான் சொல்லவும் இல்லை. பெண்ணினுடைய தமையன் இவனுடன் படித்தவனாம். அவசியம் கல்யாணத்துக்கு வரவேண்டும் என்று நேரில் வந்து வற்புறுத்தினானாம். அதனால் இரண்டு நாட்கள் முன்னதாகவே போகிறான். அதைத் தவிர வேறு ஏதோ எண்ணமும் அவன் மனத்தில் இருப்பதாகத் தெரிகிறது."

"என்னவோ அது?"

"மாப்பிள்ளையின் மாமா ஒருவர் கல்கத்தாவில் பெரிய பண்டகசாலை வைத்திருக்கிறாராம். அவரும் கல்யாணத்துக்கு வருவதாகத் தெரிகிறது. அவரை நேரில் கண்டு நிறையச் சம்பளமுள்ள ஒரு வேலையைக் கல்கத்தாவிலேயே பெற வேண்டும் என்ற ஆசை வந்திருக்கிறது உன் பிள்ளைக்கு."

அடுத்த சில நிமிஷங்கள் ஆழ்ந்த மௌனத்தில் கழிந்தன. எங்கேயோ மரக்கிளை மேல் பறவை ஒன்று இறகை அடித்துக் கொண்ட ஒலி கேட்டது.

"ஒரே ஒரு சிறிய பிரார்த்தனை." பார்வதியின் நாக்குழறியது.

"என்ன அது?"

"சேகரன் ஏதோ பெரிய நோக்கத்தை வைத்துக் கொண்டு அங்கே போயிருக்கிறான். எதிர்பாராத விதமாக நீங்களும் அங்கேயே இரண்டு நாட்கள் தங்கும்படி நேருகிறது..." அவள் தயங்கினாள்.

"ஏன் தயங்குகிறாய் பார்வதி? நான் அவனுடைய பெரியப்பா என்று வெளிக் காட்டிக் கொள்ள வேண்டாம் என்றுதானே

கூற முன் வந்தாய்? அதைத் தைரியமாகச் சொல்லேன். இந்த விஷயத்தை யாராவது எனக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமா?''

பார்வதி தலையைக் குனிந்து கொண்டாள்.

''சமுதாயத்தில் ஒரு சாபக்கேடு பார்த்தாயா? வயிற்றுக்குச் சோறு படைக்கிற சமையற்காரன். ஆத்மிக உலகுக்கு வழி காட்டும் புரோகிதன். தெரு அழுக்கை நீக்கி மக்கள் ஆரோக்யமாக வாழ வகை செய்யும் தோட்டி. இவர்களுக்கெல்லாம் சமூகத்தில் மதிப்பில்லாமல் போய் விட்டதல்லவா? இந்தச் சமுதாய அமைப்பில் எங்கேயோ கோளாறு இருக்கிறது.''

''கோளாறு தொழிலில்லை. தொழிலுக்கு ஏற்பட்டிருக்கிற ஜாதியத்தில் இருக்கிறது.'' பார்வதி பட்டென்று பதில் சொன்னாள்.

உண்மையில் ஏதோ ஒரு விளிம்பை அவள் இலேசாகத் தொட்டுக் காட்டி விட்டதை அவர் உணர்ந்தார். அவருடைய கண்களை உறக்கம் தழுவியது.

அடுப்புகளிலிருந்து தீச்சுவாலைகள் எழும்பின. முற்றத்தில் சாக்குக் கட்டிய தவலைகள் உருண்டு கிடந்தன. அண்டாவில் 'எலை' காய்ந்து கொண்டிருந்தது. கூடத்திலிருந்து அற்புதமான மணமுடைய உண்டிகள் நாவில் நீர் ஊறச் செய்தன. எங்கும் புகையின் சூழல்.

நாகலிங்கம் ஒரு பலகையின் மேல் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவருடைய இடுப்பில் நீர்க்காவி ஏறிய வேஷ்டி. தோளின் மேல் கிழித் துவாலை. அவருடைய கை விரல்களிலிருந்து குங்குமப் பூ வாசனை வீசிற்று. அசல் காஷ்மீரத்துச் சரக்கு.

ஒரு பெரிய கரண்டியில் சாம்பாரை எடுத்துக் கொண்டு அவரிடம் வந்தான் உதவியாள் பரமேசுவரன். ''இதை இறக்கி விடலாமா என்று சொல்லுங்கள்?'' கரண்டியை அவர் முகத்துக்கருகே தூக்கிப் பிடித்தான். ஒரு கணம் மூச்சை உள்ளுக்கிழுத்த நாகலிங்கம், 'கால் உப்புத் தூக்கல். நாலு தேங்காயைத் துருவி அரைத்துக் கொட்டு. இன்னும் கால்நாழி கொதிக்கட்டும். அப்புறம் இறக்கலாம்!'' என்று பதிலிறுத்தார்.

அவசரமாக உள்ளே நுழைந்த சந்திரசேகரன் அங்கே மணையில் உட்கார்ந்திருந்த ஐயரைக் கண்டு ஒரு கணம் பிரமித்தான். அவனை ஏறிட்டு நோக்கிய நாகலிங்கம் ஒரே கணத்தில் தம் முக பாவத்தை மாற்றிக் கொண்டார். ''என்ன சார் வேணும்?'' என்று பணிவுடன் வினவினார்.

''ஒன்றுமில்லை. சம்பந்திகளுக்கு அனுப்பிய மைசூர் போண்டா தீர்ந்து விட்டது. இன்னும் எட்டுப் பேருக்குக் காணும்படி வேண்டுமாம்.'' தூணைப் பார்த்தபடி பேசினான் அவன்.

''இன்னும் பத்து நிமிஷத்தில் அனுப்பி விடுவதாகச் சொல்லுங்கள் சார்!'' ஐயர் விருட்டென்று எழுந்திருந்து அடுப்பண்டையில் போய்ப் பாயாசத்தை ஒரு தரம் அடியிலிருந்து கிளறி விட்டார். அவருடைய உதவியாளர்கள் ஒருவரையொருவர் அர்த்த முள்ள பார்வை பார்த்துக் கொண்டனர்.

இரவு மணி பதினொன்றரை. கல்யாண வீட்டில் கொஞ்சம் கொஞ்சமாக அமைதி நிலவிக் கொண்டிருந்தது. சமையற்காரர்களுக்கான கடைசிப் பந்தி. அவர்களுக்கு மிஞ்சியது வண்டல் குழம்பும் கரைந்த மோருந்தான். நாகலிங்க ஐயர் பலகையின் மேல் உட்கார்ந்து கொண்டிருந்தார்.

''அண்ணா ஒன்றும் ஆகாரமே பண்ணலை போலிருக்கிறதே?'' லட்சுமணன் வினவினான்.

''எந்தக் கல்யாணத்திலேதான் அண்ணா சாப்பிட்டார்? கடந்த இருபது வருஷங்களாய் நானும் இதை ஒரு வேடிக்கையாகப் பார்த்து வருகிறேன்.'' உதவியாளர் கிருஷ்ணமூர்த்தி கூறினார்.

''அண்ணா!'' என்று அவர்கள் அருமையாக அழைத்த நாகலிங்க ஐயர் மௌனமாகப் புன்னகை புரிந்தார் ''எல்லோரும் படுத்துக் கொள்ளப் போங்கள். மணி ரொம்ப ஆகி விட்டது'' என்று அவர் கூறினார்.

புகையும், தீயும், சுவையும், மணமும் நிறைந்த அடுக்களையில் அவர் கிடந்து அன்று புழுங்கியதற்குப் பலன் கிடைத்தது. அவர் சமைத்த உணவைப் பாராட்டாதவர்களே இல்லை. எல்லோரும் தேவைக்கு ஒரு பிடி அதிகமாகவே உண்டு சென்றனர். மறுநாள் கல்யாண ஊர்வலம் புறப்பட்ட பிறகு அவரை யாரோ அழைத்தார்கள்.

வெளிக்கூடத்தில் பெரிய சோபாவில் அன்றைய முக்கிய விருந்தாளி உட்கார்ந்திருந்தார். அவர் முன்பு ஒரு சிறிய மேஜையின் மேல் கண்ணாடி தம்ளரில் அன்று தயார் செய்யப்பட்ட மிளகு ரசம் இருந்தது. பொன்னிறமான அந்தத் திரவத்தினிடையில் பாதித் தக்காளிப் பழம், விளிம்பில் ஒரு ரோஜா இதழ். நாகலிங்க ஐயர் பணிவுடன் அங்கு சென்று நின்றார்.

பெண்ணின் தகப்பனார் முக்கிய விருந்தாளியை ஐயருக்கு அறிமுகப்படுத்தத் தொடங்கினார். ''இவர்கள் கல்கத்தாவிலிருந்து வந்திருக்கிறார்கள். மாப்பிள்ளையின் சொந்த மாமா. நீங்கள் இன்று தயார் செய்த ரசத்தை அவர் எவ்வளவு பாராட்டினார் என்று சொல்லி முடியாது!'' அவர் தொடர்ந்து பேசும் முன்பு அந்த முக்கிய விருந்தினர் எழுந்திருந்து ஐயரைக் கூர்ந்து பார்த்தார். ''நீங்கள் — நீங்கள் நாகலிங்க ஐயர் இல்லை?'' என்று கேட்டார்.

''ஆமாம், என் பெயர் அதுதான்.''

கல்கத்தா ராமாமிருதம் அடுத்தகணம் அவர் காலடியில் விழுந்து வணங்கினார்: ''நீங்கள் என் தெய்வம். உங்களை நிற்க வைத்துப் பேசி விட்டேனே.'' அவரை அருகில் அமரச் செய்தார். அவருடைய கையைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக் கொண்டார்.

''நான் வாழ்க்கையில் ரொம்பக் கஷ்டப் பட்டவன் சார்.'' அந்தப் பெரிய மனிதர் கூறுவதை எல்லோரும் செவி கொடுத்துக் கேட்டனர். ''நான் செய்த சிறிய தவறு ஒன்றுக்காக என் சிற்றப்பா என்னைக் கடுமையாக அடித்துத் துன்புறுத்தினார். அந்தக் கோபத்தில் வீட்டை விட்டே வெளியேறி விட்டேன். நாலைந்து நாட்கள் பட்டினியுடன் அலைந்திருப்பேன். அதற்குப் பிறகு, 'ஏன், பெரியவரே, அது எந்த ஊர்? பேரூர் தானே?'' என்று நாகலிங்கஐயரைக் கேட்டார் ராமாமிருதம்.

''அங்கே இதைப் போல் ஒரு கல்யாணம். நல்ல பசியுடன் ஓர் இலையில் உட்காரப் போனேன். விருட்டென்று யாரோ கையைப் பிடித்து இழுத்து ஒரு மூலையில்

தள்ளினார்கள். 'சிறு பயல்களுக்கெல்லாம் கடைசிப் பந்தி. போங்கடா வெளியில்' என்று அவர் கூறினார். என் கண்களில் நீர் முட்டியது. அவமானம் உடம்பைக் குறுக்கிற்று. பேசாமல் திண்ணையில் போய் உட்கார்ந்து கொண்டேன். கையில் கோகர்ணத்துடன் அந்தப் பக்கம் வந்த ஐயர் நான் வெளியே தள்ளப்பட்டிருப்பதைக் கவனித்திருக்கிறார். என்னைக் கையோடு சமையல் கூடத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கே என்னை உட்கார வைத்து அரை இலை ஒன்றைப் போடச் செய்து சோறு வட்டித்து ரசத்தை ஊற்றினார். இதே வாசனையுள்ள ரசம். நான் எப்படிச் சாப்பிட்டேன் என்று சொல்ல முடியாது. இன்றைய வரையில் அது ஒன்றுதான் நான் சாப்பிட்ட நல்ல உணவு!

''யாரோ சம்பந்தி வீட்டுக்காரர் ஒருவர் வந்து 'யார் இது?' என்று சினத்துடன் கேட்டார்கள். 'என் பையன்' என்று அவரிடமிருந்து பதில் வந்தது. ராமாமிருதம் எச்சிலை விழுங்கினார். அவருடைய கண்கள் கலங்கி நின்றன. முகம் பளபளத்தது.

''அதற்குப் பிறகு உண்மையிலேயே அவருடைய மகனாக மூன்று வருஷங்கள் வாழ்ந்தேன். அவர் எனக்குச் சமையல் கலையில் கற்றுக் கொடுக்காத நுணுக்கமே இல்லை. இது ஓர் உயர்ந்த நுண்கலை. இன்று நாகம் பிராண்டு ரசப் பொடியும் கறிமசாலையும் ரோம் நகரத்துக்கும் நியூயார்க்குக்கும் சென்று புகழ் பெற்று விட்டன. அதற்குக் காரணம் இந்தப் பெரியவர். இவரைப் போன்ற தெய்வங்கள் மனித உருவில் இன்னும் நடமாடுவதனால்தான் நாம் எல்லோரும் நல் வாழ்க்கை வாழ்கிறோம்.

''அதற்குப் பிறகு எத்தனையோ முறை இவரை என்னுடன் வந்து இருக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கிறேன். கடிதம் எழுதினேன். நண்பர்கள் மூலம் சொல்லி அனுப்பினேன். அவர் இணங்கவில்லை. கடைசியாகக் கடந்த பத்து ஆண்டுகளாக எனக்கு இவரைப் பற்றித் தகவலே இல்லை.

''இன்று இந்த ரசத்தைச் சாப்பிட்டதும் நான் இதில் அவருடைய கை மணத்தைக் கண்டேன். இவரைத் தவிர இந்தப் பண்டத்துக்கு இத்தகைய தனி பாக ருசியை யாரும் கொண்டு வர முடியாது. இவ்வளவுக்கும் அவர் இதை நாவில் விட்டு ருசி பார்த்திருப்பார் என்று கூற முடியாது. அதிலிருந்து புறப்படும் ஆவியிலிருந்தே ரசத்தின் தேவையைக் கூறி விடுவார்.....'' என்று சொல்லிக்கொண்டே போனார்.

நாகலிங்க ஐயர் சோபாவில் தலை குனிந்தவாறு உட்கார்ந்து இதைக் கேட்டுக் கொண்டிருந்தார். நிமிர்ந்து பார்த்ததும் சந்திரசேகரன் அங்கே கூனிக் குறுகி நிற்பதைக் கவனித்தார். அவருடைய வலது கை அவனை அருகில் வரும்படி சைகை செய்தது.

சந்திரசேகரன் அசைய முடியாமல் பிரமை பிடித்த நிலையில் ஏன் நின்று கொண்டிருக்கிறான் என்று அங்கு கூடியிருந்தவர்களில் ஒருவருக்காவது தெரியவில்லை.

யுக்தி பலித்ததா?




அந்த நாட்டிலே ஒரு பெரிய சிறைச்சாலை. வருடந்தோறும் விளையாட்டுப் போட்டி வைபவம் ஒன்று கைதிகளுக்காக வைப்பது வழக்கம். ஓட்டப்பந்தயம், கண் கட்டி ரேஸ், தூரம் தாண்டுவது போன்ற விளையாட்டுக்களும் உண்டு. அத்துடன் கனமான இரும்புகளைத் தூக்குவது, கனமான இரும்புக் குண்டுகளைக் கைதிகளின் கையில் கொடுத்து எறியச் சொல்வது — இவையும் நடப்பது வழக்கம். எந்தக் கைதி அந்த இரும்புக் குண்டை வெகுதூரம் எறிகிறானோ அவனுக்குப் பரிசு வழங்குவார்கள். இந்தக் கைதிகள் எப்போதும் முரட்டுத்தனமான வேலைகளைச் செய்வதால் அவர்கள் தேகக் கட்டுடனும், பலத்துடனும் இருந்தார்கள்! இந்த இரும்புக் குண்டு எறிவதில் இருபதாம் எண் கைதி பரிசு பெற்றதை எல்லோரும் மிகவும் பாராட்டினார்கள்

போட்டி முடிந்தவுடன் அவர்கள் தப்பித்துக் கொள்ளாமல் இருக்க அவர்கள் காலில் நீண்ட இரும்புச் சங்கிலியைக் கட்டி அதன் நுனியில் ஒரு பெரிய இரும்புக் குண்டைக் கட்டி விடுவது அந்நாட்டு வழக்கம். அதனால் கைதிகள் ஓடித் தப்பித்துக்கொள்ள முடியாது.



ஒரு நாள் பரிசு வாங்கின இருபதாம் நம்பர் கைதி தன் பலப் பரிசோதனையில் ஈடுபட்டான். தன் காலில் கட்டியிருக்கும் இரும்புக் குண்டைக் கையில் எடுத்துப் பெரிய மதில் சுவருக்குமேல் வீசி எறிந்தான். குண்டு அதிவேகமாக மதில் மேல் சென்றது. அதனுடன் அவனும் இணைக்கப்பட்டிருந்ததால் அவனையும் தூக்கிச் சென்று மதிலைத் தாண்டிச் சிறைக்கு வெளியே அவனைக் கடத்தியது. விழுந்ததும் பட்ட அடியைப் பொறுத்துக் கொண்டு அவசரமாக எழுந்து அந்த இரும்புக் குண்டைக் கையில் தூக்கியபடி ஓட யத்தனிக்கும்போதுதான், தான் வந்து விழுந்த இடமும் இன்னொரு சிறைச்சாலை என்பது அவனுக்குத் தெரிந்தது. அவன் அப்படியே அசந்து போய் விட்டான்! அவன் யுக்தி பலிக்கவில்லை! என்ன செய்வான், பாவம்!




உங்கள்
சட்டைகளுக்கு
டினேபால்
பளபளப்பு
அளியுங்கள்
அவைகளைக் கண்கூசும் மினுமினுப்புள்ள
வெண்மை யாக்குங்கள்!


பண்டிட்
டி.கோபாலாச்சார்லுவின்
அருணா
ஸ்திரீகள் ஆரோக்ய
சௌபாக்யத்திற்கு
ஆயுர்வேதாஸ்ரமம்
பிரைவேட் லிட்.
சென்னை - 17


மீண்டும் கிடைக்கிறது...
கால்கேட்
மென்தாலேடெட்
ஷேவிங் க்ரீம்
குளுமையான...புத்துணர்ச்சிதரும் குளுமையான. பிரத்தியேகமாய் தீவிரமாக இயங்கும் லேதர் விரைவில் சுத்தமான அதிக சுகமுள்ள க்ஷவரத்தை அளிக்கிறது.
கால்கேட் மென்தால் சேர்க்கப்பட்டுள்ளது. அதனால்தான் அதனுடைய குளுமையான க்ரீம் போன்ற லேதர், சுத்தமான சுகமுள்ள க்ஷவரத்தைப் பெற சருமத்தை பதமாயும் தாடியை மிருதுவாயும் ஆக்குகிறது. அந்த உற்சாகமளிக்கும் குளுமையான புத்துணர்ச்சியை அனுபவிக்க தினமும் காலையில் கால்கேட் மென்தாலேடெட்டுடன் க்ஷவரம் செய்து கொள்ளுங்கள்.
என்ன பரபரப்பான க்ஷவரம்!
COLGATE
MENTHOLATED
COLGATE
MENTHOLATED
COLGATE
SHAVE STICK
மிகச் சிக்கனமானது—
கால்கேட் ஷேவிங் ஸ்டிக் மற்றும் கால்கேட் கப் சோப் க்ஷவரத்தில் சிக்கனத்திற்கு பிரபலமானவை.

வட்டமேஜை

தீபாவளி மலர்

கல்கி தீபாவளி மலரில் ஸ்ரீ ஆசாரியாரின் அருளுரைத் திருவடிவம் எங்களைப் பரவசமாக்கியது. ஸ்ரீ ராஜாஜி, பிரும்மஸ்ரீ தீக்ஷிதர் போன்ற பெரியோர்களின் அறிவுரைகளும் ஸ்ரீ ராதாகிருஷ்ணன், ஸ்ரீ நரசிம்மன் போன்ற மேதைகளின் சிறந்த கட்டுரைகளும், சிந்தைக்குப் பெரும் விருந்தாயுள்ளன. பக்தி மணம் கமழக் கமழத் தங்கள் பத்திரிகை நீடூழி காலம் மக்களிடையே தருமத் தொண்டு புரிந்து கொண்டிருக்க வேண்டுமென இறைவனை வேண்டுகிறேன்.

அம்பத்தூர்
1-11-62
தி. சா. பாலகிருஷ்ண சாஸ்திரி

கல்கி தீபாவளி மலர் சிறப்பாக அமைந்திருக்கிறது. 'சொல் ஒன்று வேண்டும்'— அழகான நெடுங்கதை. 'மணியத்'தின் சித்திரங்கள் அற்புதமாக இருக்கின்றன. குறிப்பாக, புகார்த்துறை ஓவியம்; அது மலருக்கும் வெளியே பரந்து நீண்டிருப்பதே அதன் சிறப்பு விரிந்து நிற்பதற்குச் சாட்சி.

ஸ்ரீரங்கம்
1-11-62
ஏ. எஸ். ராகவன்

கல்கி தீபாவளி மலரைக் காணக் கனவுலகில் சஞ்சரித்துக் காத்திருந்தேன். கனவு பலித்ததம்மா. கங்கா ஸ்நானம், புத்தாடை, இனிய உணவு. தீப ஒளி இவைகளுடன் ஞான ஒளியும் கண்டேன். பக்தி ரஸமும் உண்டேன். ஓவியக் கலையை நுகர்ந்தேன். மலரின் நறுமணத்தில் புளகாங்கிதம் அடைந்தேன். மற்றொரு தீபாவளி தினத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

சாத்தூர்
31-10-62
ராஜஹம்ஸினி

பயன் தராத கட்டுப்பாடு


அரசியலாரின் கட்டுப்பாட்டுக் கொள்கையால் ஏற்படும் துன்பங்களுக்கும் தொல்லைகளுக்கும் அளவேயில்லை. உதாரணமாக, மில்காரர்கள் தாங்களாகவே ஏற்றுக்கொண்ட, மில் நூல்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டது. இவ்வாறு விலை கட்டுப்பாட்டுப்படியே நடப்பதால் நூல்களின் தரம் குறைய ஏதுவாகிறது. கட்டுப்பாடு இல்லாத போது ஒவ்வொரு மில்காரரும் போட்டி போட்டு நல்ல திடமான தரமான நூல் தயார் செய்து விற்று வந்துள்ளார்கள். இப்போது இந்நிலை மாறி விட்டது.

விலைக் கட்டுப்பாடு எந்த அடிப்படையில் ஏற்படுத்தினர் என்ற விவரத்தைச் சர்க்கார் தெரிவிக்குமா? என் கருத்து இந்த அடிப்படையே சரியில்லை என்பதாகும். சென்ற இரண்டு ஆண்டுகளுக்கு முன் 10 ராத்தல் எடையுள்ள 20-ம் நம்பர் மில் நூலின் மில் வாசல் விலை ரூ. 20.75 என்று நிர்ணயித்திருக்கிறார்கள். அத்துடன் ஒரு ரூபாய்க்கு ஒரு நயா பைசா வீதம் வரியும் வாடகையும், லாபம் ஒரு சதமும் சேர்த்து நெசவாளருக்கு ரூ. 21-37 க்கு விற்பதாக மில் முதலாளிகள் தமிழ்நாடு சர்க்காருடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள்.

ஆனால் அரசினர் விலை கட்டுப்பாடு நிர்ணயித்தார்களே தவிர இன்ன வர்த்தகருக்கு இன்ன மில் இவ்வளவு பேல் தர வேண்டும் என்பதாக விநியோகம் குறித்துச் சரியான ஏற்பாடு செய்யவில்லை. இதனால் குறிப்பிட்ட ரக நூல்கள் கிடைக்காமல் அவற்றின் தேவையை அனுசரித்து மார்க்கெட்டை யொட்டி அவற்றின் விலைகள் இன்று கூடியுள்ளன. இந்த விலைகள், சர்க்காருக்கு நன்கு தெரியும் என்று நம்புகிறேன். கூடுதலான விலைக்கு விற்கும் நிலை ஏற்பட்டிருக்கும் போது விலைக் கட்டுப்பாடு செய்ததால் என்ன பயன் என்பதுதான் புரியவில்லை. மில் வாசல் விலை மட்டும் ஒரே மாதிரியுள்ளது. ஆனால் அதனை விற்கும்போது விலை கூடி விடுகிறது.

விலைக் கட்டுப்பாடு இல்லாத காலத்தில் ஒரே எடையும் நம்பரும் உள்ள இரு வேறு மில்கள் தயாரித்த நூல்களின் விலையில் வித்தியாசம் இருந்தது. உதாரணமாக 20-ம் நம்பர் நூல் ஒரு கட்டு விலை ரூ. 22க்கு ஒரு மில்லில் கிடைக்கும்; அதே எடையும் நம்பரும் உள்ள வேறு மில் நூல் ரூ. 24க்குக் கூட விற்கும். காரணம் ஒரு மில்லுக்கும் இன்னொரு மில்லுக்கும் தர வித்தியாசம் உண்டு. அது நெசவாளருக்குத்தான் தெரியும். அப்படியிருக்கும்போது எல்லா மில் நூலுக்கும் ஒரே விலை நிர்ணயிப்பது எப்படிப் பொருந்தும்? எவ்வகையிலும் நூல் ஜவுளிகளுக்கு விலைக் கட்டுப்பாடு செய்வது பொருந்தாது. பெயர் அளவுக்கு மட்டும் நடக்கும் இந்தக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை உடனே ரத்து செய்ய அரசு ஆவன செய்யவேண்டும்.

திருச்செங்கோடு
17-10-62
கே. எஸ். பழனியப்பன்



"ஐயோவ்! ஏனய்யா வாயில்லா ஜீவனைப் போட்டு இப்படி அடிக்கறே!"

"அது நகராமாட்டேங்கிறதுங்க! அடிமேல் அடி வைச்சாத்தான் அம்மியும் நகரும்னு பெரியவங்க சொல்லியிருக்காங்க..."

"சரி! அதுக்குக் கழுதையை ஏன் அடிக்கறே! அம்மியை அதனின்றும் அவிழ்த்துக் கீழே வைத்து அதை நன்று அடிச்சுப் பாரேன்!"

அசடு வழிந்தது

மூன்றாம் நம்பர் பஸ் டெர்மினலை அடைந்த பொழுது என்னவோ மூன்றே மூன்று பிரயாணிகள்தான் இருந்தார்கள். டிரைவரையும் கண்டக்டரையும் சேர்த்தால் ஐந்து பேர்கள். நிலையத்தை அடைந்து பஸ் நிற்பதற்குள்ளாகவே, கண்டக்டர் இறங்கி 'டைம் கீப்பர்' காபினை நோக்கி நடந்தார்.

மூவரும் உட்கார்ந்திருந்த ஸீட்டுகளுக்கு எதிரில் அழகாகக் கட்டப்பட்டிருந்த பாக்கெட் ஒன்று கேட்பாரற்றுக் கிடந்தது. அதைப் பார்த்ததும் அவர்களுக்கு ஒரு நைப்பாசை. மூவருமே பாய்ந்து அதை எடுத்துக் கொள்ள முந்தினர்.

மூவரும் ஒருவரையொருவர் முறைத்துப் பார்த்துக் கொண்டனர். ஒருவர் துணிச்சலாக, ''என்னுடையது ஐயா!'' என்றார்.

அடுத்தவருக்கு, 'அவர் அந்தப் பொட்டணத்தை அடித்துக் கொண்டு போய் விடப் போகிறாரே! அதில் என்ன விலைமதிப்பற்ற பொருள் இருக்குமோ?' என்ற பதற்றம் உண்டாயிற்று. உடனே தம் பையைத் தேடுபவர் போலத் தேடி விட்டு, ''இல்லை, ஐயா! என்னுடையது ஐயா! ஓடும் வேகத்தில் பஸ் குலுக்கிப் போடவே, என் பையிலிருந்து நழுவியிருக்கிறது. நான் கவனிக்கவில்லை!''என்றார்.

மூன்றாமவரும், தாம் ஏமாந்து போக விரும்பவில்லை. ''என்ன ஐயா இது! பகற் கொள்ளையாயிருக்கிறது! என் பொட்டணம் ஐயா! எழுந்திருக்கும் பொழுது எடுத்துக் கொள்ளலாம் என்று நான்தான் கைவாட்டமாக முதல் ஸீட்டில் வைத்துவிட்டுப் பொட்டணத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன்! நீங்கள் கவனிக்கவில்லையா?'' என்றார்.

யார் சொல்லை நம்புவது? யார் சொல்லை நம்பாமல் இருப்பது? மூவரும் பார்ப்பதற்கு நவநாகரிகமானவர்களாகக் காட்சி அளித்தனர். ஆனால் இந்தக் காலத்தில் யாரையும் தான் நம்ப முடியவில்லையே! ''உம்முடையது என்கிறீரே! இந்தப் பொட்டணத்துக்குள் நீங்கள் என்ன வைத்திருந்தீர்கள்?'' என்று கேட்டார் ஒருவர்.

''வேறென்ன வைத்திருப்பேன்! குழந்தைகளுக்கு....'' என்று இழுத்தார் முதல் மனிதர்.

''ஆமாம். இதுவோ தீபாவளி சமயம். ஆபீஸ் விட்டு வீட்டுக்குப் போகிறோம். டவுனிலிருந்து வரும்பொழுது வேறென்ன கொண்டு வருவோம்?'' என்றார் இரண்டாமவர்.

இதே சமயம் கண்டக்டர் அங்கு திரும்பி வந்தார். மூவரும் பொட்டணத்தை வைத்துக் கொண்டு தகராறு செய்து கொண்டிருப்பதைக் காண அவருக்கு வியப்பாயிருந்தது. 'இந்தப் பொட்டணத்தை வைத்துக் கொண்டு இப்படி மூவரும் அடித்துக் கொள்வானேன்?' என்று எண்ணியவர், ''ஏன் ஐயா இப்படிச் சண்டை போட்டுக் கொள்கிறீர்கள்? யார் பொருளோ, அதைச் சொல்லி விட்டு எடுத்துப் போங்களேன்!'' என்றார்.

அவருக்கு அவர்களுடைய சண்டையை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற ஆசையிருந்த போதிலும் அதற்கு நேரமில்லை. அடுத்த 'டிரிப்'புக்கு அவர் புறப்பட்டாக வேண்டும். எனவேதான் அப்படி அவசரப்படுத்தினார்.

''இதென்ன கண்டக்டர்! நீர் பேசுவதைப் பார்த்தால் எங்களைச் சந்தேகிக்கிறீர் போல் இருக்கிறதே!'' என்றார் மூன்றாமவர்.

''சே! அப்படியெல்லாம் சொல்வேனா? நீங்கள் மூவரும் டவுனிலிருந்து வருகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். டிக்கட் கிழித்துக் கொடுத்தவன் நான்தானே? தீபாவளிக்காக ஏராளமான பொருள்கள் பை நிறைய வாங்கி வருகிறீர்கள் என்பதையும் பார்த்துக் கொண்டுதான் வருகிறேன். வண்டி குலுங்கும் குலுக்கலில், ஓரிரண்டு பாக்கெட்டுகள் தவறி வெளியேறியிருக்கலாம் என்பதையும் உணருகிறேன்!'' என்றார் கண்டக்டர்.

''என்ன ஐயா, ஏதேதோ சொல்லிக் கொண்டே போகிறீர்? விஷயத்துக்கு வாரும், ஐயா!'' என்று அவசரப்படுத்தினார் முதலாமவர்.

''அதுதான் சொன்னேனே! உங்கள் மூவருடைய பொருள்களில் இது யாருடையதாக வேண்டுமானாலும் இருக்கலாம். உங்களுடையதுதான் என்பதை நிரூபிக்காத வரையில் நான் இந்தப் பொட்டணத்தைத் தர முடியாது!''என்றார் கண்டக்டர் கண்டிப்பாக.

''பட்டாசுகள்!'' என்றார் முதலாமவர்.

''பட்சணங்கள்!'' என்றார் இரண்டாமவர்.

மூன்றாமவர், ''இல்லை, புடைவையும் ரவிக்கையும்!'' என்றார்.


''சரி, பிரித்துப் பார்த்து விடுவோம்! உங்களில் யார் என்ன பொருள் சொன்னீர்களோ, அந்தப் பொருளாக இருந்தால், நீங்கள் எடுத்துப் போகலாம்!'' என்றார் கண்டக்டர்.

எல்லோரும் ஆவலுடன் வைத்த கண் வாங்காமல் பார்க்கக் கண்டக்டர் பொட்டணத்தைப் பிரித்தார். பொட்டணத்தைப் பிரித்ததும், அவர்கள் முகத்தில் அப்படி அசடு வழிவானேன்? அவர்களைப்போல், காது அறுந்த செருப்பை அந்தப் பொட்டணத்தினுள் கண்டிருந்தால், ஏமாற்றத்தில் யாருக்குத் தான் அசடு வழியாமல் இருக்கும்!



ஆனால் ஒரே ஒரு நபருக்கு மட்டும் பரம திருப்தி. அந்த ஒரு நபர் யார், தெரியுமா? கண்டக்டர்தான். அடைமழையில் நனைந்து காது அறுந்த பழைய செருப்பைப் போட்டுக் கொள்ள முடியாமல் போகவே, அதைப் பொட்டணம் கட்டி வைத்திருந்தார் அவர். அவ்வளவு அழகாக! அதுதான் அம்மூன்று பேர்களுடைய கவனத்தையும் கவர்ந்து, அசடு வழிய வைத்து விட்டது!

—அக்ஷயம்


CEAT
உயிரினும் உயரியது!

JWT-AD. 3771


ஆராய்ச்சியால் வளம்பெற்ற தொழில்



"வேறெந்தத் தொழிலையும் விட சாயத் தொழில் தான் ஆராய்ச்சியினால் அதிக வளம் பெற்று வளர்ந்த தொழில்" என்று யாரோ சொல்லியிருப்பது எவ்வளவு உண்மை! சாயங்களின் உற்பத்தி, பல்வேறு பொருள்களைக் கொண்டு பல சிக்கலான முறைகளைப் பின்பற்றிச் செய்து முடிக்கவேண்டிய மிகத் தொன்மையான தொழில். இதில் கவனிக்கவேண்டியது என்னவென்றால் இந்தத் தொழில் வியக்கத்தக்க வகையில் உத்வேகத்துடன் முன்னேறி வருகிறது...மக்களின் பலதிறப்பட்ட ரசனைக்கும் தேவைக்கும் ஏற்றபடி இத்தொழிலும் மாறுதலடைந்துகொண்டே வருகிறது. இதனுடைய வளர்ச்சி நாட்டில் ஆர்கானிக் கெமிஸ்ட்ரியில், முக்கியமாக சாயங்கள் சம்பந்தப்பட்ட ரசாயனத்தில், ஆராய்ச்சி முன்னேறுவதைப் பொறுத்திருக்கிறது. சாய உலகில் நாளுக்கு நாள் ஏற்படும் முன்னேற்றங்களுக்குப் பின்தங்காமல் ஈடு கொடுக்கும் பொருட்டு அமர் டை ஸ்தாபனம் தன் ஆராய்ச்சி ஏற்பாட்டைப் பரந்த, உறுதியான அடிப்படையில் அமைத்துள்ளது. சாயப் பொருள்களின் உற்பத்தியில் உலகத்து முக்கிய நாடுகளுக்கு ஒப்பான ஸ்தானத்தை நம் நாடும் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு தான் அமர் டை ஸ்தாபனத்தின் பரந்த ஆராய்ச்சித் திட்டங்கள் விரிவான முறையில் வகுக்கப்பட்டுள்ளன.

அமர் டை-கெம் லிமிடெட்

ரங் உத்யான், சீதளாதேவி டெம்பிள் ரோட், மாஹிம், பம்பாய்-16



"இந்தியாவைச் சுற்றி மூன்று பக்கங்களிலும் தண்ணீர் இருக்கிறது, பார்த்தாயா?"

"அது இப்ப பெய்த மழையினால் இருக்கும்; நான் துடைத்து விடட்டுமா சார்?"

"பங்கஜாவின் குடும்பம் உனக்குக் கிட்டின உறவா?"
"இல்லே! ரொம்ப எட்டின உறவுதான்!"
"வெகு நாளைக்கு முன் அவர்கள் கிட்டின உறவு என்று சொன்னியே!"
"இப்ப அவர்களுக்கு ஏராளமா பணம் வந்து விட்டதே!"







"என்னய்யா! பழைய காலத்துக் கோட்டைப்போட்டுக் கொண்டு வந்திருக்கிறீர்? எப்ப தைத்தீர்கள் அதை?"
"நீங்க பழைய காலத்திலே ஒரு தடவை சம்பள உயர்வு கொடுத்தீங்களே, அப்ப தைத்ததுங்க!"

"ஏங்க, இந்த வயலைக் கடந்து குறுக்கே ஓடினால் ஐந்து மணி வண்டியைப் பிடிக்க முடியுமா?"

"ஓ! பேஷாய் பிடிக்க முடியும். இன்னும் அதோ நிற்கும் எருது மட்டும் உங்களைத் துரத்த நேரிட்டால், நாலே முக்கால் மணி வண்டியையே பிடித்து விடலாம்!"



சாமா



"டாக்டர் சார்! ஏதேது இந்த மல்யுத்தக்காரருக்கு இன்று ஆப்பரேஷன் பண்ண முடியாது போல் இருக்கே!"
"ஏன்?"
"அவரைப் படுக்க வைத்து மயக்க மருந்து கொடுப்பதற்காக ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ணும் போது பத்து என்றவுடனே குதித்து எழுந்து குஸ்திக்கு நிற்கிறார்!"

களிச்சுவை

"பழத்தை யெல்லாம் சாப்பி டுங்கள். ருசியாயில்லே? அனுபவித்துச் சாப்பிடணும், என்ன?"

துர்க்காவின் கண்களிலிருந்த ஒளியிலிருந்து அவள் கண்கள் முன் இருந்த பொருளின் ஒளியைத் தெரிந்து கொள்ளலாம். நரைத்திரைக் கலைக் கையால் அள்ளித் தெளித்தது போல் இளம் முகங்கள் பளபளத்தன. ஒவ்வொருவர் வாயிலும் ஒரு சாத்துக்குடிப்பழம். அதைப் புசிக்கும் செயலில் அவர்களது திருப்தி நிறைவுற்று விடும். ஆனால் துர்க்காவுக்கு அவ்வளவு எளிதில் திருப்தி கிடை யாது. பழங்களை வாரி வாரிக் கொடுத்ததில் துடிப்பின் நிழல்கள் கவிந்தன. ஏக்கம் பொங்கியதில் திருப்தி சிதைந்தது. திருப்தியின் சிதைவில் ஏக்கம் வளர்ந்தது. தன்னைத்தான் புசித்துக் கொண்டு புஷ்டியாய் வளரும் ஏக்கம். அதன் முழுமையில் வாழ்வின் வெறு மைக்கு ஏதோ குறிக்கோள் கிடைத் தது போலிருந்தது.

"தாங்க் யூ மாமி!"

"பழம் ஜோரா யிருந் தது...."

"போயிட்டு வரோம்."

அடுத்த நிமிஷம் இடம் காலி. குழந்தைகளின் இருப் பிலும் நெஞ்ச விரிப்புக்க ளிடையே பரவிய மென்மையும் அவள் இதயத்தின் உரம் பெற்ற இறுக்கமும்தான் தங்கியிருந்தன.

கலா தோழியை மௌனமாய்ப் பார்த்த வாறு உட்கார்ந்திருந்தாள்.

பட்டுப் புடவையின் முரமுரப்பில் இப் போது ஆயாசம் முனகியது. தலைப் புஷ்பம் பரிகாசமாய் அழுத்தியது. விழிகளின் இமை திறக்காத கனவுச் சுமையோடு துர்க்கா பெரு மூச்சு விட்டபடி தோழியின் அருகில் வந்து அமர்ந்தாள்.

கலா அவளை இரக்கத்துடன் பார்த்தாள். ஏதும் பேசவில்லை.

"காலை முதல் ஒரே வேலை. அலுப்பாயிருக் கிறது" என்றாள் துர்க்கா.

"வேலையால் தான் அலுப்பா?"

"இன்றோடு கொலு முடிந்தது. நல்ல வேளை. நாளையிலிருந்து இப்படி வீட்டிலே கூட்டம் தெரியாது" என்று துர்க்கா தோழி யின் கேள்விக்குப் பதிலளிக்காமலே பேசினாள்.

"ஏதோ நான் பம்பாயிலிருந்து வந்த வேளை நவராத்திரி சமயமாக இருந்தது. இல்லையென்றால் உன் கையால் பட்சண வகை யெல்லாம் சாப்பிடும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்குமா?"

"எவ்வளவு நாளைக்கப்புறம் நீ நம் பக்கம் வந்திருக்காய் கலா! பம்பாயில் உன் வேலை என்ன? அத்தனை சுவாரஸ்யமானதா?"

"சுவாரஸ்யம் வேணுமென்றால் எதிலும் கிடைக்கும். இல்லையா?"

"என் மாதிரி வாழ்க்கையா யிருந்தால் கூடவா?"


"ஆமாம்" என்றாள் கலா அழுத்தமாக.

"உனக்குத் தெரியாது."

துர்க்கா தன் தலையிலிருந்த பூவை அவிழ்த்துச் சோபாவின் மேல் எறிந்தாள். அவிழ்த்த வேகத் தில் சிதறிய பூத்தாரகைகளால் நிறைந்த கரு வானத் துண்டம் போல் அவள் தலைப் பின்னல் நெளிந்து நீண்டு கறுப்பில் பள பளத்தது.

"நீ எப்போது தலைமயிரைத் தூக்கிக் கட்ட ஆரம்பிக்கப் போகி றாய் துர்க்கா?"

"ஏன், உன்னைப் போலத்தான் எல்லாருமே இருக்க வேணுமா என்ன?"



இழைய வாரிக் கூந்தலைப் பின்னந் தலையில் தாழ்வாக எளிமையாய்ப் பிச்சோடா கட்டி யிருந்த சிநேகிதியைப் பார்த்துக் கொண்டே கேட்டாள் துர்க்கா.

''ஒரளவு வயதுக்கப்புறம் மயிரைத் தூக்கிக் கட்டுவதுதான் நன்றாயிருக்கிறது. நம் பட்ட ணத்தில்தான் இந்தப் பழைய கால வழக்கம். முப்பத்தைந்து வயசானப்புறமும் பின்னித் தொங்க விடுவது.''

அந்த வார்த்தைகளில் முட்டி அடிபட்டுக் கொண்டது போல் துர்க்காவின் இதயத்தில் நோவு கண்டது.

'முப்பத்தைந்து. ஆமாம், அவளும்தான் அந்த வயதைத் தாண்டி விட்டாள். ஆனால்... ஆனாலும்....'

''பழம் ஜோரா யிருக்குது.''


அந்த முகங்களோ பழங்கள் தாம். கால விருட்சத்தின் இளங் கிளைகளில் மலரின் பரிமளத் தோடு செம்மை கனிந்து சுவை ததும்பி நிற்கும் எழிற் கனிகள். உள்ளத்தின் பசிக்கு ஏற்றவை. இருப் பினும் என்ன?

வேதனையில் அலைந்த அவள் பார்வை நினைவுக் களங்களிடைத் தேடித் தேடித் தத்தி ஓடியது. பக்கத்து வீட்டில் விடியற்காலையில் அழுகை வடிவில் இன்னிசை வார்க் கும் செல்வச் சிறு குரல். தெருவில் காலையும் மாலையும் பள்ளி நேரத்தில் களைந்தும் விரைந்தும் சிரித்தும் ஆடியும் பகல் வானத்து வண்ணத்தாரகைகள் எனக் கொத் துக் கொத்தாய்ச் செல்லும் பிஞ்சு வடிவங் கள். வீட்டுக்கு வரும் விருந்தாளிகளோடு அவர்களின் கைப்பிடியில் துவண்டாடும் செண்டுகளாகவோ துணியில் மறைப்பி லிருந்து பம்மலைகளோடு எட்டிப் பார்க்கும் வெட்கப் பதுமைகளாகவோ மெல்லடி இட்டு இனிமை சிந்தி வரும் இளந் தோற்றங்கள்....:

ஐயோ, முப்பத்தைந்து வயதான பிறகும் வெறுமையா?

''என்ன யோசனை துர்க்கா?''

யோசனையென்ன! திரும்பத் திரும்ப ஏக்கத்தின் தொலை வானத்தில் உருவின்றி மங்கிப் போகும் என்னைத் துடிப்புக்கள் தாம் அவள் கண்டது. காலக் கிரமத்தில் ஏக்கம் தளர்ந்து, மரத்து



விகாரமான உண்மை நீரலையின் ஓரங்களில் சமப்பட்டு விடும் என்று அவள் ஒரு காலத்தில் எண்ணியிருந்தது போல் நடக்கவில்லை. காட்சியில்தான் கண்களின் தாபம் அடங்க வேண்டும். இல்லாத போது, காணாத காட்சியின் கற்பனை எழிலில் கண்களுக்கு ஏக்கத்தைத் தவிர வேறு கதி இல்லை.

"என்ன துர்க்கா விஷயம்? ஏன் அப்படி வாடிப் போய் விட்டாய்?"

"கலா! நீ சொன்ன பேச்சு .... எனக்கு நிஜமாகவே முப்பத்தைந்துக்கு மேல் ஆகிறது! நாங்கள் பார்க்காத டாக்டரா? அவர், நான், இருவருமே சாதாரணமான, ஆரோக்கியமான, நல்ல தேகவாகு உள்ள பிறவிகள் தானும். எல்லாம் தலைவிதிதான் இப்படி இருக்கிறோம்."

கலா அவளை ஊடுருவிப் பார்த்தாள். கலங்கிய கண்களின் பின்னால் ஏதேதோ மர்ம சந்தர்ப்பங்களையும் பகல் சொப்பனங்களையும் கொண்டிருந்தது போல் துர்க்காவின் விழிகள் கலைந்துத் தொங்கின.

"தலைவிதி என்றுதான் நீயே சொல்கிறாயே துர்க்கா. அதற்கு மேல் அதைப் பற்றி நினைத்து மனசைக் கஷ்டப்படுத்திக் கொள்வதில் என்ன பிரயோஜனம்?"

"பிரயோஜனத்தைப் பார்த்துத்தானா ஒவ்வொரு காரியமும் செய்கிறோம் கலா? ஆசை எரிக்கிறது. தண்ணீர் தவிக்கிறது. இதெல்லாம் நம் உடம்பைக் கேட்டா நடக்கிறது? அந்த மாதிரிதான்."

துர்க்கா முகத்தை மூடிக் கொண்டாள். விரல்களின் இடுக்குகளில் சிவந்த தேகம் காந்த விளக்கொளியில் சலவைக் கல்லாய் வெளிறியிருந்தது.

இந்தக் குமுறலுக்கு என்ன பரிகாரம்? ஆணிலும் வெளியிலும் போல் அவள் உள்ளத்தில் ஓர் இயற்கையின் ஆதிக்கம். கண்ணீரைக் கேட்டுக் கொண்டா கனவு வருகிறது? அவள் குன்றி உட்கார்ந்த கோலம் கலாவுக்கு மிகுந்த வேதனையளித்தது.

"திருப்தியென்பது இல்லையானால் அப்புறம் வாழ்வே நாசம்தான் துர்க்கா. உனக்கு இருக்கும் நல்ல வாழ்வு...."

துர்க்கா தலைநிமிர்ந்து ஆவேசமாகப் பேசினாள். "நல்ல வாழ்வுதான். பணம் காசு எல்லாம் இருக்கின்றன. நல்ல குணமுள்ள புருஷன், சமூகத்தில் மதிப்பான உறவினர்கள், நண்பர்கள், கபிட்டாம்.... இதெல்லாம் மட்டும் இருந்தால் என்ன பயன் கலா? மனம் குளிர்ந்து விடுமா? வாழ்க்கை நிறைந்து விடுமா?" அவள் குரல் உயர்ந்தது. "எனக்குக் குழந்தை வேண்டும் கலா! என் குறை அப்போதுதான் தீரும். புரிகிறதா? எனக்குக் குழந்தை வேண்டும்!"

நீரைப் பொழிய முடியாமல் இடித்துக் கொண்டு புழுங்கி நிற்கும் மேகமாய் விளங்கினாள் அவள். பெண்மையின் பூரிப்புக் கெல்லாம் அடி இழையாக ஓடி ஆழத்திலுள்ள மகரந்தப் புதையல் போல் மையமாக நின்ற தாய்மையின் தத்தளிப்பில் இன்னும் விடுதலை ஏற்படவில்லை. கலாவுக்குப் புரிந்தது. அவள் புன்னகையுடன் தோழியின் கையைத் தடவிக் கொடுத்தாள்.

துர்க்காவுக்குச் சட்டென்று வெட்கமாய்ப் போய் விட்டது. இப்படி இன்னொருவருக் கெதிரே தன் உணர்ச்சிகளை அவள் இது வரை கொட்டியதில்லை. பேச்சை மாற்றினாள்.

"கடையிலே நீ பழமே எடுத்துக் கொள்ள வில்லையே கலா! இந்தா." கூடையிலிருந்து ஒரு சாத்துக்குடியை எடுத்துத் தோழியின் கையில் வைத்தாள்.

"இப்போது வேண்டாம் துர்க்கா."

"இன்று தளதளவென்று சாறு வழிய நுனி போட்டு பழம் நன்றாய் இருக்கிறது. இப்போது பார்க்காமல் விட்டால் நாளைக்கு அழுகிப்போய் அத்தனை கனவையும் வீணாய்த்தானே ஆய்விடும்? இந்தா...."

கலா அவளைப் பார்த்துக் கொண்டே பழத்தை வாங்கித் தோலை உரிக்கலானாள்.

"நீ இன்னும் எவ்வளவு நாட்கள் இருப்பாய் இங்கே?"

"அடுத்த மாதம் பத்தாம் தேதி திரும்பவும் பம்பாய்க்குப் போகிறேன். அதற்குள் இன்னொரு தரம் உன்னைப் பார்க்க வருகிறேன்...."

"வருவதானால் ஏழாம் தேதிக்குள் வா. அதற்கடுத்த நாள் நான் ஊரில் இருக்க மாட்டேன்."

"ஓஹோ! எங்கேயாவது பொழுது போக்காய்க் கிளம்புகிறாயா? உன் வீட்டுக்காரர் லீவு எடுத்திருக்கிறாரா?"

"ஆமாம்."

"பம்பாய்ப்பக்கம் வர வாய்ப்பு உண்டா?"

"இல்லை." துர்க்கா தலையை வேறுபுறம் திருப்பிக் கொண்டாள். கலாவுக்கு முதுகைக் காட்டியவாறு கூடைப் பழங்களில் ஒன்றை எடுத்துக் கையில் உருட்டிக் கொண்டே அலட்சியமாய்ச் சொல்வது போல் சொன்னாள். "நாங்கள் இரண்டு பேரும் தனுஷ்கோடிக்குப் போகிறோம்."

"தனுஷ்கோடியா?" கலா உடனே நாவைக் கடித்துக் கொண்டாள். வீணாய்த் துர்க்காவின் மனசைப் புண்படுத்த அவள் விரும்பவில்லை. ஆனாலும் உதடுகளின் உள் சதையில் ஓர் ஏளனக் கீற்று ஓடாமல் இல்லை. எத்தனை க்ஷேத்திராடனம்! எத்தனை சேது ஸ்நானம்! எத்தனை கோவில்களையும் அரச மரங்களையும் நாக மூர்த்திகளையும் பிரதட்சிணம் செய்தாகி விட்டது! காஞ்சிபுரம் சென்று தொட்டிலைத் தொட்டு வந்தது எத்தனை முறை! இருபத்தைந்தில் இருந்த அதே மலட்டுத்தன்மைதானா முப்பத்தைந்திலும்? அதேதான் இருக்குமா நாற்பத்தைந்திலும் ஒருகால்? மனிதன் வளருவது தான் எப்போது? துர்க்காவின் கறுத்த தலையிலிருந்து வகிட்டின் இருபுறமும் தொடங்கிக் காதை நோக்கி, தலைச்சாமான் கட்டும் வரிசையில், கறுப்பு நிறம் மங்கிப் பழுப்பின் பொன்னொளி அவ்வப்போது மின்னவிட்டது. இன்னும் ஓராண்டில் நரைக்க ஆரம்பித்து விடும். அப்போதும் இன்னொரு முறை சேது ஸ்நானம் செய்யப் போவாளோ?

"எவ்வளவு நாட்கள் அங்கே இருப்பாய், துர்க்கா?"

"ஒன்பதாம் தேதியும் பத்தாம் தேதியும்."

"பிரயாணி விடுதியிலே தானே?"

"ஆமாம். நீ ஏழாந் தேதிக்குள் ஒரு தடவை கட்டாயம் இங்கே வா, கலா!"

"ஓ! அதற்கென்ன, வருகிறேன்."

சிறிது நேரம் மௌனம்.

வலிகளிலிருந்தும் நோவுகளிலிருந்தும்

நிவாரணம் பெற

ஸாரிடான் 'ரோஷ்'

சாப்பிடுங்கள் !





ஒரே வில்லை போதும்
ஒரு வில்லை 13 நயா பைசா

வலிகளிலிருந்தும், நோவுகளிலிருந்தும், ஸாரிடான் அதி விரைவில் நிவாரணம் அளிக்கிறது. அதன் மும்முனை சக்தி வலியைப் போக்குகிறது, ஆசுவாசப்படுத்துகிறது, புத்துணர்ச்சி யூட்டுகிறது. தலைவலி, உடல்வலி, பல்வலி, ஜுரம் வரும் போலிருப்பது, சாதாரண உடல் கோளாறுகள், இவற்றிலிருந்து நிவாரணம் பெற ஸாரிடான் சாப்பிடுங்கள். அது துரிதமாக, நிச்சயமாக, கெடுதல் ஏதுமின்றி, வேலை செய்கிறது. பெரியவர்களுக்கு ஒரு வில்லை ஸாரிடான் ஒரு பூர்த்தியான டோஸ். குழந்தைகளுக்கு ¼ லிருந்து ½ வில்லை வரை கொடுக்கலாம்.

JWT/VT-3522

'ரோஷ்' தயாரிப்பு   ஸோல் டிஸ்ட்ரிபியூட்டர்கள் , வால்டாஸ் லிமிடெட்

"துர்க்கா! நீ சொன்னது ரொம்ப சரி. பழம் மிகவும் ருசியாகத்தான் இருக்கிறது."

துர்க்கா திரும்பி நின்றுகொண்டு புன்னகை செய்தாள்.

"நாலைக்கு இருந்தால் கெட்டுப் போயிருக்கும்." கலாவின் வாயிலும் புன்சிரிப்புத் தவழ்ந்தது.

நாளெல்லாம் ஒரே ஏக்கத்தில் நிறைந்து போனாலும் மிஞ்சுவது நிறைவா ஏக்கமா? சூனியத்தின் கனம் போன்றதொரு இருப்பா? ஏதும் புரியவில்லை. உடலில் ஒட்டிய நீர் வழிந்து ஓடியபோது ஒரு நிமிஷம் காலையும் வழிந்து விட்டதாக உணர்வு கிளர்ந்தது. சமாளித்துக் கொண்டு அவள் திரும்பியபோது ராமச்சந்திரன் அவள் தோளுக்குக் கீழ்க் கரத்தைப் பிடித்திருப்பது தெரிந்தது.

"என்ன இது துர்க்கா? எங்கே போறே? இத்தனை நாழிக்குச் சமுத்திரத்தில் உன்னை அடித்துக் கொண்டு போயிருக்கும், நான் பிடித்திரா விட்டால்" என்று மனைவியைக் கடிந்தான் அவன்.

துர்க்கா கண்கள் மேலிருந்து நீர் ஒழுகவே வழிந்தெறிந்தாள். கூடவே கண்களின் உள்ளிருந்த நீரும் சேர்ந்து கடல் நீரில் நெருப்பை மூட்டியது.

"அப்படி நான் போனாலும் தான் என்ன? மடியிலேயும் இடுப்பிலேயுமாய் அநாதையாய் நிறுத்திவிட்டுப் போகிறேனா?"

ராமச்சந்திரன் பதில் சொல்லவில்லை. அவளை ஒரு கையால் தாங்கிப் பற்றிக் கொண்டே ஸ்நானத்தை முடித்துக் கொண்டு கரைக்கு வந்தான்.

ஈரத் துணியில் தாபங்கள் தணல்களாய் ஜொலித்தன.

அன்றெல்லாம் மௌனத்திடை கடந்தது. ஒருவர் போல் மற்றவரின் பார்வை பட்டுத் தெறித்து வழிந்து போகும் தயக்கத்திலேயே உள்ளத்தின் உலகமெல்லாம் வெறிதாய்ப் போன தோல்வி படர்ந்தது. வெளியில் மலைப்பரப்பு. நெஞ்சினுள் மீளாத பாலை.

தெய்வங்களின் பெயர்களையெல்லாம் வரிசையாய் உதட்டுக்குள்ளாகவே ஜபித்தாள் அவள். அதன் மௌன உச்சரிப்பில் கழிந்த வருகை அனைவிழந்து இருந்தான் அவன்.

ஓடிப் போகும் காலத்தைக் கைநீட்டிப் பிடித்ததன் வெற்றிச் சின்னமொன்றைக் காட்ட வேண்டுமென்ற தாபமா அது? 'எங்களுக்குப் பின் இவர்களில் வாழ்வோம்' என்று தம் அமரத்தன்மையைக் காலனுக்குப் பறைசாற்ற விழைந்த ஏக்கமா? யாழைப் பெற்று இசையை நல்கும் கலைஞனைப் போல் அன்புத் தத்துவத்தின் அழுத்தத்தில் முனகும் நெஞ்சம் அந்த அன்பின் முழு வெளியீட்டைப் பிரதிஷ்டை செய்ய வெளியே ஓர் உருக் கோயிலைத் தேடும் துடிப்பா?

"எங்களுக்குத் தெய்வம் இன்னமும் குழந்தை தராவிட்டால்..." துர்க்கா வாக்கியத்தை முடிக்க முடியாமல் கேவினாள். என்னவென்று முடிப்பது? அந்தச் சூன்ய நிலையின் விளைவுகள் உணர்ச்சி எல்லையின் அப்பால், கற்பனையின் வரம்புக்குள் அகப்படாமல் உருவிழந்திருந்தன.

இயந்திரமாய் இருவரும் அடுத்த நாள் ராமேசுவரம் போய் வந்தார்கள். கோவில் சென்று, படங்களும் சொப்புகளுமாகத் திரும்பிய போது ஏதேதோ பேச்சில் எண்ணத்தை மறைக்கும் பரிதாப முயற்சி.

"சொப்புப் பெட்டி இத்தனை வேணுமா, துர்க்கா?"

"எல்லாருக்கும் கொடுக்க வேண்டாமா? இதுவரையில் கலாவுக்கு நான் கொடுத்ததே இல்லை. இப்போது அவளுக்காகவும் ஒன்று வாங்கியிருக்கிறேன்."

"அவள் ஊருக்குப் போகுமுன் இன்னொரு தடவை இங்கே வருவாளென்று சொன்னாயே, வந்தாளா?"

"இல்லை. ஏதோ சீக்கிரமாகவே பம்பாய்க்குப் புறப்பட்டு விட்டதாகச் சொல்லிக் கடிதம் போட்டிருந்தாள்."

"நம் பக்கத்து வீட்டுக்காரருக்கும் கொடுக்கலாம்."

துர்க்கா குன் கொட்டினாள். "அவர்களெல்லாம் இதைத்தான் மதிக்கப் போகிறார்களா என்ன?"

"ஏன் இல்லாமல்?"


"அடுக்கடுக்காய்ப் பூத்தொடுத்தாற்போல், ஐந்து பேரில்லையா அங்கே? தினம் விடியற்காலையில் அழுகைச் சத்தமும் தாலாட்டுக் கூரலும் வருகின்றனவே, நீங்கள் கேட்டதில்லையா?"

பேச்சு இடறியது. இதயத்தில் பலமாக அடிபட்டது.

"எதிர் வீட்டிலே கொடுக்கலாம். அவர்களும்......நம் மாதிரிதானே?"

"ஆமாம். இலையா? காயா? பிஞ்சா? மொட்டை மரம்."

சில்லென்று காற்று முகத்தில் வீசி உடல் இமைப்பில் சிலிர்ப்பது போல் அந்தப் பேச்சில் இருவரும் சிலிர்த்து அதிர்ந்தார்கள். தவிப்பின் விம்பமாக இருவரின் இதயங்களும் ஒன்று சேர்ந்து துடித்தன. இரு உள்ளங்களிலும் ஒரே கனம். 'அன்பு' என்ற



"ஏண்டா ராஜா! நீ 'பிஸினஸ்' பண்ணிண்டிருக்காயாமே! நன்னா நடக்கிறதா? வாங்கிண்டு போகிறவர்கள் திருப்பியா இருக்காளா?"

"வாங்கிண்டு போனதைத் திருப்பிக் கொடுக்காமல் இருக்கமாட்டார்கள்!"

"நன்னா இருக்கு போ! வாங்கிண்டு போனதைத் திருப்பிக் கொடுப்பது அது என்ன பிஸினஸ்டா?"

"நான் கடன் கொடுக்கும் 'லைப்ரரி' வைச்சு நடத்தறேன்!"

பெயரில் மலராக இருந்த பொருள் 'ஏக்கம்' என்ற வடிவு கொண்ட போது, மிஞ்சியது வாடிய இதழ்களின் கனைதான்.

"நினைத்து என்ன பயன் துர்க்கா, அழாதே."

"வாழ்வெல்லாம் இப்படியே போய் விடுமா? அல்லது தெய்வம் நமக்கு இனி மேலாவது கருணை காட்டுமா?"

எங்கோ தொலைவிலிருந்து மணி அடிக்கும் சத்தம் கேட்டது.

இருவருக்கும் உடல் புல்லரித்தது.

"அப்படியென்றால் .... நம் ஆசை நிறைவேறுமென்று அர்த்தம், இல்லையா?" அவள் உதடுகள் ஆவலில் படபடத்தன.

"ஆமாம். ஆமாம் துர்க்கா....அது என்ன சத்தம்?"

"அதுதான், இப்போது யார் வீட்டிலிருந்து மணி அடித்ததோ...."

"அதைச் சொல்லவில்லை. ஏதோ வண்டி வந்து நிற்கும் சத்தம்."

அவர்கள் வெளியே வந்து பார்த்த அதே சமயம் மோட்டாரும் நின்றது.

"யார் இங்கே வருவது இப்போ? அட..... கலா!" கலா இறங்கி உள்ளே வந்தாள்.

"என்ன கலா திடீரென்று?"

"பம்பாய்க்குப் போய் விட்டுத் திரும்பி விட்டேன் துர்க்கா. நீ இன்று இங்கே இருப்பாயென்று சொல்லியிருந்தாயல்லவா? உன்னைத் தேடித்தான் வந்தேன்."

"என்ன விஷயம்? இந்தா, முதலில் இப்படி உட்கார்ந்து இளைப்பாறு."

கலா உட்காரவில்லை. களைப்புற்றிருந்தாலும் அவள் முகம் தீவிரமாய் ஒளிர்ந்தது. தோழியையும் அவள் கணவனையும் மாறி மாறிப் பார்த்த அவள் விழிகள் சக்தியின் ஆதிக்கத்துடன் ஜொலித்தன.

"பட்டணத்துக்கு மறுபடியும் எப்போது வந்தாய்?"

"முந்தாநாள். இன்று இந்த ஊருக்கு வந்தேன். சிநேகிதர்கள் சில பேர்கள் இங்கே உண்டு. அவர்கள் காரில் இப்போதுதான் வந்திருக்கிறேன்."

"என்ன விஷயம் கலா?"

"சேது ஸ்நானம் ஆய்விட்டதா?"

"ம்." துர்க்காவின் முகத்தில் நூதன ஆர்வம் தெரிந்தது. "இந்தத் தடவை எங்கள் குறை நீங்குமென்று எனக்குத் தோன்றுகிறது."

"எனக்கும் அதேதான் தோன்றுகிறது" என்றாள் கலா மென்மையாக.

"அப்படியா கலா? நீதான் நல்ல சிநேகிதி. உன் வாக்குப் பலிக்கட்டும்."

"நீங்கள் இருவரும் சம்மதித்தால் அது இப்போதே பலிக்கும்."

அவர்கள் விழித்தார்கள். கலா அமைதியாய் மோட்டாரினருகில் சென்றாள். அதன் கதவைத் திறந்து உள்ளேயிருந்து எதையோ எடுத்துக் கொண்டு வந்தாள்.

துர்க்காவும் ராமச்சந்திரனும் மலைத்து நின்று விட்டார்கள். கலாவின் கையில்....

அதற்கு ஒரு வயதுதான் ஆகியிருக்கும். துணி மூட்டைக்குள் உடல் சோர்ந்தாற்போல் இருந்தது. நீண்ட பெரிய கண்கள் வெளிச்சத்தில் கூசியபோது அவற்றுள் மருட்சியும் பரிதாபமும் இமிறின. பசியில் ஒடுக்கம்—வாடிய மொட்டுப் போல் இயற்கையின் நியதியை மீறிய ஒரு பரிதாப முரண்.

"இது. இது..." துர்க்காவின் குரல் குழறியது. "இது ஏது குழந்தை? யாருடையது?"

"உங்கள் இரண்டு பேருடையதாகவே இருக்கலாம், நீங்கள் மனம் வைத்தால்."

உடல் கூசி அவர்கள் புதியதை வெறுத்துப் பின்வாங்கிய போதே ஏதோ எதிர்பார்த்ததை—ஜன்மாந்திரங்களின் வாக்குறுதியினூடே கிடைக்கும் பரிச்சயம் ஒன்றை — கண்டது போன்ற உணர்வு லயமும் குறுகுறுத்தது.

"என்ன?.......என்ன பேச்சு இது?" என்றான் ராமச்சந்திரன் முகச்சுளிப்போடு.

"சுவீகாரம் என்பதைப் பற்றி நீங்களெல்லாம் கேள்விப்பட்டதேயில்லையா?"

"நாங்கள் யாரையும் சுவீகாரம் செய்து கொள்ளக் கேட்கவில்லை."

"கேட்காமல் புதையல் கிடைத்தால் வேண்டாமென்று உதறி விடுவீர்களா?"

"உனக்கு எங்கேயிருந்தது கிடைத்தது இந்தக் குழந்தை?" என்றாள் துர்க்கா.

"அநாதை விடுதிக் குழந்தை இது."

"என்ன?"

"ஆமாம் துர்க்கா. பம்பாயில் அந்தமாதிரியான அநாதைக் குழந்தை விடுதி ஒன்றில் நான் வேலை பார்த்து வருகிறேன். கொஞ்ச நாட்களாய்ச் சமூக நலன் ஏஜன்ஸியைச் சேர்ந்தவள் நான் என்பது உனக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை."

"நீ போய்விடு கலா. அப்படி அதை வைத்துக் கொண்டு என் எதிரே நின்று கொண்டே இருக்காதே. அது நெருப்பு மாதிரி என்னைத் தகிக்கிறது" என்றாள் துர்க்கா ஆவேசமாக.

"இது நெருப்புத்தான் துர்க்கா. நெருப்புத் துண்டம் மாதிரி தூய்மையானது. ஆனால் இவர்கள் வேண்டாத குழந்தைகள், வகையில்லாத குழந்தைகள். விடுதிகள் இடம் கொடுக்கின்றன என்றாலும் பெற்றோர்களின் அன்புக்கு அது இணையாகுமா? அப்படிப் பெற்றோர்களை இவர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டுமென்பது தான் எங்கள் லட்சியம். எத்தனையோ பேர் குழந்தைகளுக்காக ஏங்கவில்லையா?"

"அதற்காக......அதற்காக...?"

"விடுதிகளுக்கு வரும் குழந்தைகளில் அநேகம் ரொம்பச் சீக்கிரமே இந்த உலகத்தை விட்டுப் போய் விடுகின்றன துர்க்கா. வயிற்றில் இருக்கும் போதே அவை மேல் கொடுமை. வெளிவந்த பிறகு நோஞ்சல் உடம்பு, நிராகரிப்பின் அழுத்தம், தாயன்புக்கு ஏக்கம். இதையெல்லாம் விடுதியின் பராமரிப்புக் கூட எதிர்த்துப் போராடுவது சுலபமாய் இல்லை. இந்தக் குழந்தைக்கு ஒன்னேகால் வயது ஆகிறதென்றால் நம்புவாயா நீ? இந்த கேஸ் ரொம்பக் கவலைக்கிடமாயிருக்கிறது. வளர்ப்புப் பெற்றோர்கள் இதற்கு ரொம்பவும் அவசியமென்று தோன்றியது. நீங்கள் இரண்டு பேரும் குழந்தைக்கு ஏங்கியது எனக்குத் தெரியுமாதலால் சீக்கிரமே பம்பாய்க்குப் போய் ஏஜென்ஸி அதிகாரிகளிடம் ஏற்பாடு செய்து இதை இங்கே எடுத்து வந்தேன்."

"நாங்கள் ஏற்றுக் கொள்வது நிச்சயமென்று நம்பி விட்டீர்களாக்கும்!" என்றார் ராமச்சந்திரன் ஏளனமாய்.

"இல்லை. கேட்டுப் பார்க்கலாம் என்று தான். உங்கள் பகுத்தறிவில் எனக்கு நம்பிக்கை இருந்தது."

"பகுத்தறிவா! ஏதோ அநாதைக் குழந்தையை நாங்கள் தூக்கிக் கொண்டு விடுவோமென்று நீங்கள் நினைத்திருந்தால் எங்களை முட்டாளென்று நினைத்ததாக அர்த்தம்."

"ஏன் குழந்தைக்காக ஏங்கும் தாய் தகப்பன் நீங்கள். தாய் தகப்பனுக்காக ஏங்கும் குழந்தை இது. கொடுப்பதற்கு உங்களிடம் அன்பு இருக்கிறது. இதற்கு அன்பு தேவையாயிருக்கிறது. 'ஸப்ளை அண்ட்' டிமாண்ட்' கொள்கை வியாபாரிகளுக்குக் கூடத் தெரியுமே. உள்ளமும் உணர்ச்சியும் பொங்கும் உங்களுக்குத்தானா தெரியவில்லை?"

ஸ்தம்பித்த அதிர்ச்சியில் சிறிது நேரம் அவர்களிடம் பேச்சு அசைவில்லை. அலை மோதும் உணர்ச்சிகளின் கவர்ச்சியும் அருவருப்பும் கொந்தளிக்க அவளையும் அவள் கையிலிருந்த கோர்வுத் திரளையும் பார்த்தார்கள் இருவரும்.

நிராகரிப்பின் பலி வேதனையில் முனகியது. கலா விரல் அழுத்தாமல் சோகப் பார்வையின் தாலாட்டில் அதை மேலும் மெதுவாய் இலேசாக ஆட்டிக் கொண்டிருந்தாள்.

"ஏதோ ஒரு குழந்தையின் .... எந்தப் பாவத்தின் சின்னமோ ...."

"போதும், நிறுத்துங்கள்." கலா கோபப் பார்த்து தலையை உயர்த்தினாள். "உங்களுக்கு வேண்டாமென்றால் சொல்லுங்கள். எடுத்துப் போய் விடுகிறேன். அதற்காகக் குழந்தையைத் திட்ட வேண்டாம்."

"பின்னே பாவமில்லாமல் இது...."

"இது ஓர் உயிர். முன்னேயும் பின்னேயும் மூதாதைகளையும் சந்ததிகளையும் விட்டு விட்டுப் பார்த்தால் இது ஒரு தனி உயிர், ஒரு முழுமை. இதற்குத் தேவைகள் உண்டு என்பது தெரியும். அந்த மதிப்பை அதற்குக் கொடுத்துத்தான் ஆக வேண்டும்." கலா பார்த்த பார்வையிலே அவர்கள் முன் அவள் விசுவரூபமெடுத்து விட்டாள். "அம்மா! மனம் குறுகலாயிருந்தால் உண்மை எப்படி நுழைய முடியும்."

துர்க்காவின் உடலெல்லாம் படபடத்துக் கொண்டிருந்தது. அந்த நோஞ்சான் பயல் அப்படி முனகிக் கொண்டே கழுத்தை அறுக்கிறது? பாலோ மோரோ கொடுக்கத் தோன்றத்தானும் ஒயும். இந்தச் சின்ன உடம்பின் உடம்பை மிஞ்சிக் கண்களும் கண்களின் மிரட்சி அச்சமுமா! சனியன். அங்கே பிறந்து கொண்டு இங்கே ஆளை எரிக்கிறது. தம்பதியின் பார்வைகள் சந்தித்துப் பின்னடைந்தன.

"என்ன சொல்கிறாய் துர்க்கா? வாசலில் மோட்டார் காத்திருக்கிறது. நான் மட்டும் போகவா, அல்லது நாம் எல்லோரும் போய்ச் சுவிகார விதிகளை யெல்லாம் நிறைவேற்றத் தொடங்கவா?"

"நீ .... வந்து .... நீ ...." துர்க்காவின் சொற்கள் இடறி இடறி விழுந்தன. "எனக்கு போதே, ஏதோ ஒரு அநாதைக் குழந்தையை, பாவக் குழந்தையையா நான்...."

"துர்க்கா! நீ என்னிடம் 'எனக்குக் குழந்தை வேண்டும்' என்று சொன்னாய். நானும் நம்பினேன். ஆனால் உனக்குக் குழந்தை வேண்டாம் என்பது இப்போது புரிகிறது. ஒரு குழந்தையின் நீ நிழலாய் வேண்டுமென்று எண்ணியிருந்தாய்." கலா அங்கிருந்து போக ஆரம்பித்தாள்.

"நில் கலா. என்ன சொல்கிறாய் நீ?"

"பின்னே என்ன? அன்பு செலுத்த ஏங்குவது மனித சுபாவம். அன்பு செலுத்தி நாம் நாம் உயர்ந்து போகிறோம். அந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய, உன் அன்பை ஏற்று உன்னை உயர்த்த, அன்புக்கு ஏங்கும் ஓர் உயிர் இதோ காத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் உனக்கு அது வேண்டாம். உன் வயிற்றிலே பிறக்கும் ஒரு குழந்தைதான் உனக்கு வேண்டும். அதில் உன்னையே நீ பார்க்க வேண்டும். உன் கணவனைப் பார்க்க வேண்டும். முன்னும் பின்னுமாய் மூதாதைகளையும் சந்ததிகளையும் அடையாளம் கண்டு உன் சொந்த உயிர் நீளுவதைப் பார்க்க வேண்டும். அன்பு செலுத்தும் போதும் உனக்குச் சுயநலம் போகவில்லையே!"

"கலா!" துர்க்கா கத்தினாள்.

"முப்பத்தைந்து வயதுக்கு மேலும் சேது ஸ்நானம் செய்ய வேண்டும். அரச மரத்தைச் சுற்ற வேண்டும். நாற்பது வயதில் பிறந்தால் அதுவும் சந்தோஷம்தான். அந்த வயதில் முதல் குழந்தை பிறப்பதிலுள்ள சிரமத்தையும் ஆபத்தையும் கூடப் பொருட்படுத்த மாட்டாய் நீ. ஏனென்றால் உனக்கு நீதான் வேண்டும், அன்பு வேண்டாம். உங்களுக்கெல்லாம் ஆண்டவன் ஏன் ஒரு உள்ளத்தைக் கொடுக்கிறான்? அதை மற்றவர்களுக்கு மறுக்கும் குற்றவாளிகள் நீங்கள்."

கலா கதவுவரையில் சென்று விட்டாள். தன்னையறியாமல் ராமச்சந்திரனும் துர்க்காவும் ஓர் அடி முன்னால் எடுத்து வைத்தார்கள். குறை தீர்க்கும் என்று வாழ்த்திய மணியோசையின் எதிரொலி நெஞ்சில் ஒலித்தது.

"கடைசியாய் ஒன்று சொல்கிறேன் துர்க்கா. அன்று நீ சொல்லவில்லை, பழத்தின் கூழைப் பற்றி? அன்பும் ஒரு பழம்தான். அதன் சுவையை நீ பயன்படுத்தா விட்டால் பழம் அழுகித்தான் போகும். உன் காதல் அன்பு மற்றவர்கள் மேல் வெறுப்பாய் மாற அதற்கு ரொம்ப நாட்கள் ஆகாது. நான் போய் வருகிறேன்."

அவள் காலைப் பெயர்த்து விட்டாள்.

"கலா!" இம்முறை இருவருமே சேர்ந்து கதறி விட்டார்கள்.

இருவருடன் சேர்ந்து இதயமும் கதறியது.

❋❋❋

தனுஷ்கோடிக்குக் கணவன் மனைவி இருவராய்ச் சென்றவர்கள் கையில் குழந்தையோடு திரும்பிய போது ஊரே வியந்தது. சேது ஸ்நானம் இத்தனை விரைவில் பலனளித்ததாக யாரும் அதற்கு முன்னால் கேள்விப்பட்டதில்லை.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

